கலாநிதி. க. கைலாசபதியின் முன்னுரையுடன்.

# ஒளி நமக்கு வேண்டும்

செ. யோகநாதன்

ஐந்து குறுநாவல்கள்



21. 7. 73

# ஒளி நமக்கு வேண்டும்

( குறுநாவல்கள் )

செ. யோகநாதன்.

மலர் பதிப்பகம்

21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

முதற்பதிப்பு: யூலை, 1973.
மலர் வெளியீடு: 1
உரிமைகள் ஆசிரியருடையவை.

அட்டைப்பட ஓவியங்கள்:
ரமணி. சௌ,

அச்சுப் பதிவு:
கத்தோலிக்க அச்சகம்,
18, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

விற்பனை உரிமை:
மலர் பதிப்பகம்,
21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

கதையில் குறிப்பிடும் பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே.

தனிப்பிரதி விலை: மூன்று ரூபா.

இலங்கைப் பல்கலைக் கழக வித்தியாலங்கார வளாக
சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர்

**கலாநிதி. க. கைலாசபதி அவர்கள்**

அளித்த

# முன்னுரை

மாணுக்கருடன் பழகி அவர்களுக்குப் படிப்பித்தல் ஓர் ஆசிரியனுக்கு மனமகிழ்ச்சி தருஞ் செயலாகும். அம்மாணுக்கரிற் சிலர் மாணவர்நிலை முடிந்தபின்னர் ஆசிரியனுக்கு நண்பர்களாகிப் பழகுவார்களாயின், அவ்வாசிரியன் பெறும் இன்பம் அளவிடற்கரியதாகும். ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் நற்பேறுகளில் இதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை.

முதலில் மாணவராயும் பின்னர் நண்பராயும் எனக்கு வாய்த்தவர்களில் ஒருவர் செ. யோகநாதன். அவ்விரு உரிமைகளுடனும் இப்பொழுது தனது குறுநாவல் தொகுதிக்கு முன்னுரை கேட்டிருக்கிருர். உரிமையும் கடமையும் பிரிக்கமுடியாதனவாயிற்றே. எனவே கடமையைச் செய்யும் வகையில் முன்னுரையை எழுதத் தொடங்கியதுமே முன்னினைவுகள் முந்திக்கொண்டு ஒடிவருகின்றன ....

1961 ஆம் ஆண்டு நான் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளனுய்ச் சேர்ந்து பேராதனைக்குப் போனேன். பத்திரிகையிலே பணிபுரிந்த அநுபவத்துடன் நான் அங்குச் சென்றமையால், வெகு விரைவிலேயே இலக்கிய ஆர்வமும் எழுத்தாற்றலும் கொண்டிருந்த மாணவர்களின் தொடர்பு எனக்கேற்பட்டது. அக்காலத்தில் எனக்குப் பரிச்சயமானவர்களில் ஒருவரே யோகநாதன். நவீன ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் கால ஒழுங்கில் வகுத்தமைக்கும் பொழுது, அறுபதுகளில் புதிய ஒரு தலைமுறை இலக்கிய உலகிற் பிரவேசித்ததை நாம் காண்கிறேம். அவ்வாறு பிரவேசித்தோருள் ஒரு பகுதியினர் பல்கலைக் கழகத்தில் பட்ட முன் மாணவராயிருந்தவர்கள். இலக்கியப் படைப்பிலே ஈடுபாடுடையோர் அத்தனைபேர் பல்கலைக் கழகத்திற் காணப்பட்டது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தாய்மொழி மூலம் உயர் கல்வியை (குறிப்பாகக் கலைத் துறைப் பாடங்களைக்) கற்கத் தொடங்கியிருந்த பட்டமுன் மாணுக்கர் கரைகடந்த உற்சாகத்துடனும் ஓரளவு நன்னம்பிக்கையுடனும் தமது சுற்றுஞ் சூழல்களையும் உலகத்தையும் நோக்கினர். தாய்மொழி மூலம் பட்டம் பெறுவதிலே தாம் முன்னோடிகள் என்ற பெருமிதமும் உள்ளூர அவர்களுக்கு இருந்தது. புவியியலையும் பொருளியலையும் மெய்யியலையும் வரலாற்றையும் தாய்மொழி மூலம் கற்ற அவர்களிற் சிலர், தமிழிலக்கியத்தைப் பாடமாக அன்றிப் பொழுதுபோக்காகவே கைக்கொண்டிருந்தனர். எனினும் அவர்களின் அந்தராத்மாவும், அவசங்களும் இலக்கிய உணர்வு வாயிலாகவே வெளிப்பட்டதை அவர்கள் அனைவரும் சரியாக அறிந்திருந்தார்களோ என்னவோ தெரியாது. பட்டம் பெறுவதற்காகத் தாம் படித்த வேறுசில பாடங்களைவிட, தமிழிலக்கியத்தில் பலர் கூடுதலான ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்ததையும் நான் அவதானித்தேன். அத்தகையோரில் ஒருவராக விளங்கினுர் யோகநாதன். (பட்டப் படிப்புக்கு அவர் தமிழை ஒரு பாடமாகக் கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன்)

பொதுவாக ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் அன்று நிலவிய வேகமும் விழிப்பும் இளம் உள்ளங்களை ஈர்த்தது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. அத்தகைய பாதிப்பின் பிரதிபலிப்பாக, பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் இலக்கியப் போட்டிகளை நடத்தியது. அவற்றிலே சிறுகதைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தையும், கவிதைப் போட்டியில் இரண்டாவது தானத்தைப் பெற்றுப் புத்தகப் பரிசிலையும் பெற்றவர் யோகநாதன். அக்காலத்திலேயே ஈழத்தின் ஞாயிறு இதழ்களிலும் மாத சஞ்சிகைகளிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவரைப் போலவே வேறு பல மாணவர்களும் இலட்சிய வீறுடனும் உணர்ச்சியூக்கத்துடனும் 'இலக்கிய வாழ்வு' நடத்தி வந்தனர்.

**போதுக்கும் பாட்டு**
**பொழுதெல்லாம் சங்கீதம்**
**யாதுக்கும் அஞ்சோம்**
**அவனியெலாம் எம்முடைமை,**
**சூதுக்கும் வஞ்சனைக்கும், சூட்சிக்கும்**
**மாந்தர் செயும்**
**வாதுக்கும் மாமருந்து**
**யாங்கள் செயும் வண்கவிதை**

என்று பாலபாரதி ச. து. சு. யோகியார் பாடியிருப்பது போலவே தமது கன்னிப்படைப்புக்களிற் கழிபெருங் காதல் கொண்டு, அவை பற்றிய மோகனக் கனவுகளில் மூழ்கியிருந்

தனர் அவர்கள். இலக்கியப் பிரச்சினைகள் பற்றிச் சர்ச்சை செய்வதற்காக அவர்கள் அடிக்கடி என்னிடம் வந்து போயினர். அப்பொழுதெல்லாம் அவர்களுடைய மனக்கிளர்ச்சியில் ஒரு பகுதியை நானும் சேர்ந்து பகிர்ந்துகொண்டேன்.

1962ஆம் ஆண்டின் தொடக்கத்திலே பல்கலைக்கழக மாணவர் சிலர் சேர்ந்து **கதைப்பூங்கா** என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டனர். ''**கதைப்பூங்கா** புதிய ஒரு சகாப்தத்தைத் தொடக்கி வைக்கின்றது; பல்கலைக்கழக இளம் எழுத்தாளர்களின் சிறு கதைகளைத் தொகுத்து வெளிட்ட பெருமை நம்முடையது'' என்று தொகுப்பாசிரியர்களால் அடக்கமுடியாத தன்முனைப்புணர்வுடன் குறிப்பிடப்பட்ட அத் தொகுதியிலே பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றன. அவற்றின் ஆசிரியரிற் பலர் இன்று பேர்பெற்ற எழுத்தாளராய்த் திகழ்கின்றனர்; பொறுப்புவாய்ந்த பதவிகளிலும் அமர்ந்திருக்கின்றனர். காலஞ்சென்ற செ. கதிர்காமநாதனும் முற்கூறிய பன்னிருவரில் ஒருவராயிருந்தார். **கதைப்பூங்கா** தொகுதியில் முதலாவதாய் அமைந்த கதை 'மலர்கள்' என்பது. யோகநாதன் அதனை எழுதியிருந்தார். (அவ்வேளையிலேயே 'மலர்ந்தது நெடுநிலா' என்னும் குறுநாவலையும் எழுதியிருந்தார். சிறுகதையிலும் பார்க்கக் குறுநாவலிலேயே யோகநாதனுக்கு ஈடுபாடு அதிகமாயிருந்து வந்துள்ளது) அத்தொகுதியில் இடம் பெற்றவர்களுள் க. குணராஜா, ஆ. இராஜகோபால், அ. கைலாசநாதன், அ. சண்முகதாஸ், செ. கதிர்காமநாதன், முத்து சிவஞானம், க. நவசோதி அகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடன் யோகநாதனும் அத்தொகுதியை வெளியிடும் முயற்சியில் அயராதுழைத்தவர்.

அந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் நான் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

> ''இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் யாவும் ஒரே தரத்தன என்றோ, ஒரே அளவின என்றோ கூறமுடியாது. பல்கலைக்கழக வாழ்க்கையையே பிரதிபலிக்கின்றன என்றும் சொல்வதற்கில்லை. எனினும் ஏதோவொரு மனோநிலை யாவற்றிற்கும் ஊடாக இழையோடுகிறது. வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களை முற்றாக உணர்ந்துகொள்ளாத ஒருவிதமான இலட்சிய மனோபாவம் கதைகளுக்கு உணர்வு ஒருமைப்பாட்டையளிக்கிறது''

அன்றைய நிலையிலே பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த இளம் எழுத்தாளருக்குப் பொதுவாகச் சிலபல பண்புகள் அமைந்திருந்தனவெனினும், சிலரின் தனிச்சிறப்பியல்புகளும் போக்குகளும் அவர்களது எழுத்துக்களில் ஆங்காங்குப் பளிச்சிட்டன. 'வளரும் காய் பிஞ்சிலே தெரியும்' என்னும் முதுமொழிக்கியைய, அப்பொழுதே சிலரை இனங்கண்டு

கொள்ளக்கூடியதாய் இருந்தது. இலக்கிய ஆர்வம் என்ற உந்துவேகம் பலருக்கும் பொதுவானதொன்றாக இருந்தபோதும் இலக்கியத்தின் பண்பு, பயன் இவைபற்றி மாறுபட்ட கருத்தும் கண்ணோட்டங்களும் அவர்களை வேறுபடுத்துவனவாய் இருந்தன. இலக்கியத்தை இன்பப் பொருளாகக் கருதியோர், இலக்கியத்தைப் பயன்பாட்டுப் பொருளாகக் கருதியோர் என இருபெரும் பிரிவினராய் எழுத்தாளரை வகுத்தல் சாலும். இப்பாகுபாடு பல்கலைக்கழகத்தில் இயங்கிய 'முதிரா' இளம் எழுத்தாளருக்கும் பொருத்திப் பார்க்கக் கூடியதாகவே இருந்தது.

எனக்கு அறிமுகமான நாட்களிலிருந்தே, யோகநாதன் இலக்கியத்தின் சமுதாயத் தோற்றத்திலும் பணியிலும் அசைக்கவியலாத நம்பிக்கை உடையவராய் இருந்து வந்திருக்கிறார்; முற்போக்கு அணியைச் சார்ந்து நின்றிருக்கிறார்; அதன் தூசிப் படைவீரர்களில் ஒருவராகவும் சில வேளைகளில் அமர் புரிந்திருக்கிறார். கடந்த பத்தாண்டுக் காலத்தில் முற்போக்கு இலக்கியத்துக்கு யோகநாதனின் பங்களிப்பு விதந்துரைக்கத்தக்கது. சோஷலிஸ தத்துவத்தைப் பொதுவாகவும் கலை இலக்கியத்திற்கு அதன் தொடர்பு பொருத்தப்பாடு ஆகியவற்றைச் சிறப்பாகவும் கற்றுச் சிந்தித்துத் தெளிந்து அவற்றைத் தனதாக்கிக் கொண்டுள்ள — விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய — தமிழ் எழுத்தாளர்களில் அவரும் ஒருவர். இச்செய்தியை நான் வற்புறுத்திக் கூறவேண்டிய அவசியமேயில்லை; அவரது சிறுகதைத் தொகுதி (யோகநாதன் கதைகள், 1964) மூலமாகவும் நூல் வடிவம் பெறாத பல படைப்புக்கள் மூலமாகவும் வாசகர்கள் நன்கறிந்திருப்பர். தத்துவத் தெளிவும் சிருஷ்டித்திறனும் கலையுணர்வும் ஒருங்கிணைந்து வைரம் பாய்ந்த எழுத்தாளர் அவர்.

பல்கலைக்கழகத்திற் படித்து எழுதிவந்தவர்களிற் பலர் அவ்வப்போது பல்கலைக்கழக வாழ்க்கையைத் தமது கதை, கவிதை ஆக்கத்திற்குப் பொருளாகக் கொண்டமை, எதிர்பார்க்கக் கூடியது ஒன்றே. அத்தகைய கதைகளைப் படைத்து வந்தவர்களிற் பெரும்பாலானோர் இருவகை நோக்குடையராகவே இருந்து வந்துள்ளனர். ஒரு பிரிவினர், பல்கலைக்கழக வாழ்க்கையில் அழுந்தாதவர்கள் போலச் சற்று விலகிநின்று கிண்டலும் கேலியும் நிறைந்த நையாண்டிச் சித்திரங்களைப் படைத்தனர். இவர்களை வெறுப்பு மனப்பான்மை உடையோர் எனலாம். மற்றைய பிரிவினர், பல்கலைக்கழக வாழ்க்கையில் மட்டுமீறி அமிழ்ந்தவர்கள் போலக் காதல், படிப்பு முதலியவற்றில் ஏற்பட்ட தோல்விகளின் அடிப்படையில் சோகச் சித்திரங்களைத் தீட்டினர். இவர்கள் துன்ப இயற்கைக் கோட்பாட்டாளர் எனலாம். இவ்விரு பிரிவினரின் மனப்போக்குகளும் அதீத இலட்சிய வாதத்தின் விகற்பங்களே.

இவ்விரு முனைகளிலும் சிக்கித் தவிக்காமல், பல்கலைக் கழகத்தைத் தேசிய - சமுதாய நிறுவனங்களில் ஒன்றாக நோக்கி, அதன் இயக்கப்பாட்டின் அடிப்படைகளை உய்த்துணர்ந்து, அதனை முழுமையாக அறிந்துகொள்ள முயன்றவர்கள் இரண்டொருவரேயாவர். அவர்களில் ஒருவர் யோகநாதன். விரக்தி, கசப்பு, தோல்வி, நம்பிக்கை வரட்சி முதலியன பல மாணவர்களுக்கு அநுபவங்களாக அமைந்தன என்பது உண்மையே. சிலர் அவ்வநுபவங்களுக்குப் பலியாகினர் என்பதும் உண்மையே. ஆனால் அவற்றைத் தனிப்பட்டோரின் உணர்ச்சிச் சுழிப்புக்களாக மாத்திரமன்றி, நாட்டின் வரலாற்று வளர்ச்சிப் படிநிலையில் தனிமனிதருக்கு ஏற்படும் அநுபவங்களாகவும் விளங்கிக் கொள்ளும் பக்குவம் – தத்துவார்த்தபோதம் - வெகு சிலருக்கே இருந்தது. அரசியல் அறிவு இதற்கு இன்றியமையாததாயிருந்தது.

பட்டமுன் மாணவர்களிற் சிலர் 'காதல்' செய்த காலத்து இன்ப துன்பங்களைக் கதைகளில் வடித்துவிட்டு, ''அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்'' எழுத்துலகினின்றும் விலகிக் கொண்டதையும் நான் கண்டிருக்கிறேன். பல்கலைக்கழக வாழ்க்கையில் காதல் மட்டுந்தான் கதைக்குரிய பொருள் என்று கருதுமளவிற்கு இவர்களது அநுபவ எல்லையும் அறிவெல்லைக்கோடும் வரையறுக்கப்பட்டிருந்தன. சிலருக்குக் கதையெழுதுவது என்பது யதார்த்த வாழ்க்கையின் சவால்களிலிருந்து தப்பியோடும் மார்க்கமாயிருந்தது. இவை எவ்வாறாயினும் பல்கலைக் கழக வாழ்வை மையமாகக் கொண்டு, கடந்த இரு தசாப்தத்திலே எழுதப்பட்டுள்ள கதைகளைப் படிக்கும்பொழுது அவற்றுள் மனநிறைவளிக்கும் வகையில் அமைந்தவை அருந்தலாகவே உள்ளன. எனினும், மாணவரது குறைபாடே இதற்குத் தனியொரு காரணம் என்றும் கூறிவிட இயலாது. நிலவிவந்த கல்வித் திட்டத்தினதும், பல்கலைக்கழக அமைப்பினதும், நிர்வாக முறையினதும் உள்ளார்ந்த குறைபாடும் இதற்கு ஏதுவாயிருந்தது.

தமிழ் மாணவரிற் பலர் தமது சோதரராகிய சிங்கள மாணவர்களோடு ஒன்றிணைந்து பொதுவான மாணவர் இயக்கங்களிற் கலந்து பங்குபற்றாமையும் மேற்குறிப்பிட்ட குறுகிய நோக்கிற்குத் துணைக்காரணமாய் அமைந்தது. இத்தகைய ஏதுக்களின் விளைவாகப் பல்கலைக்கழகத்தைத் தனித்த ஓர் உலகமாகக் கொண்டும், அதற்குரியனவாய்க் கருதப்படும் நடை, உடை, பாவனைகளை வரித்துக்கொண்டும் 'பேராதனை' என்ற செயற்கையான சூழலில் வந்து இருந்துவிட்டுப் போனவர்களே அனேகர். எழுத்தார்வம் கொண்டிருந்தவர்களும் இவ்வாழ்க்கை முறைக்கு விதிவிலக்கானவர் அல்லர்.

ஆனால் அரசியல் ஞானம் காரணமாக இன, மொழி வரம்புகளைக் கடந்து, பொதுவான மாணவர் நிறுவனங்களிலும் வாலிபர் இயக்கங்களிலும் இணைந்து செயற்பட்டு, வேற்றுமையில் ஒற்றுமைகாண விழைந்தோரில் ஒருவராக யோகநாதன் இருந்தமையாலேயே, இத்தொகுதியில் இடம்பெறும், 'இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்' போன்ற ஒரு கதையை எழுதும் அநுபவ வளம் அவருக்குக் கைகூடியது.

பல்கலைக் கழகமும் சமுதாயத்தின் ஒரு பகுதியேயாகும்; அதன் அங்கமேயாகும். வெளியே காணப்படும் பேதங்களும் பிரச்சினைகளும் மோதல்களும் முரண்பாடுகளும் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் இருக்கவே செய்யும். குறிப்பாக, வர்க்க பேதத்தின் வண்ண வேறுபாடுகள் மாணவர் மத்தியில் பல் வேறு விதங்களில் வெளிப்படுவதை உற்று நோக்குவோர் அறிந்து கொள்வர். அரசியல் போதமும் அவதானிப்பு ஆற்றலும் உள்ள மாணவன் பல்கலைக்கழகத்திலேயே வர்க்கப் பிரச்சினையின் தோற்றப்பாடுகள் அத்தனையையும் ஓர்ந்தறிந்து கொள்ளலாம். 'அண்டத்திற்கு உள்ளது பிண்டத்திற்கும் உண்டு' என்பதுபோல, சமுதாயப் பரப்பிற்காணும் சிக்கல்களைச் சிறிய அளவிலேனும் பல்கலைக் கழகத்திலும் கண்டு கொள்ளலாம்.

இளந்தலைமுறையினரின் பிரச்சினைகள் நாட்டையே எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில், இத்தொகுதியிலுள்ள முதலாவது குறுநாவல், அப்பிரச்சினைகள் சிலவற்றின் இயல்புகளைக் கோடிகாட்டி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு விளக்க உதவுவதாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கருத்துக்களும் உணர்வுகளும் – அவை சரியானவையோ, தவறானவையோ – எங்கிருந்து வருகின்றன, எவ்வாறு பிறக்கின்றன என்பதை நுட்பமாகச் சித்திரிப்பதாய் இக்குறுநாவல் அமைந்துள்ளது. மனப்போராட்டங்களின் மூலத்தைத் தொட்டுக் காட்டி விடுகிறார் ஆசிரியர், இக்குறுநாவலைப் படித்தபொழுது எனக்கு மு. தளையசிங்கம் எழுதிய 'தேடல்' என்ற (நீண்ட) சிறுகதையின் நினைவு வந்தது. அது மாறுபட்ட காட்சியை அளிப்பது. தளையசிங்கமும் பல்கலைக்கழக வாழ்வைக் கருவாய்க் கொண்டு சில கதைகள் (மாணவனாக இருந்த காலத்தும் பின்னரும்) எழுதினார். காதல், நட்பு, அரசியல் முதலியனவெல்லாம் வியர்த்தமானவை என்ற எண்ணமும் தொனியுமே 'தேடல்' என்ற கதையின் பொருளாகும். வாழ்க்கைக்குப் பொருளின்மையே அதன் அடிப்படைச் செய்தியாகும். யோகநாதனது கதை, சுமணா என்ற பாத்திரம் தற்கொலை செய்வதுடன் முடிகிறது. ஆயினும் அந்த அவல நிகழ்வு, காரண காரியத் தொடர்புடன் விவரிக்கப்பட்டு விளக்கமும் பெறுகிறது. தற்கொலைக்கு அங்கீகாரம் வழங்கவில்லை ஆசிரியர். அப்பாத்திரத்தின் தற்கொலை, தனிமனிதப் பிரச்சினை

யாகவும், அதற்குமப்பால் சமுதாயப் பிரச்சினையாக — அரசியல் பிரச்சினையாக உருமாற்றம் பெற்றுவிடுகிறது. தளையசிங்கத்தின் 'தேடல்' என்ற கதையில் வரும் பிரதான (தனிமனிதப்) பாத்திரம், எல்லைகடந்த வெறுப்புணர்ச்சிக்கு ஆளாகி 'ஒரு நாளும் தான் அங்கு (பல்கலைக்கழகத்தில்) வாழ்ந்ததாகவே தெரியாத'' அன்னியமயத்துடனும் மனமுறிவுடனும் வெளியேறுகிறது. வாழ்க்கையை எதிர்நோக்கும் எழுத்தாளனுக்கும் அதனின்றும் தப்பியோடி அல்லது அதனை நிராகரிக்கும் கலைஞனுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாட்டை இரு கதைகளையும் ஒப்பிட்டு ஆய்வோர் தெரிந்துகொள்வர்.

சமுதாயத்தின் மற்றுமோர் பகுதியில் அமைந்து கிடக்கின்ற வர்க்க பேதத்தையும் அதனடிப்படையில் மாந்தரின் நிலைப்பாடுகளும் உணர்ச்சிகளும் தோன்றி உயிர்ப்பதையும், உழைப்பாளிகளின் உள்ளார்ந்த பலத்தையும் நுணுக்கமாகவும் உருக்கமாகவும் வருணிக்கிறது இரண்டாவது குறுநாவல். தத்ரூபமான பாத்திர வார்ப்பு மெய்ம்மைக்கு மெருகூட்டுகிறது. முற்போக்கு எழுத்தாளரிற் சிலர், அழகியலைத் தனித்து நோக்கி அதற்குரிய இடத்தைக் குறைத்து மதிப்பிடும் ஒருபுடைச் சார்புடையவர் என்று 'நடுநிலை' விமர்சகர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. அச் சாட்டுரை சிறிதளவாவது சரியானதெனச் சொல்லத்தக்க வகையில், அரசியலை முதன்மைப்படுத்தும் சிற்சில எழுத்தாளர்களின் அசீரண ஆக்கங்களும் அவசரப் படைப்புக்களும் அமைந்து விடுகின்றன என்பதை ஒப்புக்கொள்வதில் தடையெதுவுமில்லை. கவின்பெறு கருத்தே கலைக்கு உயிர் என்ற அறிவுத் தெளிவுடையவர் யோகநாதன். பொருளின் பொலிவிற்கும் வலிமைக்கும் சொல்லாட்சியும் வடிவக் கட்டுறுதியும் வேண்டப்படுவன என்பதை விளங்கிக்கொண்டவர்.

அழகியல் பற்றிய விளக்கக்குறைபாடு ஒருபுறமிருக்க, படைப்பாற்றல் வாய்க்கப்பெற்ற எமது எழுத்தாளரிற் பலர் சமுதாயவியல் அறிவு போதியளவு இன்மையால், தனிமனிதரையும், தனிமனிதரின் தொகுதியாக சமுதாயத்தையும் ஒன்றற்கொன்று ஒவ்வா இரு துருவங்களாகக் கொண்டு மயங்குகின்றமையையும் காண்கின்றோம். சமுதாயத்தை விளித்து அடுக்கு வசனங்களை அவிழ்த்துவிடும் அரை வேக்காடான சொல்லலங்காரக் குவியல்களைப் படைப்போரையும் இப்பிரிவிலே சேர்த்துக் கொள்ளலாம். எமது இலக்கிய உலகில் இன்றும் கணிசமான அளவு காணப்படும் குறைபாடு இது. யதார்த்த இலக்கிய நெறியே இந்த இரண்டக நிலைக்கு விமோசனம் அளிக்க வல்லதாகும். யதார்த்த இலக்கிய நெறி குறிப்பிடத்தக்க அளவிற்கு யோகநாதனை வழி நடத்துவதனாலேயே அவரது ஆக்கங்கள் தனிச்சிறப்புடையனவாய் மிளிர்கின்றன. நவீன எழுத்தாளனுக்கு யதார்த்த இலக்கிய நெறியின் இன்றி

யமையாமை குறித்து பிரபல ஆங்கில இலக்கியத் திறனாய் வாளர் றேமன்ட் வில்லியம்ஸ் கூறியிருப்பதை மேற்கோள் காட்டி இம்முன்னுரையை முடிக்கலாம் என எண்ணுகிறேன்:

> ''எமது காலத்திலே உண்மையான ஆக்க முயற்சி, முழுமையான உறவுகளை உண்டாக்கும் போராட்டமாகும். இவ்வுறவு தனிமனித நிலையிலும், சமுதாய நிலையிலும் உள்ளது. இதனை விரிவுபடுத்துவதே சாதிக்க வேண்டிய காரியம். யதார்த்த இலக்கியம் இதற்குகந்த கட்டளைக் கல்; ஏனெனில் கருத்தும் உணர்ச்சியும், தனி மனிதனும் சமூகமும், மாற்றமும் உறுதிப்பாடும் மாறிமாறி ஒன்றையொன்று ஊடுருவிப் பாதிப்பதை அது நுணுக்கமாகக் காட்டுகிறது. பிளவுபட்டுக் கிடக்கும் எமது காலத்துக்கு இது இன்றியமையாதது. உயர்தரமான யதார்த்தப் படைப்பிலே சமுதாயம் அதற்காதாரமான தனி மனிதர் வாழ்க்கை வடிவத்திலும், தனிமனிதர்கள் உறவுகளின் தொகுதியான சமூக வடிவத்திலும் சித்திரிக்கப்படும் வாய்ப்பு உண்டாகிறது. இவ்விணைப்பும் அமைதியும் ஓர் எழுத்தாளனது மன விருப்பத்தாற் சாதிக்கக் கூடியன அல்ல. அவை கண்டறியப்படல் வேண்டும். அதற்குத் துணைசெய்வதுயதார்த்த நாவலின் இயல்பும் கட்டமைப்புமாகும். பழைய எளிமையான யதார்த்தம் காலகதியாகி விட்டது. ஏனெனில், உள்ளவாறே பார்த்தல் அதன் அடிப்படையாயிருந்தது அது இக்காலத்தில் இயலாது. இயற்கையான புறவுலகைப் பார்த்துக்கொண்டு காணுங் காட்சியைப் பதியலாம் என்று எண்ணிய நிலையில் அது ஏற்றதாயிருந்தது. இன்றோ நிலைமை வேறு. நாம் காணும் உலகம் எம்மால் ஆக்கப்படுவது என்னும் உணர்வு வளர்ந்துள்ளது. இவ்வுணர்வு சாத்வீகமான மானசீகக் காட்சி மட்டுமன்று. அதாவது செயலற்ற உணர்வு அன்று. மாறுகச் செயற் பண்பும் இயக்கமும் சார்ந்த நிலையாகும். அது மட்டுமன்றி, இவ்வுலகில் எவ்வாறு வாழ்வது என்னும் பிரச்சினை பற்றியது.''

கருத்துருவான இம் மேற்கோளுக்கு விளக்க உரை போன்று, இத்தொகுதி பிழம்புருவான கதைகளைக் கொண்டிலங்குகிறது என்று சொல்வது மிகையாகாது. கண்முன் காணும் உலகத்தைக் காய்தல் உவத்தல் இன்றிச் சித்திரிப்பது மட்டுமல்ல, உலகினை மாற்றி உன்னதமாகிய உறைவிடமாக்க உதவுவதும் உயரிய இலக்கியத்தின் ஓர் பணியாகும். அதுவும் ஒரு விதமான இலட்சியவாதந்தான். ஆனால் கற்பனையில் மட்டும் இன்பங்காணாது, கனவை நனவாக்கும் வீறுர்ந்த கர்ம யோகத்தின்பாற்பட்டது; அறத்தை நிலைநாட்டும் அருஞ்செயலின்பாற்பட்டது. இறுதியாய்வில் அதுவே கலை இலக்கியத்தின் முதலும் முடிவுமாகும். இம்மகோன்னத உணர்வின் சாயலை

இத்தொகுதியில் ஆங்காங்குக் காணலாம். இன்றைய நிலையில் அதுவே பெருஞ்சாதனையாகும்.

தன்னோடு எழுத்துலகில் அடியெடுத்து வைத்த மற்றுஞ் சிலரைப் போல, யோகநாதனும் இன்று இலங்கை நிர்வாக சேவையிற் சேர்ந்து பணியாற்றுகிருர். மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய காரியாதிகாரிப் பதவியிலும் இருக்கிருர். ஒரு காலத்தில் ஒரு இலங்கையர்கோன் அவ்வாறிருந்தார். இன்று பலர் அதிகாரிகளாயும் எழுத்தாளராயும் இருப்பதைக் காண்கிருேம். மனித வாழ்க்கையையும் அதன் எண்ணற்ற இயல்புகளேயும் நேரிற் கண்டறியும் சீரிய வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்துள்ளது. இதன் விளேவாக எமது இலக்கியம் புது வளமும் வனப்பும் பெறவேண்டும். என்னேப் போன்ற இலக்கிய அபிமானி விரும்புவதும் அதுவேயாகும். எத்தனேயோ நிலேகளிலிருந்தும் தளங்களிலிருந்தும் படிகளிலிருந்தும் வாழ்க்கையின் வரம்பற்ற கோலங்களேக் கண்டு மேலும் பல கதைகளேயும் கவிதைகளேயும் யோகநாதன் படைக்கவேண்டும்.

## நானும்,
## இந்தக் கதைகளும்

1963 — 72ஆம் ஆண்டுகளுக்கிடையே வெளியாகிய எனது ஐந்து நெடுங்கதைகள் இத்தொகுதியிலே இடம் பெற்றுள்ளன. இந்தக் கதைகளைப் பத்திரிகைகள் வெளியிட்டபோது சில வசனங்களோ, வரிகளோ, பந்திகளோ விடுபட்டிருந்தன. நான் எப்படி எழுதியிருந்தேனே அதை அப்படியே இந்தத் தொகுதியில் வாசிக்கின்றபோது எனக்கு மிகவும் மனத்திருப்தி ஏற்படுகின்றது. வாசகர்களும் இதனை உணர்வார்களென நம்புகிறேன்.

என்னுடைய கதைகளைப்பற்றி இங்கே நான் கூறவரவில்லை. அவை வெளியான போது பலரால் வாசிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டன. விமர்சனங்களை நான் வரவேற்கிறவன். அவை என்னை வளர்க்க உதவுகின்றன என்பதற்காக மட்டுமல்லாது, என்னை விமர்சிக்கிறவர்கள் சிலர், எவ்வளவு அறியாமையோடும், புகைச்சல்களோடும் பொருமித்திரிகின்றார்கள் என்பதனை அறிந்து சிரிக்கவும் நான் இந்த விமர்சனங்களை வரவேற்கிறவன்.

1964ல் எனது சிறுகதைத் தொகுதி 'யோக நாதன் கதைகள்' வெளியாயிற்று. பத்து ஆண்டுகால இடைவெளிக்குப்பின் 'ஒளி நமக்கு வேண்டும்' வெளியாகியுள்ளது. இவை இரண்டுக்குமிடையே கூட்டாகச் சேர்ந்து வெளியான தொகுதிகளில் என்னுடைய கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கதைகளினூடாக என்னுடைய வளர்ச்சியை நான் அவதானிக்கின்றேன். தேசத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் மாற்றங்களின் தாக்கங்களிற்கு எனது கதைகள் உட்பட்டிருக்கின்றன. இது நியதி.

எனது கதைகளைப் பற்றிய பொதுவான விமர்சனம் என்ன தெரியுமா? எனது கதைகளில் வருகின்ற பாத்திரங்கள் அதிகமாகப் பேசுகின்றனவாம்; தீவிரத் தன்மையுள்ளனவாம்; முரண்டுகின்றனவாம். இந்தக் கூற்றுக்களை நான் உண்மையானவையென்று ஏற்றுக்

கொள்வதோடு இவற்றையே மேலும் நான் தொடர்ந்து செய்ய விரும்புகின்றேன் என்பதையும் கூறிக்கொள்ளு கின்றேன். என்னுடைய கதைகளைப் பற்றி இந்த முடி விற்கு வந்தவர்கள் உங்களுடைய நான்கு அறைச் சுவர்களுக்குள் இருக்காமல் வெளியே இறங்கி வந்து பாருங்கள் நீங்கள் போகுமிடங்களில் எங்கே பேச் சுக் குரல்கள் இல்லாதிருக்கின்றன? உலகத்தின் பெரும் பகுதியில் வறுமை, சுரண்டல், ஒடுக்குமுறை, புனித மான முகமூடிகளுக்குள் நடைபெறுகின்ற தகிடுதத்தங் கள், முன்னேற்றங்களைக் கவிழ்த்து ஒழிப்பதற்கான நாசவேலைகள், வேலையில்லாத் திண்டாட்டம், இளமை யின் நம்பிக்கைத் திணறல்கள் இவைபற்றி மெல்ல வும், ஓங்கியும், கிளர்ந்தும் எழுகின்ற குரல்களை நீங் கள் காதுகள் அதிரக் கேட்கவில்லையா? இவற்றிற்கு எதிராக மனிதர்கள் முரண்படுவதனை நீங்கள் அறிய வில்லையா? நீங்கள் இவற்றைக் காண்கிறீர்கள்; அறி கின்றீர்கள். நானும் அப்படித்தான். நான் மனித குலத்தை நேசிக்கின்றேன். மனிதனைவிட உன்னத மான, அற்புதமான வேறெதுவுமே இல்லையென்ற சக்திமிக்க கருத்தினை நம்புகின்றேன். என்பதால்தான் என்னுடைய கதைகளும் மனிதனின் இந்த இயல்புகளை, உணர்வுகளை, வேதனைக் குமுறல்களைக்கூறி அவற்றிற் கான, அவை தீர்வதற்கான விஞ்ஞான பூர்வமான வழிவகைகளையும் தெரியவைக்கின்றன. இத்தகைய கருத்துக்கள் பழமைப் பிடிவாதங்களில் ஊறி நிற்கின் றவர்களை மிக வேதனைப்படுத்தும் என்பதனையும், அதுவே எனது எழுத்துக்களின் வெற்றி என்பதனை யும் நான் அறிவேன். மாற்றமும், முன்னேற்றமும் உலகின் வரலாறு. இதை யாருமே தடைசெய்ய முடி யாது. காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டார நாயக்கா அவர்கள் கூறியதுபோல 'ஓடி வருகின்ற ஆற் றினை யாருமே தடுத்து நிறுத்திவிட முடியாது.

இந்தக்கதைகள் எழுதப்பட்டதின் பின்னர், அவைவிவாதித்த பல பிரச்சினைகளின் போக்கில் பெரு மாறுதல்கள், மகிழ்ச்சிக்குரிய மாறுதல்கள் நடை பெற்றிருக்கின்றன என்பதனை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். குறிப்பாகக் கல்வித் துறையில் மிகவும் வரவேற்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தேச நிர்மாணம், வாழ்க்கையோடு ஒட்டி மனித முன்னேற்றத்திற்கு மாணவனைத்தயாராக்கும் கல்வி அமைப்பு ஆகியவை புதிய கல்விக் கொள்கைகளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நெடுங்கதைகளின் இத்தொகுதிக்கு 'ஒளி நமக்கு வேண்டும்' என்று நான் தலையங்கமிட்டிருக்

கின்ற போதிலும் இத்தொகுதியுள் அப்படியொரு கதையை நீங்கள் காணமாட்டீர்கள். என்னுடைய இந்தக் கதைகளுக்கெல்லாம் பொதுவான தலையங்கம் இது. இன்றைய மனித குலத்தின் குரலும் என் கதைகளின் தலையங்கமல்லவா?

இந்தக் கதைகளில் ஒன்றான 'தோழமையென்றொரு சொல்' உலக மொழிகளில் வெளியிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ச் சிறுகதைகளில் ஒன்றாகும். இதைத்தவிர, 'இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்' என்ற கதை நமது சகோதர மொழியான சிங்களத்திலும் வெளியாகவுள்ளது.

அச்சுக் கூலியும், தாள் விலையும் மிக உச்சமாக இருக்கின்ற இவ்வேளையில் நான் ஒரு புத்தகத்தை வெளியிடக்கனவிலே கூடக் கருதியிருந்ததில்லை. கனவிலே கூடக் கருதாத விஷயத்தை உண்மையாக்கியவன் இங்கே தன் பெயரைக் குறிப்பிட விரும்பாத என்னுடைய பிரிய நண்பன். இந்தக் கதைகளை நான் எழுதினேன் என்பதைத் தவிர இத் தொகுதிக்கும் எனக்கும் வேறு சம்பந்தம் எதுவுமே கிடையாது.

அவனைவிட, இத்தொகுதியை மிகச்சில தினங்களுக்குள் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய இருவரை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒருவர் திரு. முகமதுசமீம். கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப் பாளர். நிறைந்த வேலைப் பளுவுகளினிடையேயும் படிப்பதற்கும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்கும் முன்னுரிமை கொடுக்கும் என் இனிய நண்பர் சமீம் இத்தொகுதியை நான் சிரமமின்றி வெளியிட உதவியவர். மற்றவர் பெயருக்கு அர்த்தமான 'அன்புமணி'. புத்தக அமைப்பு, வெளியீட்டிற்குத் தானே முன்னின்று வழிசொன்னவர்; செய்தவர். 'மலர்' இதழின் ஆசிரியர். இத்தொகுதியை மலர் பதிப்பகத்தின் முதற் பிரசுரமாக வெளியிட்டிருப்பவர்.

இந்தத் தொகுதி மிகச்சில தினங்களிலேயே அச்சிட்டு முடிந்துவிட்டது ஒரு அதிசயம். இந்த அதிசயத்தை செய்து முடித்தவர்கள் கத்தோலிக்க அச்சகத்தினர்.

இவர்கள் எல்லோருக்கும் என் நன்றிகள் என்றுமே உரியவை.

காரியாதிகாரி அலுவலகம், செ. யோகநாதன்
வாகரை.

தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில்
புதிய ஒளியையும்,
புதிய உயிரையும்
பாய்ச்சுகின்ற
**கலாநிதி க. கைலாசபதி அவர்கட்கு**
இந்தத் தொகுதி சமர்ப்பணம்.

❋ இருபது வருஷங்களும்
மூன்று ஆசைகளும். 1

❋ தோழமையென்றொரு
சொல். 25

❋ ஜானகி. 42

❋ அந்தநாள் வர
வேண்டும். 53

❋ திருச்சிற்றம்பலம். 63


ஆகிய ஐந்து குறு
நாவல்களின் தொகுதி.

# இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்

குளகுளவென்று சத்தமிட்டு ஓடுகின்ற மகாவலிகங்கை நதியின் தீரத்திலே சிந்தனையே நிறைந்த முகத்தோடு நின்ற சுமணதாசாவை நான் முதல்முதலிற் சந்தித்தேன். வளைந்து முறிந்திருந்த பச்சை மூங்கிலருகேயுள்ள சிறு கருங்கல்லடியில் அவன் அடிக்கடி வந்திருப்பதனை அவதானித்திருந்த நான் அவனைப் பற்றி என் மற்றோர் சிங்கள நண்பனான தர்மபாலாவிடம் விசாரித்தேன். ''எதிலும் தனித்து யோசித்து, தனக்கு மட்டுமே துயரங்கள் உள்ளன என நினைத்து, ஓட்டிற்குள் ஒடுங்கி வாழும் ஆமை போல சுயவாழ்வுச் சிந்தனைக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டு வாழ்பவன்'' என்று எனக்குச் சுமணதாசாவைப் பற்றி முன்னதாகவே சொல்லி வைத்துவிட்டு தர்மபாலா எனக்குச் சுமணதாசாவை அறிமுகம் செய்துவைத்தான். நான் அடிக்கடி சுமணதாசாவைச் சந்திக்கச் சந்தர்ப்பங்கள் இருந்தன. எனவே நான் பல்கலைக் கழகத்திற்குப் படிக்கப்போன ஆறுவது மாதத்துக்குள்ளேயே சுமணதாசாவோடு நெருங்கிய சினேகிதனாகி விட்டேன். சுமணதாசாவும் நானும் ஆங்கிலத்தையே எங்கள் இருவருக்குமிடையே இணைப்பு மொழியாகக்கொண்டிருந்தோம்.

மகாவலிகங்கையினருகே தழைத்துச் செழித்து வளர்ந்திருக்கும் பசிய மூங்கில்கள் நுனிவளைந்து மகாவலி நதியின் முதுகினைத் தொட்டு விளையாடுகின்ற அழகினைப் பார்த்துப் பொழுதைக் கழிப்பதற்கு வருபவர்களில் ஒருவனாகத்தான் அவன் மகாவலிகங்கைக் கரையோரமாக உலவி வருகின்றான் என ஆரம்ப நாட்களில் நான் நினைத்திருந்தேன்.

பல்கலைக்கழகத்திற் போய்ச் சேர்ந்த புதிதில் பேராதனையின் இயற்கைச் சுற்றாடல் எனக்கு வெறும் கற்பனை மயக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. தென்னை மரங்களும், நீலக்கடலும், கடல்நாரைகளும், மாலையில் தகதகக்கும் தங்கச் சூரியனும், பச்சைப் பூவரசமரங்களுமே இனிமை தந்த என் மனதிற்கு குளுமையான மலைகளும், நதியும், வண்ணமலர்களும் பரவசமேற்படுத்தியதில் வியப்பிருக்கவில்லை. கொழும்புத் துறை என்ற சிற்றூரை விட்டு முதன்முறையாக இப்போதுதான் நான் வெளியே வந்திருக்கின்றமையால் இந்த உணர்வுகள் என்னிலே மிகவும் மிகைப்பட்டு என்னுள்ளேயே என்னை ஒரு கவிஞனாக நான் அசட்டுப்பாவனை செய்து கொண்டேன். மஞ்சளும் நீலமுமாய் சூரியகாந்தியும், காட்டுப் பூக்களும் அலைநுரையெனப் பொங்கி மண்டிக்கிடப்பது பார்வைக்கு மிகவும் அழகு

தான். ஆனுல் என்னுடைய மனநிலையை சுமணதாசாவில் ஏற்றிப் பார்த்தது எவ்வளவு தவறென்பதைத் தொலைவிலே கருங்கல் உடைத்துக் கேட்கின்ற ''ஞெங்... ஞெங்... ஞெக்'' என்ற ஒலியின் ஊடே, அவன் தன்னுடைய கதையினை ஓரளவே சொன்ன நிலவு முழுவட்டமாக உதயமாகிப் பால் நிலாச் சொரிய ஆரம்பித்த விசாக நாளொன்றின்போது நான் உணர்ந்துகொண்டேன். அந்த மனே நிலையோடுதான் அவனேடு அன்றிலிருந்து நட்புக்கொள்ள விரும்பினேன் நான்.

செழுமையாக இதழ் மலர்ந்திருக்கும் சூரியகாந்திப் பூப்போல புன்னகையினுல் விளங்கியிருந்த அவனுடைய முகம், அவன் இதயந் திறந்து தன் கதையைச் சொன்ன நிமிஷங்களிலே வதங்கி வாடியதைக் கண்ணுற்ற போதில் எனது மனத்திலும் விசாரம் செறிந்து கனத்ததாய் நான் உணர்ந்தேன்.

நாங்கள் இருவரும் ஒரே விடுதி மண்டபத்திலேயே தங்கிப் படித்து வந்தோம். சுமணதாசா, நான் இருக்கும் அறைக்கு இரண்டு அறைகள் தள்ளியிருந்தவனுதலால் எங்களிருவருக்கும் அடிக்கடி சந்தித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்களிருந்தன. அவனுடைய நடையுடைபாவனை, செயல்கள் யாவையும் நான் நன்கு அவதானித்துக்கொள்ளக்கூடியதாயிருந்தது. நான் அறியத்தக்கதாக என்றைக்கும் அவன் காக்கிக் காற்சட்டைதான் அணிந்திருக்கின்ருன். ஒரே விதமாக நான்கு சேர்ட்டுக்களையே அவன் மாற்றிமாற்றிப் போடுவான். அவனுடைய இந்த நிலைமையினை எண்ணிப் பரிதாபப்படத் தோன்றிய என்மனம் ஒரு முறையோடேயே அந்த எண்ணத்தினை விட்டொழித்தது. என் மீதும் எனக்கோர் கசப்பேற்பட்டு, பிறகு நட்பு அளித்த சிந்தனைத் தெளிவினுல் அந்த மயக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவன் நான். அனுபவங்கள்தான் நல்ல ஆசான்கள்.

நான் ஒரு பலசரக்குக் கடைக்காரனின் மகன். என் சின்னஞ்சிறிய கிராமத்திலே எனது தகப்பனுர் சிறு கடையொன்றை வைத்து நடத்துகின்ருர். தினசரி ஐம்பது ரூபா வரையில் கடையில் விற்பனை நடக்கும். அவ்வளவுதான். அத்தோடு வழிவழியாக வந்து, எத்தனையோ பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டும் விற்பனையாகாத சிறிய தென்னந்தோப்பு ஒன்றும் எங்களுக்குச் சொந்தமாக இருந்தது. இத்தகைய மட்டமான வருவாயுள்ள குடும்பத்திலே பிறந்த என் சகோதரர்கள் எல்லோருக்கும் என்னைப் போலப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. என்னுடைய தகப்பனுருக்கு என்னில், என் எதிர்காலத்தில் மிக நம்பிக்கையிருந்ததாலேயே எவ்விதமான குறுக்கீடுமின்றி நான் பள்ளிக்கூடம் போய்வர முடிந்தது. படிப்பொன்றையே தியானமாகவும், நித்தியதவமாகவும் கருதி, சுகம் அனுபவிக்க ஆசைகளிருந்தும் அனுபவிக்க வாய்ப்பில்லாத பிஞ்சுப் பருவத்தையெல்லாம் எதிர்காலம் பற்றிய பூங்கனவுகளிலேயே செலுத்திக் கடும் படிப்பினுள் என்னை ஆழ அழுத்திக் கொண்டமையினுல்தான் பல்கலைக் கழகத்திற்குப் படிக்க வரும் வாய்ப்பினைப் பெற்றவன் நான். பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசப் படிப்பே நடைபெறுகின்றது என்ற கோஷத்தையும், அதற்கு மாருன நடைமுறையையும் கண்டு கேட்டு அனுபவித்து இளவயதிலேயே மனங்கசந்து போனவன் நான்.

கடையிலே பொருட்களை வாங்கிப்போட்டு விற்பனை செய்வதற்காக என் தகப்பனார் சிறுகச்சிறுகச் சேமித்து வைத்திருந்த பணம், பல தடவை என் அழுகை கலந்த பிடிவாதங்களால் தவணைப் பணங்களாயும், பள்ளிக் கூட நிதியென்ற பெயரிலும் பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்கின்றது. இப்படியான மனதினை நெகிழவைக்கின்ற நிலைமைகளில் எல்லாம் எனது துளிரான இதயம் வெதும்பிச் சாம்பி அழுங்கி மௌனமாக அழுததுண்டு. பள்ளிக்கூடத்திலே என்னோடு சீதாராமன் என்னும் பணக்கார மாணவன் படித்தான். அவனுடைய தகப்பனார் அரசாங்க அலுவலகமொன்றில் உயர் பதவியிலிருந்தார். சீதாராமன் காரிலேயே பள்ளிக்கூடம் வருவான். பள் ளிக்கூடம் முடிவடைந்து அவன் வீட்டிற்குப் போய் பதினைந்து நிமிஷங்க ளால் அவனுக்கு ரியூஷன் கொடுக்க ஆசிரியர் வந்துவிடுவார். இப்படிச் சீதாராமனை கசப்புணர்வு கலந்த கௌரவத்தோடு எல்லா மாணவர் களுக்கும் அடிக்கடி சொல்லுவதுண்டு. நானும் சீதாராமனும் பரீட்சை யினை ஒன்றாகத்தான் எழுதினோம்.

ஒன்பது மணிக்குத் தொடங்கும் பரீட்சைக்காக நான் வேர்த்து, வியர்வை பொங்க அவசரமாய் வந்து பள்ளிக்கூடப் படிகளில் ஏறுகின்ற போது, சீதாராமன் மிகக் குளிர்மையாக வந்து பள்ளிக்கூட வாசலில் காரிலிருந்து இறங்குவான். மத்தியான வேளையில் காரிலேயே சொகுசாக அவன் வீட்டிற்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருகின்றபோது... நான்? நானோ என்னுடைய தாயார் மிகப் பக்குவமாகக் கட்டித்தந்த காய்ந்த பிட்டை வெறுஞ் சம்பலோடு மட்டும் குழைத்து விக்கிவிக்கித் தின்பேன். கானல் தரை நீரை உறுஞ்சுவதுபோலத் தின்றுகளிக்கும் என் இளவயிறு என்றும் நிறைவோடு நிரம்பியதை நான் அந்நாட்களில் அறிந்ததில்லை. எனினும் அவையெல்லாம் எனக்குக் குறைகளாயிருந்து மனதினை நெருடாத சம்பவங்களாகும். ஏனெனில் என்னுடைய தவம் படிப்பாகவே, படிப்ப ஒன்றாகவே இருந்தது. பல்கலைக்கழகத்திற்கான புகுமுகப் பரீட்சை முடிவு கள் வெளியாகின. புகுமுகத்தேர்வில் சீதாராமன் வெற்றி பெறவில்லை. அவனுடைய படிப்பிற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அள்ளிச் சிதறி எறியத்தயாராயிருந்த அவனுடைய தகப்பனார் இலங்கையின் கல்வி யமைப்பை வாய்க்கு வந்தவாறு ஆங்கிலத் தூஷணங்களில் திட்டிக் கொண்டே. சீதாராமனை மேற்படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்புவதற் கான திட்டங்களை மேற்கொண்டார். எனது நிலையோ சொல்லவோதேவை யில்லை: புகுமுகத்தேர்வில் நான் வெற்றிபெற்ற செய்தியை அறிந்த என் குடும்பத்தினரின் முகத்தில் பிரகாசம் துலங்கி அவர்களின் செய்கைகளில் களிப்புத் துள்ளியது. நான் ஒரு உயர் பதவிக்கு நியமிக்கப்படப் போகி றேன் என்ற பெருமிதம் அவர்களின் புன்னகையிலே ததும்பி நின்றதை அவதானித்த அப்போது எனக்கும் மனம் லேசான கர்வ முற்றுக்களிப் படையவே செய்தது. என் திறமையைப் பாராட்டி நானே என் முதுகில் செல்லமாகத் தட்டிக்கொண்டேன்.

எனது தகப்பனார் பரபரப்பான சம்பவங்களினால் உணர்ச்சி வசப் படாத அழுத்தமான பேர்வழி. கடவுள் நம்பிக்கையுள்ள வைதீகப் போக்கு நிறைந்த யதார்த்தவாதி. ஒரு மணித்தியாலக் கலகலப்புகளின் பிறகு, என் தகப்பனார் அமைதியே வடிவமான என்னுடைய தாயாரைக்

கூப்பிட்டு என்னை எப்படியான ஆதாரத்தோடு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிப் படிப்பிப்பது என்று கேட்டுவிட்டு நீண்ட நேரமாக மௌனமாக இருந்து யோசித்தார். பலசரக்குக்கடை வியாபாரியொருவனுக்கு இது தன்னை மீறிய சுமை என்பதனை, தாங்க முடியாத பொறுப்பே என்பதனை எனது தகப்பனர் அறிந்திருந்த போதும், அவருடைய ஜாதகங்கள் பார்க்கின்ற சோதிட நண்பர் காசிப்பிள்ளை என்னுடைய தகப்பனரிடம் என்னைத் தொடர்ந்து படிப்பிக்கும்படி ஓயாது தூண்டிக்கொண்டிருந்தார். எனது ஜாதகம் மிகவும் விசேஷமானதாம். அரசாங்கப் பதவி சொல்லி வைத்துக் கிடைக்குமாம். பிரகாசமான இத்தகையதொரு எதிர்காலம் எனக்காகவே காத்திருப்பதாக காசிப்பிள்ளையர் அடிக்கடி என் தகப்பனருக்கு என்னைக் காணும்போதெல்லாம் சொல்லக்கேட்டு நானும் புளகாங்கிதம் அடைந்திருக்கின்றேன். நான் அரசாங்கத்திலே உயர்பதவி வகித்து, பலரை நிர்வகித்துப் பெருமையோடு திகழ்வேன் என்று சொன்ன சோதிடரின் சொற்களை என்னுடைய தகப்பனர் சத்தியவாக்காக ஏற்றுக் கொண்டுவிட்டார். அக்கூற்றினை நம்பி, எங்களுக்கிருந்த நம்பிக்கையின் சிறுநிழலான தென்னந்தோப்பினை என்னுடைய தகப்பனர் ஈட்டிலே வைத்துக் காசைப் பெற்றுக்கொண்டார்.

நான் பல்கலைக்கழகத்திற்கு வரும்போதுதான் என் கால்களின் அளவு கூட எனக்குத் தெரிந்தது. புழுதியிலும், பொங்கும் வெய்யிற் தகிப்பினிடையேயும்தான் பதினெட்டாவது வயது வரை என் வெறும் பாதங்கள் நடந்திருக்கின்றன. எனது பதினெட்டாவது வயதிலேதான் நான் சப்பாத்து வாங்கி அணிந்துகொண்டேன்.

நான் பல்கலைக்கழகத்திலிருந்தபோது என் தகப்பனரோ, குடும்பமோ எனக்கு எந்தவிதமான குறையையும் வைக்கவில்லை. எட்டு ரூபா பெறுமதியான சேர்ட்டையே அணிந்து வந்த எனக்கு என்னுடைய தகப்பனர் பதினெட்டு ரூபா பெறுமதியான சேர்ட் ஒன்றினை வாங்கித் தந்தபோது என் உடல் சிலிர்த்தது மனம் நெகிழ்ந்து விம்மிற்று! விசேஷ தினங்களில் அதை அணிவதென்று பத்திரப்படுத்தி வைத்தேன், பெறுதற்கரிய பொக்கிஷம் போல.

பல்கலைக்கழகத்திற்கு நான் போய்ச் சேர்ந்த முதல் ஆண்டிலேயே ''சோஷல்'' வந்தது. மேனாட்டுப் பாட்டுக்கள், துள்ளாட்டக்காரர்களின் வாத்திய இசைகள், கண்டியன் சாச்சா, காமக் கவர்ச்சியூட்டும் சில நடனங்கள், இவற்றையெல்லாம் மறைப்பதாகப் பாவனை பண்ணும் சில தரங்குறைந்த சுதேசிய கீதங்களும், நடனங்களுமே இதன் பிரதான அம்சங்கள். மாணவமாணவிகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும்தான் இச் ''சோஷல்'' மேனாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டதாக எனக்குச் சொன்னார்கள். ''சோஷல்'' வர இரண்டொரு தினங்களின் முன்பாகவே மாணவர்கள் பரபரக்கத் தொடங்கினார்கள். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்ந்த நாட்களில் சாய்ந்தால் சாய்கிற பக்கமே சாய்கிற செம்மறியாட்டு மனோ பாவனைக்கு நான் ஆட்பட்டிருந்தேன். எனவே எல்லா மாணவ மாணவிகளும் கலந்து கொள்ளும் ''சோஷலி''லே,

கேளிக்கை விழாவிலே தவருது பங்கு கொள்ளவேண்டுமென்று என்மனம் எனது பிடரியைப் பிடித்து உந்தித் தள்ளியது.

### இரண்டு

அந்தக் கிழமை என்னுடைய அறை நண்பனும் ஏதோ அவசர அலுவலென்று கூறி வீட்டிற்குப் போய்விட்டான். நான் மிகவும் கவன மாகச் சூட்கேசிற்குள் வைத்திருந்த சேர்ட்டை எடுத்து அன்று அணிந்து கொண்டேன். கண்ணுடியின் முன்பாக நின்று என்னைப் பல கோணங்களி லும் பார்த்து என்னை நானே ஆசையோடு மோகித்துக்கொண்டேன். இவ் வளவு காலமும் இப்படி ஆடை அணியாதிருந்த காரணத்தினுல் எவ் வளவு களிப்பான நாட்களினை இழந்து போய்விட்டேன் நான்; நான் ஒரு வெறும் மடைச்சாம்பிராணி என்று என் மனதினுள் திட்டிக் கொண்டு முணுமுணுத்தேன்.

விடுதி மண்டபத்திலிருந்து புறப்பட்டுப் படிகள் வழியாக இறங்கி வரும்போது இளவரசன் ஒருவனுக்குரிய கம்பீரத்தோடு நான் மிதந்து வந்தேனென்றுதான் சொல்லவேண்டும். ''சோஷல்'' நடைபெறுகின்ற விளையாட்டரங்க மண்டபத்திற்குப் போகின்ற வழியிலே, நூல் நிலையத் திலே படிப்பதற்காகத் தனக்கேயுரிய வேகமான நடையில் போய்க்கொண் டிருந்த சுமணதாசாவை நான் கண்ணுற்றேன். வாழ்க்கைத் தேனை அனு பவித்துப் பருகத் தெரியாதவன், பரிதாபத்திற்குரிய இளையோன் என்ற தொனியில் அவனோடு நான் கதைத்த கதைகள் அமைந்தன. என்னையும், அபூர்வமாகவே என்னை வசீகரப்படுத்தும் எனது புதிய உடுப்புக்களையும் அவன் ஏதாவது பாராட்டிச் சொல்லவேண்டுமென்று நான் நினைத்தேன்; விரும்பினேன். அவன் எதைப் பற்றியும் ஒன்றுமே சொல்லாதபடியினுல் அவனோடு நின்று பேசவே எனக்கு மனம் வராதபடியினுல் அவனோடு பேச்சினைச் சட்டென்று முறித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன் நான். என் மனதிலே அவன்மீது இனந்தெரியாத வெறுப்புத் துளிர்த்தது.

அழகிய மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தினை அண்மியபோது என்னுடைய மனம் மிக்க ஆனந்தத்தால் விம்மிதமுற்றது: ஒரு கடைக்காரனின் மகனுக்கு இலகுவில் கிடைத்த இத்தகைய் வாய்ப்பு வேறு யாருக்குக் கிட்டும் என நினைத்து என்னுள்ளேயே நான் இறுமாந் தேன்.

மண்டபத்தின் தென்மூலை மேடையிலிருந்து கிதார் வாத்திய இசை காதுப் பறைகளை அதிர்த்திக் கணகணத்துக் கொண்டிருந்தது. எனக்குப் பெயர் தெரியாத வாத்தியங்களை ஓசைப்படுத்திக்கொண்டிருந்த அந்த வாத்தியக் குழுவினரோடு கண்களைக் குத்துகின்ற பெண்ணெருத்தியும் நின்ருள். அந்த வாத்தியங்களின் இசைக்கேற்ப அவள், உடலை மனதைக் கிளறும் விதத்திலே நெளித்துக்கொண்டிருந்தாள். மண்டபம் முழுதிலும் சிறுசிறு வட்டங்களாகக் கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. இளமையின் கலகலப்புப் பறவைகளின் கூட்டான சிறகடிப்பாய் திக்குத்திக்காய்க் கேட் டுக்கொண்டிருந்தது. உள்ளே போனதும் ஒரு கதிரையில் அமர்ந்த சில நிமிஷங்களில் என்னுடைய மனம கூனிக் குறுகிற்று. நான் அமர்ந்திருந்த

கதிரைக்கு அருகருகாக ஆறு கதிரைகள் வட்டமிட்டிருந்தன. மூன்று யுவதிகள். இளைஞர்கள் இருவர். ஒரு கதிரை வெறுமையினைச் சுமந்திருந்தது. அவர்களைக் கண்களினூற் தடவி நோட்டம் விட்டேன். ஆங்கிலேயனால் பணக்கார உலகிற்கே அறிமுகப்படுத்தப்பட்ட சொர்க்கத்திலே அவர்களே தேவர்கள். என்னைத் தரித்திரத்தின் குறியீடான குசேலனுக்கு ஒப்பிடலாமா? அந்த ஐவரும் என்னை உணர்ச்சியின் சலனமற்ற கண்களினால் என்னைப் பார்த்தபோதிலும், அங்கே கதிரைகளில் நிறையும் வண்ணமும், வாசமும் மதமதர்க்கும் இளமையின் கலகலத்த சிரிப்பும் என் நெஞ்சினை என்னவோ செய்தன. அங்குள்ளவர்கள் அணிந்திருந்த உடைகளின் பகட்டிற்கு முன்னால் நான் தரித்திரக் கோலம் தரித்தவன் போல நாணமுற்றேன். மழைக்கு ஒதுங்கி கல்யாண வீட்டுப் பந்தலினுள் பிறர் அருவருப்போடு பார்த்து நிற்கின்ற பிச்சைக்காரனின் மனநிலையில் குறுகி நின்றேன் நான்.

சிரிக்கவே முடியாத சிறிய விஷயங்களுக்கெல்லாம் யுவதிகள் குலுங்கிக்குலுங்கிச் சிரித்தார்கள். கட்டுப்பாடற்ற யெளவனச் சிரிப்பு. அடுத்த வட்டத்திலிருந்த ஒருத்தி சிரிக்கையில் கண்களிலே நீர் துளிர்த்து விட்டது. அதனை அவளருகில் இருந்த மாணவன் பூவைத் தடவுகிறாற்போல மெதுவாகப் பெருவிரலாற் துடைத்து விட்டுத் திரும்பி என்னைக் கண்களைக் குறுக்கிப் பார்த்தான். ''நீ ஒரு ஏழைக்கடைக்காரனின் மகன். இங்கு ஏன் வந்தாய்?'' என்பது போல கவலை மறந்த அவர்களின் சிரிப்பு என்னைப் பார்த்து ஏளனம் செய்தது. என்றுமே என்னைத் தரங்குறைந்த பயலாக மதிக்கும் ராமலிங்கம் எனக்குப் பக்கத்திலே மிகவும் நளினமாக வந்து சிகரட்டை நீட்டுகின்ற பாவனையில், ''மிகமிக எளிமையாக இருக்கின்றாய்'' என்று ஏளனமும் குத்தலுமாய்க் கூறிவிட்டு அங்கிருந்து மற்ற வட்டத்திற்குப் போனான். அங்கு போகும்போது நான் 'ரை' கூடக் கட்டிக்கொண்டு போகவில்லை. 'ரை' கட்டவேண்டுமென்ற நினைவே மனதில் எழவில்லை. அப்படி அந்த நினைவு முன்னதாகவே தோன்றியிருந்தாலும் யாரிடம்தான் நான் 'ரை'யை இரவலாக வாங்கியிருப்பேன்? யாருமே எனக்கு இரவலாக 'ரை' தந்திருக்கமாட்டார்கள். ராமலிங்கம் எனக்கருகாகக் குனிந்தபோது அவன் கட்டியிருந்த சிவப்புக் கோடிட்ட அழகிய 'ரை' என்னுடைய தோளிலே துவண்டு மடிந்து போயிருந்தது. அங்கிருந்து போகும்போது தன்னுடைய 'ரை'யை வெகு ஸ்ரைலாகச் சரிசெய்து கொண்டு போனான். நான் அங்கே அனாதையாய், இடந்தவறிய வனாக கவலையினுள் ஆழ்ந்துபோய் எப்போதடா வெளியிலே போவேன் என ஏங்கிக்கொண்டிருந்தேன்.

என்னோடு ஒத்தவர்களோடு சேர்ந்து கொள்ளாது, எனக்கு மேல் தட்டு நிலையிலுள்ளவர்களோடு சேர்ந்து வாழ்வு முறையை அமைக்க வேண்டுமென்று நினைத்திருந்த எனது மனமயக்கம் எனக்குப் பல்கலைக்கழகத்தின் விதேசியச் சூழ்நிலை தந்த மாற்றமே என்பதைப் பின்னர் நான் நன்றாக உணர்ந்து கொண்டேன்.

என் அற்பத்தனமான சிந்தனைகளுக்காக நான் கூனிக்குறுகி வெட்கப்பட்டேன். என்னுடைய மனம் அதற்குள் எவ்வளவாகச் சலனப்பட்டு

விட்டது என்பதை எண்ணிய போதிலே என் மனதின் உறுதிப் பாடற்ற தன்மைக்காக நான் மிகவும் அவமானமும் கழிவிரக்கமும் கொண்டேன்.

இந்தச் சம்பவம் நடந்தொழிய முன்னர், நான் தர்மபாலாவோடு அரசியல், பொருளாதாரம், மனிதப் பிரச்சினைகள் சம்பந்தமாக நிறை யக் கதைத்திருக்கின்றேன். அவன் தருகின்ற பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் படித்திருக்கின்றேன். ஆனால் இவைகள் யாவும் என் காது களினால் கேட்கப்பட்டனவே தவிர மனதினுள் கொள்ளப்படவில்லை. இந் தச் சூடு விழுந்ததின் பின்புதான் தர்மபாலாவின் சிந்தனை நிறைந்த வார்த்தைகள், அவன் தந்த புத்தகங்களின் விஞ்ஞான மயமான கருத் தோட்டங்கள் ஆகியன என் மனதின் அடிவாரம் வரை ஆழச்சென்று உறைத்தன.

தர்மபாலாவிடம் எனது வெட்கத்திற்குரிய முன்னுள் எண்ணங்களைச் சொன்னதோடு அதற்குத் தொடர்பான விஷயங்கள் பலவற்றைக் கதைத் தேன். நாங்களிருவரும் எங்கள் வாழ்க்கையில் கழிந்துபோன நாட்களின் பயனற்ற பொழுதுகளையும் கோணற் சிந்தனைகளையும் அசைபோட்டு எதிர் காலம் பற்றிய நினைவுகளில் ஆழ்ந்தோம். தர்மபாலா எல்லா விதங்களி லும் பதப்பட்ட உருக்காயிருந்தான். விவசாயியின் மகனான அவன் வாழ் வின் ஏற்ற இறக்கங்களையும், குரூர வசீகரங்களையும் நேருக்கு நேராகவே உணர்ந்து தரிசித்தவன். பசியின் கொடிய பாதங்களின் நசிப்பினிடையே துணிவையும் வாழ்வில் கூர்மையான நம்பிக்கையையும் அவன் கொண் டிருந்தான். அவனுடைய பேச்சிலே உல்லாசத்தை எதிர்பார்க்கும் கற் பனையார்ந்த வேட்கை சற்றேனும் தொனிக்கவில்லை. அவன் வயலிலே பாடுபட்டு வேலை செய்வோரையும், மலைநாட்டில் தேயிலை கொய்பவர் களையும் பற்றி நிறைய விஷயங்களை அனுபவரீதியாக அறிந்து வைத் திருந்தான். அவர்களின் நண்பனாக அவர்களோடு வாழ்ந்து, அவர்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்காகப் போராடுகின்ற இயக்கங்களோடு தன்னை இணைத்துக்கொண்டு வாழ்கின்ற தர்மபாலாவில் எனக்கு எல்லை யில்லாத பற்றும் பிடிப்பும் உண்டாயிற்று. அன்றிலிருந்து திசைமாறிச் சிந்திக்கவைக்கும் கேவலமான போலித்தனமான கலாச்சாரத்தை நஞ் சாக வெறுத்தது எனது மனம். சுமணதாசாவின் உடையினை நினைத்துப் பரிதாபப்பட்ட என் மடமைக்காக நான் என்னையே நொந்து கொண்டேன்.

வசதிகளற்றவனும் வசதிகள் உள்ளவனும் சமமாகச் சுதந்திரம் அனு பவிக்கின்றனும்! நான் மனங்கசந்து சிரித்தேன். ஓட்டப்போட்டி ஒன்றில் ஒருவனுக்குக் கால்களைக் கட்டிவிட்டு கால்களே கட்டப்படாது சுதந்திர மாக நிற்கும் இன்னெருவனேடு ஓடுவதற்கு விட்டால் யார்தான் சிரிக்க மாட்டார்கள்? ஆனல் அந்த ஏமாற்று வித்தையை நடத்தி வருகின்ற இந்த அமைப்பின் கீழே வசதியுள்ளவனுக்குத்தான் வாழ்வு என்பதனை நான் பூரணமாக உணர்ந்து கொண்டேன். அமுங்கித் திறமையை வெளிக் காட்டி நல்வாழ்வு வாழமுடியாமல் வெம்பற்பிஞ்சாகி உதிர்ந்து பயனற்று அழிந்தே போகும் என்னைப் போன்றவர்களின் சோகம், உறுதியான செயலாக உருவாகும்வரை, உருவாகி இந்த வாழ்வு முறை மாற்றப்பட்டு எல்லோரும் எல்லாம் பெற்று வாழுங்காலம் வரும்வரை இதே நிலைமை வளர்ந்து பூதாகரமாக நீடிக்குந்தானே என நினைத்தது என்மனம்.

தர்மபாலா என்னோடு எல்லா அம்சங்களைப் பற்றியும் தர்க்கிப்ப வன். கிணற்றுத் தவளையான என்னைச் சிந்திக்கவைத்த தர்மபாலா, தன் பரந்த நெற்றியில் முத்திட்ட வியர்வையைத் துடைத்துக் கொண்டு அடங்கிய குரலிற் சொன்னான்:

"சிவகுமார், நீ நினைப்பதுபோல கொடுமை நிறைந்த பேதமுள்ள உலகமானது தானாகவே மாறிவிடக் கூடியதல்ல. அதனைத் தகர்த்து நொருக்கவேண்டும். போஷாக்கின்மையால் அவலச்சாவு சாகின்ற குழந்தைகளும், இலட்சக்கணக்கில் வேலையில்லாது விரக்தியடைந்திருக்கும் வாலிபர்களின் பெரு மூச்சுகளும், உயர்ந்து விட்ட வாழ்க்கைச் செலவுகளின் அழுத்தமுந்தான் நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தின் பெறுபேறுகளா?"

ஒரு ஜனவரி மாதப் பிற்பகுதியில் அறுபத்தெட்டாம் ஆண்டின் போது தர்மபாலா இதனை மிக ஆவேசத்தோடு என்னிடம் சொன்னான். இருபதாண்டுகள் ஆகப்போகின்றது இலங்கை சுதந்திரம் பெற்று என நினைக்கின்ற போது நாட்டோடு சேர்த்து என் வீட்டையும் நான் மனங் கொள்ள வேண்டியதாயிற்று. தினசரி ஐம்பது ரூபா வருவாய்க்காக கடையிலிருந்து வியாபாரம் என்ற பெயரில் இளையான் கலைக்கின்ற எனது வயது முதிர்ந்த தகப்பனார்; நகைகளை அணிந்து மகிழ்வதற்குப் பதிலாக அனேக வருஷங்களாக நகை ஈடுபிடிக்குமிடத்தில் நகைகளை அடைவு வைத்து விட்டு வெறுங்கழுத்தைத் தடவிக்கொண்டிருக்கும் என் அருமைத்தாய்; தங்களின் விடிவான வாழ்விற்காக எனது வருகையையும், உத்தியோக சம்பளத்தையும் எதிர்பார்த்திருக்கும் எனது தங்கைகள்...... இப்படி என்னைப்போல எத்தனை பேர்? நானே இப்படியென்றால் என்னைவிடக் கீழ் நிலையிலிருக்கின்ற சாதாரண மனிதனின் சரித்திரம் எப்படியிருக்கும்? சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள்...... இருபது ஆண்டுகளாம்!

தர்மபாலா ஆவேசமாகக் கூறிய கருத்துக்கள் எனது நெஞ்சத் தளத்தினையே கீறித் தைத்தன. எனக்குள்ளே குமுறல்களும் மாற்றங்களும் கிளர்ந்தன. மௌனமாய் இளமையின் இதயத்தினுள் கனன்று பொங்கத் தயாராகிக் கொண்டிருக்கும் தீத்தழற்குழம்பு என்னுள்ளத்தினுள்ளும் கொதிப்பதாய் நான் அடிக்கடி உணரத்தலைப்பட்டேன்.

× × × × × ×

செல்லமாகத் தூமித்துக் கொண்டிருந்த மழையின் வீச்சு அதிகரிக்க முன்னர் நூல் நிலையத்திற்குப் போகவேண்டுமென்று விரைந்து வந்து கொண்டிருந்த சுமணதாசா, நூல் நிலைய வாசலடியில் நின்று பசியமரங்கள் மழைத்துமியில் தோய்ந்து சிலிர்ப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த என்னைக் கண்டதும் தோளில் தட்டி முகமலர்ந்தான்; சொல்லற்றமுறுவல்.

பல்கலைக்கழகத்து மத்திய கன்ரீனில் தேனீர் அருந்தும் நினைவோடு அவ்விடத்தில் வந்து நின்று ஆளைத் தேடிய நான் அவனைத் தேனீர் அருந்த வரும்படி அழைத்தேன். அவனும் சம்மதித்தான். இருவருமாகப் பல்கலைக்கழக நூல் நிலையத்திலிருந்து கன்ரீனை நோக்கிச் செல்லும் படிகளினூல் இறங்கிச் சென்றோம். அவ் வேளையிலே நான் தர்மபாலாவோடு

கதைத்து மனதினுள்ளும் செயலினுள்ளும் பதித்துக்கொண்ட எண்ணங்களை அவனுக்குச் சொன்னேன். எதிலுமே தனித்துச் சிந்தித்து தனியான உலகிலே சஞ்சரித்திருக்கும் அவனை அந்த உலகத்திலேயிருந்து மீட்டு எங்களோடு சேர்க்கவேண்டுமென்று எனக்கு விருப்பமாயிருந்தது. ''படித்தவர்கள் என்று கருதப்படுகின்ற நாங்கள் எதிலும் சுயதிருப்திப்பட்டு இருந்துவிடக்கூடாது. நாங்கள் தொடர்ந்து எம்மைப் புதிய அச்சில் வார்த்தெடுத்துக்கொள்ளவும் புதிய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், தொழிலாளி விவசாயிகளுடன் நெருக்கமாக ஐக்கியமுறவும் கூடியதாகச் சிறிது சிறிதாக முதலாளித்துவ உலக திருஷ்டாந்தங்களைக் கைவிட்டு தொழிலாளி வர்க்க திருஷ்டாந்தங்களை அடையவேண்டுமல்லவா? அப்படியல்லாது நாங்கள் இடைவழியில் நின்றுவிட்டாலோ அல்லது பின்னால் வழுக்கிச் சென்றுவிட்டாலோ மீள வழியற்ற பாதையை அடைந்து விடுவோமல்லவா?''

எனது சொற்கள் பாடமாக்கினாற்போலக் கோவையாக வெளியாகின. ஆனால் அவை செயற்கையான சொற்களல்ல. நான் சொல்லி முடியும் வரை சுமணதாசா என் வார்த்தைகளை வெகு நிதானமாகக் கவனித்தான். பின்னர் சில கணங்கள் யோசித்து விட்டுக் கசப்புணர்ச்சி மேலோங்கிய குரலிலே சுமணதாசா சொன்னான்:

''சிவா, இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த அன்றுதான் நானும் பிறந்தேன். முன்பெல்லாம் எனது அம்மா இதைச் சொல்லிப் பெருமைப் படுவதுண்டு. நான் சுதந்திரமானவனாய்ப் பிறந்தேனாம்''

பரந்த நெற்றியில் சுருண்டு விழுந்த மயிர்க் கற்றையை ஒதுக்கி, நெற்றியைப் பெருவிரலாற் சுரண்டிக்கொண்டு அலட்சியமாகச் சிரித்தபடி தன்னை மறந்த வேகத்திலே தொடர்ந்தான் சுமணதாசா.

''ஒவ்வொரு சுதந்திரதினத்தின் ஆடம்பரமான கொண்டாட்டங்களின் போதும் என்னைப் பெற்றவள் மனமும் கண்களும் பொருமிக்க கலங்கக் கண்ணீர் சொரிந்திருக்கிறாள். தன்னுடைய ஒரேயொரு ஆசை மகனுக்கு நல்ல உணவு கொடுக்க முடியாமல், கிழிசலற்ற ஆடைகள் அணிவிக்க முடியாமலிருக்கின்றதே, அவனை ஒரு சொந்தமான வசதியுள்ள வீட்டில் வைத்து வளர்க்க முடியாமல் இருக்கின்றதே என்றுதான் என் தாய் அழுகின்றாள்... நண்பனே இருபது வருஷங்களாய் இந்த மூன்று ஆசைகளையும் நிறைவேற்ற முடியாமலேயே நான் மனம் வேதனையுற அழுந்திக்கொண்டிருக்கின்றேன், என் தாயோ......''

சுமணதாசா நாத்தழுதழுக்கப் பொங்கும் கண்ணீரை வெளிவர விடாது சமாளித்துக் கொண்டு எங்கோ பார்த்தான். மலர்ச்சிக்காகவே துடிக்கும் அவனைப்போலவே எனது இதயமும் ஆத்திரத்தோடு கசப்புற்று என்னையும் அவனையும் போன்றுள்ள லட்சக்கணக்கானோரின் துயரம் மாறிச் செயலாகி இந்த வாழ்வு முறை தலைகீழாக மாறவேண்டும் என்ற முடிவிலே போய் நின்றது. இந்தத் தேசத்தின் லட்சக்கணக்கான, வாழத் துடிக்கின்ற ஆத்மாக்களின் குரல் அவன் சொற்களிலே மறைவேதுமற்றுத் தொனித்தது.

கசப்புணர்ச்சியோடு வாழ்வைக் கழித்து முடிவெய்துவதைவிட, கசப்புணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் காரணங்களை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்துவிட வேண்டுமென்ற தர்மபாலாவின் குரல் என் காதோடு கேட்டது. தர்மபாலாவையும், சுமணதாசாவையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒன்று தன்னை யோசித்து உலகை மறக்கின்றது. மற்றது உலகினை யோசித்து தன்னை மறந்திருக்கின்றது.

மடைதிறந்த வெள்ளம் முற்றுகவே வடிவதுபோல, சுமணதாசாவின் இதயத்தினுள் புதைந்திருந்த, அமுங்கியிருந்த துன்பங்களெல்லாம் அன்று அவன் சொற்களில் துடித்துப் பிரவகித்தன. சுமணதாசாவினுடைய தாய் அவனைச் சிறுவயதிலிருந்தே மிகவும் கஷ்டப்பட்டுத்தான் படிக்கவைத்தாள். தன்னுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டிருந்த கணவனை, மகன் பிறந்த சில வருஷங்களுக்குள்ளேயே இழந்துவிட்ட அவள் — அழகான உடைகள் தரித்து வீதியில் போவோர் வருவோரையெல்லாம் ஏக்கந்ததும்பப்பார்த்திருந்தாள். அந்த உடைகளிலே மிடுக்கோடு செல்கின்ற தன் மகனை மானசீகமாகத் தரிசித்துத் தரிசித்து அவள் மனதிலே சபலமாயிருந்த உணர்ச்சி, வைராக்கியமான உறுதியாய் வளர்ந்துவிட்டது. பலர் வாயிலாக அவள் பேராதனைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி விசாரித்தும் சொல்லக்கேட்டும் அறிந்திருக்கின்றுள். பேராதனைப் பல்கலைக் கழகத்திலே மகனைப் படிப்பித்து பட்டதாரியாக்கப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் வட்டியும் முதலுமாக அவனை உத்தியோகமாக்கி, சிறிய அடக்கமான வீடொன்றைக் கட்டி, மகனுக்கு வேளாவேளைக்கு நல்ல உணவு கொடுத்து, கம்பீரமான விலையுயர்ந்த உடைகள் அணிவித்து — மங்கிய கண்களும் புழுங்கிய இதயமும் பரவசத்தினுல் விம்மிதமுற மகிழ்வோடு பேரப்பிள்ளைக் கண்டு தன் இறுதிக் காலத்தை முடித்திட வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தாள் அந்தத் தாய்.

''...சிவா என்னுடைய தாய் எனக்காகப் படுகின்ற கஷ்டங்களை என்னுல் தாங்க முடிவதே இல்லை. என்னுடைய பட்டப்படிப்பைக் கைவிட்டு விட்டு எங்காவது போய்க் கூலிவேலை செய்யலாமா என்று கூடப் பல சமயங்களிலே நான் யோசித்திருக்கின்றேன். என்னுடைய தாய் அதற்குச் சம்மதிக்கமாட்டாள் ... சம்மதிக்கவே மாட்டாள். சில வேளைகளில் என்னில் எனக்கே அளவு மீறிய கசப்புணர்ச்சி ஏற்படுவதுண்டு. எட்ட முடியாத, எட்டியே தொடமுடியாத ஆசையொன்றை எதற்காகத்தான் என்னுடைய தாய் முயன்றுகொண்டிருக்கின்றுள், அது இயல்பினையே மீறிய வீணன ஆசையென்று அலுத்துப்போன சிந்தனைகள் என்னை ஆட்கொள்வதுண்டு. என்னுடைய ஆசைக்காக, தன்மேல் இரக்கப்படுவதனைக் கூட அனுமதிப்பதில்லை அவள். மகனே, நல்ல உணவு, நல்ல உடை, நல்ல வீடு ஆகியவற்றை என்றுமே நான் உனக்கு அளித்ததில்லை. அவற்றை நீ பரிபூரணமாகப்பெற்று உன் தாய்க்கு மனநிறைவை அளிக்கும்வரை எதற்குமே கவலைப்படாதே. நமது கையிலேதான் நமது சந்தோஷம் இருக்கின்றது என்று மிக நம்பிக்கையோடு அடிக்கடி என்னுடைய தாய் சொல்லிக் கொண்டிருப்பாள் ... ''

அவனுடைய தாயின் சிந்தனைகளில் பல தவருனவையென்பதை தான் மனதார அறிந்திருந்தபோதும், நம்பிக்கையை எதிர்நோக்கியிருக்கும் அவளைப் பற்றி அறிய நான் மிகவும் அவாவுற்றேன்.

''சுமணு, உன்னுடைய தாய் என்ன செய்கின்ருள்?''

சுமணதாசாவின் பரந்த முகத்தில் தயக்கரேகை நிமிஷத்தில் கீறிட்டு மறைந்தது. அவன் அந்தக் கேள்வியை என்னிடமிருந்து எதிர்பார்க்க வில்லைப் போலும். பிறகு என்னை அவனுடைய இயல்புப்படியே கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னுன்.

''என் தாய் கருங்கல் உடைத்துக் காசு சம்பாதிக்கின்ருள்''

என்னையறியாமல் அர்த்தமற்று நான் திடுக்கிட்டுப் போனேன். எங்கள் கண்களின் முன்பு மலையோடு சேர்ந்து நீலமாகப் பரந்து விரிந்திருக்கும் நிர்மலமான வானத்தில் அசையாது நின்ற வெண்முகில் துண்டுகள் போல இருவரும் சில நிமிஷங்கள் மௌனமாக நின்ருேம்.

கடைக்காரனின் மகனுகிய நான், கருங்கல் உடைத்து மலையளவு ஆசையினை நெஞ்சத்தோடு சுமந்திருக்கும் தாயின் லட்சிய வடிவாகிய சுமணதாசா, துண்டு நிலத்தின் சொந்தக்காரனுயிருந்து துயரங்களின் அமுக்கலிடையேயும் துணிவோடும், செயலுக்கான சரியான நம்பிக்கையோடுமிருக்கும் விவசாயியின் மகனுன தர்மபாலா ... இப்படி எவ்வளவு லட்சம் பேர்!

மூன்று

திடீரென என்னைக் கண்டு திடுக்கிட்டவன்போல, கண்டி தலதா மாளிகையின் கிழக்குப் பக்கத்தில் சுமணதாசா திகைத்துப்போய் நின்றது எனக்குப் பேராச்சரியத்தைக் கொடுத்தது. அப்படித் தன்னையே மறந்து சுமணதாசா திடுக்கிட்டதை அன்றுதான் நான் கண்டிருக்கின்றேன், அந்தத் திகைப்பிலிருந்து அவனை விடுபட வைத்தவள், அவனுக்குப் பக்கத்தில் நின்ற மெல்லிய அழகிய கறுப்புநிறமான ஒரு பெண் தான். அவளை, பார்த்தவுடன் மனதிலே பதியத்தக்க வசீகரமான அப்பெண்ணை நான் பல்கலைக் கழக நூல் நிலையத்தில் அடிக்கடி கண்டிருக்கின்றேன். மிக எளிமையான தோற்றமுடைய அவளின், பிரகாசமும் சந்துஷ்டியும் நிறைந்த அமைதியான புன்னகை எவரையும் கவரத் தக்கது. அந்த முகத்திற்கு அவளின் நீளமான அழகிய மூக்கு தனி வடிவைக் கொடுத்தது.

சுமணதாசா என்னை அவளிற்கு அறிமுகம்செய்து வைத்தான். அவள் என்னைப் பார்த்துப் பதிலிற்குப் புன்னகை புரிந்தபோது கன்னங்களிற் குழி விழுந்தன. அவளின் பெயர் தம்மிகா என்று சொல்லிவிட்டு சுமணதாசா அவளைப் பார்த்தான். அவர்கள் இருவரும் ஒரே பாடங்களையே படிப்பதாக அவன் சொன்னுன்; வேறொன்றும் பேசவில்லை.

அன்று இரவு கதைத்துக் கொண்டிருக்கும்போது கதையோடு கதையாகத் தர்மபாலாவிடம் இச் செய்தியைச் சொன்னேன். அவனும் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் போனுன். நான் தம்மிகாவைப்பற்றிய அடையாளக் குறிப்புகளை அவனிடம் சொன்னபோது, அவளை தான் ஏற்கனவே அறிந்து

வைத்திருப்பதாய் தர்மபாலா எனக்குச் சொன்னுன். கம்பஹா என்னு மிடத்திலுள்ள விவசாயி அப்புகாமியின் மகள் தம்மிகா. எதிலும் நிதான மும் துணிவுமுள்ளவளென்று மாணவிகள் பலரினுல் வியக்கப்படும் தம்மிகா, தனித்து ஒதுங்கித் தனித்துச் சிந்தித்து வாழும் புத்தகப்புழுவான சுமண தாசாவை விரும்பியது எங்களுக்கு மிகவும் புதினமாகவே இருந்தது.

அந்தச் சந்திப்பின் பிறகு நூல் நிலேயத்தில் சுமணதாசாவும், தம்மி காவும் அருகருகாயிருந்து படித்துக்கொண்டிருப்பதை அடிக்கடி கண்டு புன்முறுவலாற் பதில் சொல்லி நாணங்கலந்த குறுநகையைப் பதிலாக எதிர்கொண்டிருக்கின்றேன் நான். ஆயினும் அவர்கள் மோகவெறி கொண்ட திரைப்படக் காதலர்களேப் பாவனே பண்ணித் திரியவில்லே.

இளங்காதலர்கள் தனித்து உலாவும் காதலர் பாதையிலோ அல் லது பில்லறிங் செக்ஷனிலேயோ அவர்கள் அலேந்து திரிந்ததாய்க்கூட யாரும் கதைத்ததில்லே. எல்லாம் அந்தப் புன்னகைக்குள்ளும், அமைதி யான கதைகளினுள்ளும், ஒருவரையொருவர் பார்த்து மயங்கியிருக்கும் மௌனத்திற்குள்ளும் அடங்கிப் போயிற்றுப் போலும்.

அன்று பின்னேரம் வரையிருந்து நூல்நிலேயத்தில் படித்துவிட்டு வெளியே வந்த என்னே செனற்கட்டிடத் தூண்களின் ஓரமாய் நின்ற தர்மபாலா அழைப்பதைக் கண்டேன். அவனேடு தம்மிகாவும் நின்ருள்.

தம்மிகாவைத் தனியே கண்டு நன்ருகக் கேலி செய்யவேண்டும் என நினேத்திருந்த நான் வலியக்கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சி யடைந்த மனத்தோடு அவ்விடம் சென்றேன். நான் கேலியைத் தொடங்க முன் தர்மபாலா என்னேக் கையமர்த்தி நிறுத்திவிட்டு வழமையான நிதா னத்தோடு சொன்னுன்:

''சில தினங்களிற்குமுன் சுமணதாசா வீட்டிற்கென்று போய்விட்டு வந்தான். வந்த பிறகு தம்மிகாவோடு முகங்கொடுத்துக்கூடக் கதைப் பதில்லேயாம். அவள் எவ்வளவோ கேட்டுங்கூட ஒன்றுஞ் சொல்கிருனில்லே; சினக்கிருனும் ... ''

தம்மிகாவை நான் பார்த்தேன். மென்மையான அவளின் முகத் திலே கவலேயின் சலனமில்லாதபோதும், புன்னகையின்மையினுல் இலே சான வாட்டமிருப்பது தெரிந்தது. எதையோ நினேத்துக்கொண்டு இடது ஆட்காட்டி விரலினுல் அவள் தன்னுடைய மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் கதைத்துவிட்டு, தனக்கு முக்கியமான அரசியல் வகுப்பிருப்பதாய்க் கூறியவண்ணம் தர்மபாலா அங்கிருந்து போய்விட் டான். தம்மிகாதான் மண்டபத்திற்குப் போவதாய்க் கூறி என்னிடமிருந்து விடைபெற்ருள்.

நான் அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

செனற் கட்டிடத்திலிருந்து கீழிறங்கும் படிகளால் நடந்து தென் புறமாய் அவள் போய் மறையும்வரை ஏதோ நினைவாய் அவளிலேயே தொட்டு முடிந்தது என் பார்வை. இப்போது உயர்ந்து தெரியும் பசு மரங்கள், கொத்துப் பூக்கள், கற்றூண்கள், வெறுமையான வீதி இவையே என் முன் தெரிந்தன.

நான் பிரமையிலிருந்து விடுபட்டேன். நூல்நிலையம் முழுவதும் சுமண தாசாவைத் தேடினேன். அவன் வழமையாக இருந்து படிக்கும் இடங்களி லெல்லாம் வேறு யார்யாரோ இருந்து படித்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் மனம் அலுத்துக் களைத்துப்போன நான் விடுதிமண்டபத்திற் குப் போய், சுமணதாசாவின் அறைக் கதவைத் தட்டாமலே திறந்து உள்ளே போனேன்.

அறையின் இடதுபுறக் கட்டிலில் சுமணதாசா குப்புறப்படுத்துக் கிடந்தாண்.

அப்படி அவனை நான் ஒரு நாளும் கண்டதில்லை.

வேறு நாளாயிருந்தால் அவனது நித்திரையைக் குழப்பாமலே நான் பேசாமற் திரும்பிப்போயிருப்பேன். அன்றோ என்றால், எனக்கிருந்த மன்நிலையில் அது முடியாத ஒன்றாக இருந்தது.

குப்புறப் படுத்திருந்த அவனுடைய தலைமாட்டில் விக்ஸ்டப்பியும், தலைவலி மாத்திரையின் உரித்த ஈயக் கடுதாசிகளும் கிடந்தன.

நான் அவனைத்தட்டி எழுப்பினேன்.

களைத்த முகத்தோடு கட்டிலிலிருந்து அவன் நிமிர்ந்து எழுந்தான். கண்களில் சோர்விருந்தது. நெற்றி, விக்ஸ் தேய்த்ததால் பசைப்பிடிப் பாயிருந்தது. தன் பரந்த நெற்றியைத் துடைத்துத் தடவியபடியே கேள்வி நிறைந்த கண்களினோடு சுமணதாசா என்னைப் பார்த்தான். என் மனத்தி னுள்ளே அவனை யொட்டி எழுந்த குழப்பங்களைக் கேட்டேன். அவன் நான் சொல்லி முடியுமட்டும் தலைகுனிந்திருந்து விட்டு, என்னைத் தயக்கத்தோடு நிமிர்ந்து உற்றுப்பார்த்தபடி சொன்னான்:

''என்னை மறந்துவிடும்படி தம்மிகாவிடம் சொல்லப் போகின்றேன்..''

எனக்கு என்னையறியாது ஆத்திரம் பொங்கியது. பொங்கிய சினத்துடன் கேட்டேன்.

''ஏன் அப்படிச் சொல்லப் போகின்றாய்?''

''அம்மாவிடம் கேட்டேன். தனக்கு இஷ்டமில்லையாம்''

நான் அவனைப் பார்த்து அலட்சியம் மேலோங்கச் சிரித்தேன்.

''உனக்கென்று மூளையில்லையா? ஏன் உன்னுடைய அம்மாவைக் கேட்டு அனுமதிபெற்ற பின் காதலித்திருக்கலாமே ... ?''

என் சொற்களினால் அடிபட்ட உணர்வோடு அவன் என்னைத் தலை தாழ்ந்து பார்த்தான். முகமெல்லாம் சோகை பிடித்தாற்போல வெதும்பி யிருந்தது. நலிந்த குரலிற் சொன்னான்:

''சிவா நான் எதிலும் ஆசைப்படத் தகுதியற்றவன். என் ஆசைகள் எல்லாம் தீய்ந்து போன கனவுகள்தான்''

நான் அவனையே சிறிதுநேரம் பார்த்தபடி இருந்தேன். இளமை அழுவது பார்க்கச் சகிக்காதஒன்று. எனக்கு அனுதாபம் சிறிதளவேனும் நெஞ்சில் துளிர்க்கவில்லை. முன்பெனில் அவனுக்காக வருந்தியிருப்பேன். தர்மபாலாவினுடைய நட்பளித்த மனத்தெளிவிற்குப்பின், என் நெஞ்சம் கோழைத்தனங்களிற்கும், அடிமை மனோபாவத்திற்கும் இரக்கம் காட்டுவதைத் தவிர்த்துவிட்டது.

''சுமனா, ஏன் ஓயாது இப்படியே விரக்தியோடு கதைத்துக்கொண்டிருக்கின்றாய்? வறுமையில்தானே துணிவு பிறக்கின்றது. உலகையே மாற்றி புதுவாழ்வு காண வேண்டுமென்ற செயலுக்கான ஆவேசம் பிறக்கின்றது. இல்லையா?''

சுமணதாசா என்னைப் பரக்கப் பார்த்தான்.

''நல்ல கேள்வி சிவா... நீயோ, தர்மபாலாவோ ஏன் தம்மிகாவோ கூட உலகினை முழுமையாகப் பார்க்கின்றீர்கள். தர்மபாலாவிற்குதான் வரித்துக்கொண்ட அரசியற் கொள்கைதான் எல்லாவற்றிலும் முதன்மையானது. அதை அந்தரங்க சுத்தியாக ஏற்றுக்கொண்டு புதிய உலகிற்காகப் போராடுபவர்களோடு அவன் தன்னையும் பிணைத்துக்கொண்டிருக்கிறான். நீயும் அவனோடு சேர்ந்து மாறிக்கொண்டிருக்கிறாய். ஏதோ ஒரு விதத்தில் நீங்கள் மூவரும் உலகின் மாற்றம், அரசியல் யாவிலும் அக்கறையும் ஆர்வமும் வைத்திருக்கிறீர்கள். ஆனால் நானோ சிறுவயதிலிருந்தே என் தாயே உலகமாகவும், எனது நல்வாழ்க்கை ஒன்றே என் கொள்கையாகவும் கொண்ட சுயநலக்காரனாயும் வளர்க்கப்பட்டு விட்டேன். தம்மிகா கூட என்னிடமுள்ள இக் குணத்தை அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கிறாள்''

கடைசியாகச் சொன்ன வசனங்களை அவன் அழுத்திச் சொல்லிக்கொண்டே பெருமூச்செறிந்தான். சுமணதாசாவின் தவறுகள் அவனுக்கே தெரிகின்றன. தவறை உணர்தலே திருத்தத்தை நோக்கிச் செல்லும் தொடக்கம்.

நான் நினைத்திருந்ததுபோல சுமணதாசா கண்மூடித்தனமாய் புத்தகங்களில் ஆழ்ந்து போய்க் கிடக்கவில்லை; தான் பழகும் ஒவ்வொருவரையும் ஆழமாய் அளந்து வைத்திருக்கின்றான் என்பதை அன்றுதான் உணர்ந்தேன் நான்.

''இவ்வளவிற்கு உணர்ந்திருந்தும் பிறகு ஏன் இப்படி வாழ்வையும் முடிவுகளையும் கொண்டவனாயிருக்கின்றாய்? வானத்தை மண்ணிலிருந்து எட்டித்தொட நினைக்கும் வாழ்வினைக் கனவுகாண்பதைவிட, மண்ணிலிருந்து மண்ணின் வாழ்வைப் புதிதாக்கி அனுபவிக்க நினைப்பதில்லையா நீ?''

சுமணதாசா ஒன்றுமே பேசவில்லை. தன் மேசைக்கு மேலே ஒட்டியிருந்த புத்தர் படத்தை வெறித்துப் பார்த்திருந்தன அவன் கண்கள்.

மேசையின் முதுகெல்லாம் புத்தகங்களும், குறிப்புக்கொப்பிகளும் நிறைந்து கிடந்தன. பெக்கில் இரண்டு காக்கிக் காற்சட்டையும், ஒரு பழுப்புநிறச் சறமும் தூங்கின. கண்ணுடியின் அருகே சீப்பும், தரங்குறைந்த பற்பசை யும், பிறஸ்சும் ஒழுங்காய் அடுக்கியிருந்தன. அவன் யோசனையில் ஆழ்ந் திருந்தபோதும் அவனேடு நான் அனேக விஷயங்களைக் கதைத்துக்கொண் டிருந்தேன். என்னுடைய கதைகளுக்கெல்லாம் 'உம்' கொட்டிக்கொண் டிருந்தான் அவன்.

ஒரு மாதங் கழிந்த பின்பு தர்மபாலாவோடு நான் சுமணதாசா வைப் பற்றிக் கதைத்தேன். இந்த இடைக்காலத்திற்குள் தம்மிகா தர்ம பாலாவோடு மிக நெருக்கமாகப் பழகிவிட்டாள். அவனேடு சோஷலிச சங்கத்தில் நடைபெறும் அரசியல் வகுப்பிற்குச் செல்லக்கூடச் சம்மதந் தெரிவித்திருந்தாளாம். நான் தம்மிகாவை நினைத்துப் பார்த்தேன். மெலிந்த அவள் உடலினிற்குள் உள்ள வைராக்கியமான இதயமும் துணி வும் பெண்களிடையே அபூர்வமானதுதான்.

''அவள் மிகவும் தெளிந்த சிந்தனையுள்ளவள். அரசியலிலே தெளி வான பிரக்ஞை பெற்ற தகப்பன் அவளை நன்ருகச் சிந்திக்க வைத்திருக் கின்ருர். விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி அவளோடு நான் அனேக விஷயங்களைக் கதைத்தேன். வர்க்கபேதமற்ற சமுதாயத்திலேதான் காதல் என்ற விஷயம் அர்த்தம் பெறமுடியும் என்பது தெரிந்திருந்தும் ஏனே அவள் சுமணதாசாவை விரும்பிவிட்டாள். அதைத் தவறு என்று இப் போது அவளே உணர்ந்திருக்கலாம்''

சொல்லிக்கொண்டுபோன தர்மபாலா வேறேதோ யோசனையோடு தொடர்ந்தான்.

''ஆனுல் சுமணதாசாவோ இன்றைய அமைப்பின் நெருக்குதல்களுக் குட்பட்டு தன் வாழ்வை விட்டு விலகி மேல்தட்டு வாழ்க்கை வாழ்வதற் குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறுன். தான் மட்டுமே தப்ப முயலுகின்ற தனிப்புத்தி இனிமேல் சாத்தியப்படமாட்டாது. தன் னைச் சேர்ந்தோரையும், தன்னை நேசிப்போரையும் அடக்கி ஒடுக்கி வைத் திருக்கும் நாசகாரமான சக்திகளை உடைத்தெறிவதன் மூலமே நலமான வாழ்வு உதயமாக முடியும் என்ற உண்மையினை இவன் அறியவில்லை. தான் தான் வாழவேண்டும் என்ற சுயநல புத்தியுள்ளவர்களில் சிலர் ஒரு மாதிரித் தம்பி தாம் முன்பிருந்து வந்த இடத்தையும், வாழ்வையும் அலட்சியம் செய்யலாம். ஆனுல் பெரும்பாலானவர்களோ அந்த ஆசை நிறைவேருது விரக்தியும் இன்னலுமடைந்து தோற்று மடிகிருர்கள்''

### நான்கு

அடுத்தநாள் மாலை சுமணதாசாவும், நானும், தர்மபாலாவும் நூல் நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது தம்மிகா எங்களி னெதிரே தனியாக வந்து கொண்டிருந்தாள். வழமைபோலவே வெள்ளை நிறமான சேலையுடுத்து ஒற்றைப் பின்னல் பின்னியிருந்தாள் தம்மிகா. அவ

ளைக் கண்டவுடன் நான் சுமணதாசாவை உற்றுப் பார்த்தேன். அவனது பார்வையும் முகமும் அவஸ்தையினுல் திணறிக்கொண்டிருந்தன, தம்மிகா எங்களைக் கண்டதும் வழமைபோலவே முகமலர்ந்து புன்னகை செய்தாள். பிறகு என்னேடும் தர்மபாலாவோடும் பரீட்சை சம்பந்தமாகக் கதைத்துக் கொண்டு வந்தாள். சுமணதாஸா மௌனத்தோடும், அவஸ்தையோடும் எங்களோடு வந்து எங்களுக்கு மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. சுமண தாசாவைக் கண்டதாகவே சில நிமிடங்கள் தம்மிகா காட்டிக்கொள்ள வில்லை. ஏதோ கதை சொல்லிக்கொண்டு போனவள் இடைநடுவே அதை நிறுத்திவிட்டு தன் முன்னே பறந்த குருவிகளைப் பார்த்துக் கொண்டே சொன்னுள்: ''உங்கள் நண்பர் சுமணதாசா என்னேடு நேரிலே கதைக்க முடியாமல் எனக்கு சித்ரா மூலம் கடிதமொன்று கொடுத்தனுப்பியிருந் தார்''

தம்மிகா வெகு நிதானமாகவே அதனைச் சொன்னுள். சிறுமையைத் தூக்கியெறியும் அலட்சியபாவம் குரலிற் தொனித்தது.

''அவருடைய தாய் என்னை விரும்பவில்லையாம். பெரிய இடத்திலே திருமணம் செய்வதற்கு உத்தேசம் போலும்'' என்று நிதானமாகச் சொல்லி விட்டு என்னைப் பார்த்தபடி கூறினுள்:

''தான் என்னை நிராகரித்ததற்காக கலங்கவோ, கண்ணீர்விடவோ வேண்டாமென்று சுமணதாசா எனக்கு எழுதியிருப்பதுதான் சிரிப்பாக இருக்கிறது.''

சுமணதாசாவை நான் பார்த்தேன். அவனுடைய திடகாத்திரமான நிமிர்ந்த உடல் கூனிக் குறுகிப் போயிற்றுப்போல உணர்ந்தேன். பரந்த நெற்றியில் சுருக்கங்கள் கீற, முகமெல்லாம் கருமை படர்ந்து புடைத்துக் கொண்டிருந்தது. அவன் முகத்திலே ஆத்திரமும், அவமான உணர்ச்சி யும் பீறிப் பொங்கிற்று. மீசையற்ற முகத்தில் துடிக்கும் ஆத்திரத்திற்கு, எங்களின் முன்பு தம்மிகா தன்னுடைய குட்டுகளை உடைக்கிருளே என்ற வெறுப்பே காரணமாயிருந்திருக்க வேண்டும். அவன் குரல் ஓங்கி அதட்ட லாய் ஒலித்தது.

''தம்மீ''

தம்மிகா அவனின் அதட்டலையே கேட்காதவள் போல, உதாசீன மான பார்வையோடு சொன்னுள்:

''உங்கள் கடிதத்திற்கு நான் வாயாலேயே பதில் தந்து விடுகின் றேன். நீங்கள் என்னை நிராகரித்தமைக்காக நான் கொஞ்சமும் கலங்க வில்லை. காதலுக்கு இரண்டு முடிவுகள் — ஒன்றில் காதலில் வெற்றி பெற் ருல் திருமணம். அல்லது அதில் தோல்வியுற்ருல் தற்கொலை. இந்த இரண்டு முடிவுகள் மட்டுமே புத்தகங்களிலும், திரைப்படங்களிலும் இருக்க லாம்... ஆனுல் நிஜவாழ்வில் அம் முடிவுகள் மாத்திரமே இருப்பதில்லை. அப்படியென்ருல் அந்த வரட்டு முடிவால் உலகத்தில் பெரும் பகுதியே இன்று பிணக்காடாகத் தான் இருக்கும்... காதலித்து விட்டு அந்தக் காத லைத் தூண்டிக்கொள்ளுகின்ற உரிமையும் மனிதருக்கு உண்டு... ''

சொல்லிக்கொண்டு போனவள் அழுத்தமாக ஒரு சிங்களப் பழமொழியைச் சிங்களத்திலேயே சொல்லிவிட்டு, உதடுகளை நாக்கினால் ஈரப்படுத்திக் கொண்டு தொடர்ந்தாள்:

''நான் உங்களைக் காதலித்தது உண்மை. ஆனால் சுயநலமும் கோழைத்தனமுமே உருவமான நீங்கள் என்னை நிராகரித்து எனக்குக் கடிதம் எழுதச் சில மணித்தியாலங்களின் முன்னரே உங்கள் குணத்திற்காக நான் உங்கள் மேலுள்ள காதலைத் துண்டித்துக்கொண்டு விட்டேன், இதனால் எனக்குக் கலக்கமில்லை. அமைதியே ஏற்பட்டது. மத்தியதர வர்க்கத்துக்கே உரிய உணர்ச்சிகள் சில என்னைப் பாதித்தமையால் இப்படி ஒரு தவறை நான் செய்துவிட்டேன் ... ஏன், காதல் என்ற மத்தியதர வர்க்கத்துப் பொய்யைக்கூட இதுவரை நான் மனதினுள்க் கொண்டிருந்தமைக்காக மிக வெட்கப்படுகிறேன். அமுக்குப்படிந்த இவ்வமைப்புச் சிந்தனைகள் என்னையும் கௌவியிருந்தன ...'' அவள் சொல்லி முடிந்ததும் தர்மபாலாகூடத் திகைத்துப்போய் விட்டான். தம்மிகா, ஆவேசந் தணிந்து எதுவுமே நடவாதவள் போல எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

சுமணதாஸாவை நான் அவனின் கண்ணிற்கூடாகப் பார்த்தேன். தம்மிகா தன்னிடம் ''என்னைக் கைவிட்டு விடாதீர்கள். உங்களைத் தவிர எனக்கு வேறு கதியில்லை'' என அழுது கெஞ்சுவாள் என எதிர்பார்த்திருந்த அவனது முகம், பேராதனையின் மழைமுகிலாய் இருள் கப்பிக் கறுத்துப் போயிற்று.

ஓய்வு நாளென்று வந்தால் என் அறைக்குத் தர்மபாலா வருவதற்கு தவறுவதில்லை. தர்மபாலாவோடு பல மாணவர்கள் என் அறைக்கு வருவார்கள். அன்றும் இரண்டாம் ஆண்டிலே பயிலும் பல மாணவர்கள் தர்மபாலாவோடு எனது அறைக்கு வந்திருந்தார்கள். பல்கலைக் கழக மாணவர்களின் எதிர்காலம் பற்றி நாங்கள் கதைத்துக்கொண்டிருந்தோம். கிட்டத்தட்டப் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலையில்லாதிருப்பதைப் பற்றிச் சொன்ன மாணவன் ஒருவன் எதிர்காலத்தின் அவலம் பற்றி மிகவும் பயங்கொண்டான். பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் பட்டதாரி மாணவர்கள் எங்காவது வேலை கிடைத்தாலும் படிப்பை உதறித் தள்ளிவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். பல மாணவர்கள் வீட்டில்ப் புகைந்த பிரச்சினைகளாலும், வேலையில்லாது அலையும் பட்டதாரிகளைப் பார்த்த நிராசையினாலும் இடையிலேயே படிப்பை முறித்துக் கொண்டார்கள். இளமைப் பருவமே குழப்பம் சூழ்ந்த துயரமாய் இயங்கிற்று. பல்கலைக் கழகத்தினுள் மாணவர் சென்று படிக்க முடியாத பற்றாக் குறைகள், தங்குவதற்கு வசதிகள் இல்லாமை, உணவுப் பிரச்சினை ஆகியன பல்வேறு விதங்களாய், அதிருப்தியின் சீற்றமாய்க் கிளர்ந்தன. விரக்திகள் மனதினுள்ளே அமுங்கிப் புகையாது பல தடவைகள் சீறி வெடித்தன. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்பட்டு ஒரு நிகழ்ச்சியின் முடிவிலே மற்றொரு அத்திவாரம் எழுப்பப்பட்டது.

மௌனம் சூழ்ந்த நிமிஷங்களினுள்ளே எங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும் முக்காலத்திலும் தொட்டுத் தொடர்ந்தன,

ஆழ்ந்த யோசனையிலிருந்த தர்மபாலா அடங்கிய குரலிற் சொன்னான்:

''படித்தவர்களிடம் இப்போதுதான் பிரச்சினையே தலை தூக்கி உள்ளது. ஆனால் கடும் பிரச்சினைகளுக்குட்பட்ட இலட்சக் கணக்கான விவசாயிகளும் தொழிலாளிகளும் அவலச் சேற்றினுள் புதைந்த நிலைமையிலிருந்து மீள்வதற்காக கடுமையாகத் தங்கள் விரோத சக்திகளோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களோடு ஐக்கியப்படுவதின் மூலமே ஐக்கியப்பட்டுப் போராடுவதின் மூலமே விமோசனம் பிறக்க முடியும் ...''

தர்மபாலா சொல்லி முடிப்பதற்கு முன்னர், புத்தகப்படிப்பைத் தவிர வேறெதையுமே அறியாத ஜயமன்ன கேட்டான்:

''அப்படியானால் நமக்கு வேலையே கிடையாதா?''

அவன் குரலில் ஏக்கந் தளும்பிற்று.

மெள்ளச் சிரித்தான் தர்மபாலா.

''ஒவ்வொரு பட்டதாரி மாணவனுக்கும் ஆயிரத்தி எண்ணூற்றிப் பதினொரு ரூபா எண்பத்தியேழு சதம் ஒரு வருஷத்திலே செலவாகின்றது. வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு ஒரு வருடத்தில் மட்டும் மூன்று கோடியே எட்டுலட்சத்து முப்பத்திநாலாயிரம் ரூபா செலவாகியுள்ளது. எவ்வளவு அதிகமானது இந்தத் தொகை! ஆனால் இதனால் கிட்டிய பலன் தான் என்ன? இவர்களுக்கு வேலை என்றுதான் கிடைக்கப்போகின்றது?... பேனா பிடிக்கும் சந்தர்ப்பந்தான் பட்டதாரிகளாகிய எங்களுக்கு இல்லாவிடினும் வேறுவேலை இல்லாமலா போய்விடப் போகின்றது?''

தர்மபாலா சொல்லிவிட்டு எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். எங்களோடிருந்த சிவானந்தனைப் பார்த்தேன். என்ன விஷயம் கதைத்தாலும் அதற்கு எதிர்க்கதையும் வியாக்கியானமும் சொல்லி வெகு உஷாராகக் கதைக்கும் அவனே தர்மபாலா சொன்னதைக்கேட்டு ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தான். வீட்டைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்ததை நெற்றிப் புருவங்களின் ஏற்ற இறக்கத்திலிருந்து நான் அறிந்து கொண்டேன்,

சிவானந்தனைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பியபோது அறைக் கதவடியில் சுமணதாசாவின் உருவந் தெரிவதனைக் கண்டேன். கதவடியில் தெரிந்த அவனது முகத்தில் தயக்கம் மண்டியிருந்தது.

நான் வெளியே போனேன்.

என்னைத் தயக்கத்தோடு எதிர்கொண்ட அவனது முகத்தை ஏறிட்டேன். கம்பீரமான அவனது முகம் திடீரென வாடினாற்போல அவன் களைப்புற்றிருந்தான்.

''என்ன சுமணா, என்ன?''

வலிந்து சிரிக்க முயன்றவனின் புன்னகை வாயிலேயே கருகிப்போக சுமணதாசா தயங்கிக்கொண்டு சொன்னான்;

''கேட்கவேண்டும் ஒரு விஷயம். ஆனால் கேட்பதற்கோ மனம் மிகவும் சங்கடப்படுகிறது சிவா ...''

நான் சிரித்துக்கொண்டே அவனைக் குத்திக்காட்டும் பாவனையில்,

''ஏன் சுமண, எடுத்ததெற்கெல்லாம் சங்கடந்தானா? என்னிடம் கேட்பதற்குச் சங்கடப்படுகிறீரே... ஏன் உமக்கு உம்முடைய அம்மாவைத் தவிர வேறுயாருடனும் நெருங்கி உரிமையோடு பழகத்தெரியாதா? எதற்காகச் சங்கடப்படுகிறீர் ... இனி இப்படி ஒரு நாளும் சொல்லவேண்டாம் .. '' என்றேன்.

அவன் சலனமற்றுச் சிரித்தான். செத்த புன்னகை!

அதே தயக்கத்தை மாற்றாது கேட்டான் சுமணதாசா:

''எனக்கு மிக அவசரமாய் முப்பது ரூபா வேண்டும் ...''

சுமணதாசா இழுத்த குரலிலேயே தொடர்ந்தான்:

''அம்மாவுக்கு அடுத்த கிழமைவரைதான் பணங்கிடைக்கும். பணங் கிடைத்த உடனேயே திருப்பித்தந்து விடுகிறேன் சிவா''

என் மனம் பகீரென்றது. உயரத்தில் பறந்த மனக்குருவி கல்லடிபட்டு இறக்கைகள் சிதைந்து கீழே விழுந்து படபடத்த நெஞ்சப்பதைப்பு:

எனது சூட்கேசின் அடிமூலைக்குள் இருக்கும் பணத்தை மனக் கைகளினால் தடவி எடுத்துக் கணக்கிடுகின்றேன். ஒரே ஒரு தாளும் சில்லறைகளுமுட்பட மொத்தம் மூன்று ரூபா எண்பத்தைந்து சதங்கள்.

சுமணதாசா யாரிடமுமே கைநீட்டிப் பணங்கேட்பதில்லை என்பதை யாவரும் அறிவோம். அந்தத் தைரியத்திலேதான் என்ன கேட்கவேண்டுமோ அதைக்கேள் என்று மிகப் பிடிவாதமாக அவனை வற்புறுத்தினேன். இப்போதோ? இப்போதுதான் முதல் தடவையாக சுமணதாசா பணங் கேட்டிருக்கின்றான் — அதுவும் தரித்திரநாராயணனாகிய என்னிடம் வந்து நம்பிக்கையோடு கைநீட்டி நிற்கிறான். இதுவரை ஒன்றையுமே எச்சந்தர்ப்பத்திலும் கேளாத ஒருவன், இப்போது கேட்கும்போது கொடுக்க வழியில்லாமற் போய்விட்டதே என்ற கவலையோடு மௌனமாய் நின்ற முகவாட்டத்திலே விஷயத்தைப் புரிந்துகொண்ட சுமணதாசா தன்னை மீறிப் பெருமூச்செறிந்தான்.

நான் சுமணதாசாவை எனது அறையடியிலேயே நிறுத்திவிட்டு எனக்குத் தெரிந்த அனேக நண்பர்களிடம் சென்று கடன் கேட்டேன்.

அன்று பெப்ரவரி மூன்றாந் திகதி.

அனேகமாக மாதத்தில் பத்தாந் திகதிக்குப் பிறகுதான் மாணவர்களாகிய எங்களிடம் காசு புழங்கும்.

ஏமாற்றத்தோடு சுமணதாசாவிடம் சென்று எனது நிலைமையைச் சொன்னேன். அவன் இப்போது எனது தயக்கத்தைப் பார்த்துச் சிரித்தான். அழுது கொண்டே சிரித்தான் போலும்!

## ஐந்து

பகல் உறக்கங் கொண்டிருந்த என்னை அன்று மாலை சுமணதாசா வலிந்து அழைத்தமையினால் நான் கண்டிக்குச் சென்றேன். வழக்கத்திற்கு மாறாக அன்று சுமணதாசா முழுக்கைச் சேர்ட் அணிந்திருந்தான். அவனது களைத்த முகத்தினிலே சிந்தனை அடைத்திருந்தது. பஸ்ஸிற்குள்ளிருந்தபடியே வெளியே பார்த்துக்கொண்டிருந்த என்னை அவன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதனை உணர்ந்தபோதும் அதைப்பற்றி ஏனோ ஒன்றுமே கேட்க அந்நேரத்தில் நான் விரும்பவில்லை.

பஸ், கண்டி பஸ் நிலையத்திலே போய் நின்றதும் நாங்கள் இருவரும் இறங்கிக் கொண்டோம். 'எங்கே போகப் போகின்றோம்?' என்ற மௌனமான என் முகக்கேள்வியை அவதானித்த அவன், பதிலாக ''தலதா மாளிகாவிற்குப் போகலாம்'' என்றான்.

கண்டி தலதா மாளிகைக்கு எதிரேயுள்ள கண்டி வாவியின் மதிற்புறத்தருகே நின்றுகொண்டிருந்த வயோதிப மாதொருத்தி என்னோடு வந்த அவனைக் கண்டதும் புன்னகை பொலிந்த முகத்தோடு ''புத்தா...'' என்றபடி வந்தாள். வாஞ்சையெல்லாம் சுமந்துவந்த மகனே என்ற அந்த அழைப்பு எவரையும் சிலிர்க்கவைத்துவிடும்; அவ்வளவு கருணையும், வாத்சல்யமும் இழைந்த குரல்.

சுமணதாசா தனது தாயை முதல் தடவையாக எனக்குக் காண்பித்தான்.

தூய மென்மணங் கமழுகின்ற வெள்ளலரிப் பூக்கள் எட்டிப்பார்க்கின்ற சிறிய கூடையினை அவள் தன்னுடைய சுருக்கம் விழுந்த கையிலே வைத்திருந்தாள். எனக்கு அவளைப் பார்த்த முதற் பார்வையிலேயே கண்ணினுள்ளே காட்சியொன்று விரிந்தது. கடுகண்ணாவையின் இருண்ட குகைகளைத் தாண்டிக்கொண்டு புகையிரதம் ஓடிச் செல்கின்றபோது, அதன் இரு புறங்களிலும் கருங்கல் மலைச் சுவரிலே வழிந்து கசிந்து கருங்கல்லிற்குப் பசுமை பூசுகின்ற நீரினது குளுமைபோல — வறுமையிலே விளைந்த அவளின் முகத்திலும் தளிர்த்த பசுமையென புன்னகையும், வாஞ்சையும் பொலிந்து விளங்கின. இருபது வருஷங்களாய் மூன்று தேவைகளை மகனுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல கஷ்டங்களையும். வேதனைகளையும் வெளியே காட்டாது மனதினுள்ளே தாங்கிக்கொண்டு, எதிர்காலம் பற்றிய ஒரே நம்பிக்கையோடு நிற்கும் அந்த முதியதாயைப் பார்க்க என் இதயம் மிகவும் மரியாதை கொண்டது. அவள் மிக மிகச் சுயநலமான சிந்தனையோடு வளர்ந்து, தன் மகனின் சிந்தனைகளையே மருங்கடித்துத் திசைதிருப்பியவளாயினும், அவளை அப்படி வாழச் சிந்திக்க வைத்த — வாழும்படி தூண்டிய காரணங்களைத்தான் நான் மனதாரச் சபித்துக்கொண்டேன்.

நரைத்ததலை. இடுங்கிய கண்கள். கருகிய கோட்டைமானுப்புல் இதழ்கள்போல சுருங்கிய கூனுடல். அவளின் காய்ந்த கைகளைப் பார்த்தேன். கருங்கற்களை உடைத்துக் காய்த்துப்போயிருந்த கையினால், வெள்

ளலரிப் பூக்களை உயர்த்தி மிதத்திக்கொண்டு ஒரு பார்சலை எடுத்துச் சுமண தாசாவின் கையிலே கொடுத்துவிட்டு என்னையும் பார்த்துக்கொண்டு சிங் களத்தில் ஏதோ சொன்னாள். மகனுக்காகத்தானே செய்துகொண்டு வந்த கொண்டைப் பணிகாரமாம். என்னையும் கட்டாயந் தின்னும்படி சொல் கிறாள் என்று தாய் சொன்னவற்றை எனக்கு சுமணதாசா மொழிபெயர்த் துச் சொன்னான். பிறகு தாயும் மகனும் நிறையப் பேசிக்கொண்டார்கள். தாய் இடையிடையே கண்களிலே துளிர்க்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். எனக்குச் சிங்கள மொழி தெரியாவிடினும் தாயின் உணர்ச்சி களும், இருபது வருஷக் கனவுகள் பற்றிய கண்ணீரின் அர்த்தமும் தெளி வாகவே விளங்கிற்று. நான் அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

பிறகு என்னையும், தாயையும் அழைத்துக்கொண்டு சுமணதாசா தேனீர்க் கடைக்குப் போனான். தேனீர் அருந்தியபடியே சுமணதாசா என் னையும் தாயையும் அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தான். நான், அவனது தாய் ''எங்கே வசிக்கின்றாள், வீடு எங்கே?'' என்று கேட்டபோது அவன் நிராசை தோய்ந்த குரலில், கடையின் மேற்கு மூலைச் சுவரிலுள்ள புத் தர் சிலையின் முன் ஒளியுமிழும் மின்சார விளக்கைப் பார்த்துக்கொண்டே சொன்னான்:

''இருபது வருஷங்களாய்ச் சொந்தமாக நல்ல வீடொன்றினைக் கட்ட அம்மா முயற்சிகள் செய்தாள். திட்டங்கள் இட்டாள். முடியவே இல்லை. இனி நானேதான் தன்னுடைய ஆசையை நிவேற்றவேண்டுமாம் — உத்தி யோகம் பெற்றுக்கொண்டு''

தாய் எங்களிருவரையும் பரபரக்க நோக்கினாள்.

அவள் பார்வையின் கேள்வியைப் புரிந்துகொண்ட மகன் சிங்களத் திலே சொன்னான். தாய் அவனை மிக நம்பிக்கையோடு பார்த்துப் புன் னகைத்தாள். அவன் என்னதான் சொல்லியிருப்பானோ?

தாய் எங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்ளும்போது சூழலை அவ தானியாது மகனை உச்சிமோந்து முத்தமிட்டாள். சுமணதாசா தாயி னுடைய கைகளைப் பாசந்ததும்பப் பற்றிக்கொண்டு, கண்களிலே அவற்றை ஒற்றிவிட்டு தனது சட்டைப் பைக்குள்ளிருந்து ஏழு ரூபாவை எடுத்து, அதிலே ஐந்து ரூபாவைத் தாயின் கைகளிலே கொடுத்தான். முதியதாய் திகைத்ததைக் கண்டு அவன் ஏதோ சொல்ல, சுருக்கம் விழுந்த தாயின் முகத்திலே மெழுகுதிரியின் வெளிச்சம்போலப் புன்னகை துடித்து நெளிந் தது. தாயை, சுமணதாசா மாத்தளைப் பஸ்ஸிலே ஏற்றிவிட்டான். பஸ் புறப்பட ஆயத்தமாகும்போது அவள் கைகளை இறுகப்பற்றி அவற்றில் முத்தமிட்டுக் கலங்கித் தளும்பிய கண்களோடு விடைபெற்றுக் கொண் டான். அவனது நடவடிக்கைகள் எனக்கே அசாதாரணமாகப்பட்டன.

கண்டியிலுள்ள அனேக கடைகளில் சுதந்திர தினத்திற்காக அலங் கரிப்புவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பெரியதோர் அலங்கார வளைவைப் பார்த்துக்கொண்டு சுமணதாசா சொன்னான்:

''எனக்கும் சுதந்திர இலங்கைக்கும் நாளைக்கு ஒரே வயது — இருபது வயது!''

நான் மனதினுள் எரிந்தேன்.

பற்ருக்குறை, சுரண்டல், அந்நியர் ஆதிக்கம் ஆகியன ஒழியாத தேசம் சுதந்திரம் பெற்றிருக்கிறதாம் ... இருபது வருஷ சுதந்திரம்!

சுமணதாசாவும் நானும் அன்று ஒன்ருகவே சாப்பிட்டோம். அவன் என்னைப் பற்றியும், எங்களோடு பழகிய நண்பர்களைப் பற்றியும் நிறையக் கதைத்தான். ''நீங்கள் செய்த உதவிக்கெல்லாம் என்னுல் பிரதியுபகாரமாக எதுவும் செய்ய முடியாமற் போய்விட்டதே ..'' என அவன் ஏக்கத்தோடு கூறியபோது. நான் நீர் ஏன் இப்படிச் சொல்கிறீர் எனக் கேட்க அவன் ஏதோ கூறி மழுப்பிவிட்டான். திடீரென்று, கைவலிப்பவன் போல, முகஞ்சுருங்கி சுமணதாசா சேர்ட் கையை இழுத்துவிட்டான். அவனது கையைப் பார்த்தேன். நீண்ட பிளாஸ்டர் ஒட்டியிருந்தது.

''என்ன ... என்ன இது? ...''

என் பரபரப்பை அவன் மதிக்கவில்லை; எதுவித தயக்கமுமின்றிச் சொன்னுன்:

''இன்றைக்கு நான் இரத்ததானம் செய்தேன். இரக்கத்தால் அல்ல பணத் தேவையினுல்தான்! ஒரேயடியாக முப்பது ரூபாவுக்கே இரத்தங் கொடுக்க நினைத்தேன். முடியவில்லை. நான் எதிர்பார்ப்பவை ஒன்றும் நடப்பதில்லை ... சரிசரி அதெல்லாம் போகட்டும், சிவா — நாளைக்கு லீவு அல்லவா? எப்படிப் பொழுதைக் கழிக்கத் திட்டம்?''

கதையைத் தடம்புரளவைக்கும் சுமணதாசாவின் பேச்சை நான் முற்ருகவே கவனியாது அவனைப் பார்த்தேன்.

''இதென்ன வேலை சுமணு? உடம்பு, அதுவும் உம்முடைய முக்கியமான படிப்புக் காலத்தில் இந்த உடம்பு இவைகளையெல்லாம் தாங்குமா?''

சுமணதாசா களங்கமற்றுச் சிரித்தான்.

''என்னுடைய படிப்புக்காகவும், வயோதிபத் தாயின் ஆசைக்காகவும் நான் என்னுடைய சதையை விற்கக்கூடத் தயாராயிருக்கின்றேன்; ஆனுல் வாங்குவதற்கு ஆளில்லையே சிவா ... எவ்வளவுதான் நான் உங்களோடு பழகியிருந்தாலும் எல்லாவற்றிலுமே எனக்கு நம்பிக்கை விட்டுப் போய்விட்டது ...''

நான் தர்மபாலாவை நினைத்துக்கொண்டு சொன்னேன்:

''எதிலும் உம்மைத் தனிமைப்படுத்திப்பார்த்து நினைக்கவேண்டாம். பல்லாயிரம் இளைஞர்கள் இதே நிலையிலிருக்கின்ருர்கள். பலலட்சம் மக்கள் சுரண்டலின் கொடுமையினுலும் வறுமையினுலும் அழுந்துண்டு துன்பக் கேணியிலே கிடக்கின்ருர்கள். நாங்கள் ஒன்றுபட்டுப் போராடி எங்

கள் கைவிலங்குகளை அறுக்கவேண்டும். சுரண்டலற்ற, பேதம் எதுவுமற்ற சமுதாயத்திலேதான் நீரும் அம்மாவும் ஆசைப்படும் மூன்று தேவைகளும் எல்லோருக்கும் கிடைக்கும்''

நான் சொல்லி முடிக்கவில்லை; அவன் பட்டென்று கூறினுன்:

''அந்தச் சந்தோஷமான நாளில் (அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு நாக்கைக் கடித்தான்) எல்லாவற்றிற்கும் நான் பிந்திப்போய் விடுகிறேன் ... ஐ ஆம் சூ லேற் ...''

எனக்கு அவன்மீது வெறுப்புப் பொத்துக்கொண்டு வந்தது. ஒன்றும் பேசாமலே நடந்து கொண்டிருந்தேன்.

மண்டப வாசலில் ஏறுகின்றபோது, தன்கையிலே இருந்த கொண்டைப் பலகாரங்கள் நிறைந்த பார்சலை என் கையிலே தந்துவிட்டு, ''சிவா என்னுடைய அறையில் எலி உலாவுகின்றது. நீர் இதனைக் கவனமாக வைத்திரும். காலையிலே சாப்பிடலாம்... உமது அறைக்கும் சில வேளை இரண்டுகால் எலிகள் வந்து உலாவும்... மிகக் கவனம்...'' என்று சொல்லிச் சிரித்தான்.

அன்றிரவு நன்ருய் உறங்கிவிட்டேன்.

படுக்கையில் கிடந்த என்னைத் தர்மபாலா உலுப்பி எழுப்பினுன்.

சில கணங்களில் நான் கண் விழித்தேன். அரண்டு சோம்பலோடு எழுந்த என்னை உடனே உடுத்திக்கொண்டு வரும்படி தர்மபாலா சொன்ஞன்:

என்ஞல் அவதி தாங்கமுடியவில்லை, ''தர்மே ... அப்படி என்ன அவசரம்?'' என்றேன்.

''சிவா, சுமண தற்கொலை செய்து விட்டான்''

தர்மபாலா அவ்வார்த்தைகளை வெகு நிதானத்தோடு சொன்ஞன்.

''ஆ ...?'' எனக்குச் சொற்களே வரவில்லை.

அடி வயிற்றினுள் ஏதோ செய்தது.

இதயம் துடித்துப் பதறியது.

நான் சுமணதாசாவை முதன் முதலிலே சந்தித்த மகாவலி கங்கைக் கரையிலே — வளைந்து முறிந்த பச்சை மூங்கிலருகேயுள்ள சின்னக் கருங்கல்லடியிலே, கைகளால் தரையை விறண்டி, நகத்தில் வடிந்துகாய்ந்த இரத்தக் கட்டிகளுடன் உடலை வலித்தபடி, வேதனையே முகமாய், முகங் கோணி வாய் நெளிந்து கடைவாயில் பெருகிய நுரையோடு கோரமாகக் கிடந்தான் சுமணதாசா. எனக்கு அழவோ கதறவோ, தலைதலையாய் அடித்துக்கொள்ளவோ தோன்றவில்லை. நெட்டை மரமாகி நின்றேன். அவன் மேலே துளியளவுகூட அனுதாபந் தோன்றவில்லை. மனதின் ஒரு மூலையிலே அவனது வாழ்க்கையின் நோக்கை நினைத்துக் கசப்புணர்ச்சி சுரந்தது. இலையான்கள் மொய்க்கும்! அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றபோதும் மனம் எங்கெல்லாமோ பறந்து பரந்தது. அவன்

குடித்த விஷப் போத்தலின் அருகே சிறு பூச்சிகள் செத்துக் கிடந்தன. அவனுடைய பிணத்துக்கு எதிரே தம்மிகா சோகச் சித்திரமாய் நின்ருள். கண்ணீர் கசியும் கண்களால் அவனது உடலைப் பார்த்துக்கொண்டே யிருந்த அவளுக்கும் தன்னை மன்னிக்கும்படி உருக்கமாகக் கடிதம் எழுதி வைத்திருந்தான் சுமணதாசா. அந்த இரக்கமுள்ள கோழை ஆயிரமாயி ரம் ஆசைகளற்று மூன்று ஆசைகளுக்காக இளமையின் சுக போகங்களை யெல்லாம் துறந்து, அந்த ஆசைகளையும் எய்தமுடியாது — தோல்வி மனப் பான்மையோடு புயலின் முன்பு தனியே நின்று வளைந்து முறியும் மூங்கி லென வாழ்வின் போராட்டத்திற்குப் புறமுதுகிட்டு நஞ்சு குடித்து விட் டானே என்ற பாவனையில்தான் அவள் கண்களில் கண்ணீரும் முகத்தினில் சோகமும் பொங்கியிருக்கும்.

தர்மபாலா ஒரு வெள்ளைச் சீலை கொண்டு வந்து சுமணதாசாவின் பிணத்தினை மூடிவிட்டான்.

இன்னும் சில நிமிஷங்களில் பொலிசாரும், சுதந்திர தினக் கொண் டாட்டமொன்றிற்குப் போகவிருந்த மரண விசாரணை அதிகாரியும் அங்கு வந்து விடுவார்கள்.

என்னோடு சுமணதாசா நடந்துகொண்டவிதம், இறுதியாகத் தாயோடு கதைத்துவிட்டு வாஞ்சை ததும்ப விடைபெற்ற மாதிரி ... ... யாவுமே என் மனதிலே நீர்ச் சுழிகளாகக் குமிழியிட்டு மறைந்தன.

விமோசனம் கிடைக்குமென்ற நம்பிக்கையைச் சுமந்த அந்த முதிய தாய், அவளின் இருபது வருஷங்கள் நிறைந்த கனவுகள், அந்தச் சாதா ரண மனிதனுக்குரிய மூன்று ஆசைகள், கருங்கல் உடைத்துக் களைத்துப் போன உழைக்கும் கைகள், இப்போது அனுதையாகிவிட்ட வயோதிப அன்னை, படிப்பிற்காக இரத்தத்தை விற்று ஏழ்மையிலேயே தோன்றி, பூத்து மலர்ச்சி காணுமல் தற்கொலை செய்துகொண்ட — இளமையின் நம் பிக்கையையெல்லாம் துறந்து பிணமாகிவிட்ட சுமணதாசா ... ...

என்னையே பார்த்துக்கொண்டு நின்ருன் தர்மபாலா.

தம்மிகா தனக்குச் சுமணதாசா கடைசியாக எழுதிய கடிதத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

விஷத்தால் சதை நொருங்கிய உடலினை மூடிய வெள்ளைச் சீலையில், தெறித்த கறுப்பு மைத்துளிகளாய் இலையான்கள் மொய்த்திருந்தன.

நான் மௌனமாய், மரமாய் நின்றேன்.

சுமணதாசாவோடு நேற்றுக் கதைத்த கதைகளெல்லாம் செவிப் பறையினுள் ஒலித்தன.

''எனக்கும் சுதந்திர இலங்கைக்கும் நாளை ஒரே வயது — இருபது வயது'' என்னை மீறி என் நெஞ்சினுள் ஆவேசம் பொங்கிற்று.

''சுமணு, சுமணு, நீ ஒரு வெறுத்தற்குரிய கோழைபோல வாழ் வோடு போராட முடியாது செத்துப்போய் விட்டாயேடா ... சக்திமிக்க இளமைக்கே முகத்தில் கரிபூசிவிட்டு, உன் கைகளுக்கு வேலை கொடுக்காது அவச்சாவு செத்துவிட்டாயேடா ...''

## தோழமையென்றொரு சொல்

"தம்பி உன்ரை காசு இந்தா''

ஐயாத்துரையிடம் இரண்டு கைகளையும் நீட்டிக் காசை வாங்கி மடிக்குள் வைத்தான் நாகலிங்கம். ஐயாத்துரையோடு நாகலிங்கமும் கருவாடு விற்பதற்குச் சென்றிருந்தான். இன்றுதான் அவர்களிருவரும் மீண்டும் வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

''தம்பி காசை வடிவாய் எண்ணிப்பாரும்''

நாகலிங்கம் மடியை உள்ளாய்ச் செருகியபடியே சிரித்தான்.

''தேவையில்லை. நீங்கென்ன வேறையாளோ?''

நாகலிங்கம் தன்னுடைய கலியாணத்துக்கென இருநூறு ரூபா வரையில் சேமித்து வைத்திருந்தான். அவனுடைய கலியாணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன் ஐயாத்துரை அவனிடம் ஓடி வந்து, தன்னுடைய காணியைக் கோயில் முகாமைக்காரரிடம் ஈடு வைத்ததாயும், அவர் காணியை உடனே மீளும்படி சொன்னதாகவும் கூறிவிட்டு நாகலிங்கத்தைப் பார்த்த பார்வையில் அவன் கூறமுயன்ற மிகுதிச் சொற்கள் ஒலித்தன.

நாகலிங்கம் யோசித்தான். பிறகு உள்ளே சென்று தைலாப் பெட்டியுள் தாளாயும், சில்லறையாயுமிருந்த காசில் நூற்றைம்பது ரூபாவை எடுத்துக்கொண்டு வந்து ஐயாத்துரையின் கையிற் கொடுத்தான்.

அவனும் ஐயாத்துரையும் சின்னவயதில் தூண்டில் போட்டு மீன் பிடிக்கத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை ஒன்றாகவே திரிகின்றனர். ஐயாத்துரையோடு மீன் பிடிக்க வள்ளத்திற் பல வருஷங்களாக நாகலிங்கம் 'கூடி'ச்சென்று வருகின்றான்.

யோசனையோடு வந்த நாகலிங்கத்தின் முதுகில் ஐயாத்துரை செல்லமாகத் தட்டினான். ''வீடு கிட்டக்கிட்ட மனிசியின்ரை நினைவுதான் தம்பின்ரை மண்டேக்கை... சரியடப்பா றேட்டைக் கவனமாகப் பார்த்துப் போ.''

''இல்லையண்ணை''

நாகலிங்கத்தின் முகத்தில் அசடு வழிந்தது.

× × × × × ×

''எவள நேரமெண்டு காத்தண்டிருக்கிறன்''

கண்களின் களிப்போடு அவள் அவனெதிரே வந்தாள். முழுகிய தலைமயிர் படியாமல் பிரிபிரியாய்ச் சிலிர்த்து அவளின் முதுகிலும் தோட்களிலுமாய் வழிந்து கிடந்தது.

அவன் உள்ளே சென்று திண்ணையில் இருந்தான். அவனுக்குக் கலியாணமாகி இன்னும் இரு கிழமைகள் கூட ஆகவில்லை. சிறிது நேரத்திற்குள் பாக்கியம் அங்கு வந்து அவனிருந்த திண்ணையில் அவனுக்காகக் கிண்டி வைத்திருந்த களியைச் சட்டியோடு வைத்துவிட்டு ஒட்டில் இருந்தாள்.

நாகலிங்கம் களியை பரிமிளால் அள்ளித் தின்றுகொண்டிருக்க இரண்டு நாட்களாக மனதுள் புதைத்து வைத்திருந்த கதைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவனுக்கேயுரிய பாவனையில் அவள் சொல்லிக்கொண்டிருந்தாள். கதைத்துக் கொண்டிருந்த பாக்கியம் இடையில் சிறிது நிறுத்தி யோசித்துவிட்டு அவனைப் பார்த்தாள்.

''ஒண்டு சொல்லுவன் கோவிப்பியளே''

''என்ன? என்னெண்டு சொல்லுமன்?''

''நீர் கோவிக்க மாட்டீர்தானே?''

''ஓம் கோவிக்கன் சொல்லும்''

''உம்மடை அடுக்குப் பெட்டிக்குள்ளை தாளாக ஐஞ்சு ரூவா வைச்சிருந்தனீரெல்லோ...''

''ஓ, வைச்சிருந்தனான் சொல்லும்''

அவளின் தயக்கம் சிறிது சிறிதாய்க் குறைய, தெளிந்த கடலின் மெதுவான அலை புரளல்போல அவள் ஆறுதலாகின்றாள்.

''அந்தக் காசை எடுத்துப் பொன்னம்மாக்காட்டைக் குடுத்திட்டன். அவ பிள்ளைக்குச் சன்னியெண்டு ஓடித்திரிஞ்சா. கந்தையரும் அவ காசுக்குப் போக நாயைச் சூக்காட்டி விட்டிட்டாராம். அவவைப் பார்க்க மன வருத்தம் வந்திட்டுது. எடுத்துக் குடுத்திட்டன். நீங்கள் கோவிக்கிறியளே ? என்ன செய்யிற பாவம். ஏழையளுக்கு ஏழையள் உதவாமை.. என்ன நான் சொல்லுறன் நீங்க பேசாமலிருக்கிறீங்க...''

அவள் நாகலிங்கத்தைப் பார்த்தாள். நாகலிங்கத்திற்குத் தன்னுடைய மனைவி இவ்வளவு பேசுவாள் என்று இன்றைக்குத்தான் தெரியும். அவளின் இரக்க குணம் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்த, அவளை அப்படியே தாவி அணைத்து... அவனின் பிடியுள் அவள் இறுகி முனகினாள்.

பாரைமீன் போல அவனது உணர்வுகள் துள்ளிக் குதித்தன. ஒட்டி மீனைப்போல வழுவழுப்பான அவளின் உடலோடு, அவனுக்கு என்ன

மூர்க்கம்! மத்தியானப் பொழுதிலும் அவளின் அணைப்போடு குழைந்து... எத்தனை களிப்பு! வெளியே யாரோ அழைப்பது கேட்கின்றது.

'முகத்தினில் முத்திட்ட வேர்வையைக்கூடத் துடைக்க நேரமற்ற இன்பப் பொழுதை கடூர அழைப்பால் குழப்பி விட்டவனைக் காலால் நசித்து தரையோடு அரைத்தால் என்ன?'

நாகலிங்கத்தின் முகத்தில் ரௌத்ரம் பொங்கியது.

அவன் பாயிலிருந்து எழ, அவள் சேலையை அவசரமாக அள்ளி உடுத்தினாள்.

படலை கிறீச்சிட்டு அவன் கையோடு எற்றுண்டது. எத்தனை ஆத்திரத்துடன் அவன் படலையை அவிழ்த்தான். ஈச்சங்கம்பு பிளக்கும் சத்தகம் கையிலிருந்தால், எதிரே வருபவனைக் கொலை செய்து விடுவான் என்று நினைக்கத் தூண்டிய அவனின் கோபம் பொங்கிய தோற்றம், வெளியே நின்றவரைப் பார்த்ததும் கணவாய் முட்டைகள் கடல் நீருள் உடைந்தழிவதுபோல் உருவற்று அவனுள்ளேயே அழிந்து அமுங்கி விட்டன.

வெளியே அலம்பற் படலையோரமாக, சங்கிலியால் கட்டிய நாயைப் பிடித்தபடியே நின்றவர் கந்தையர். அவன் குடியிருக்கும் காணியின் சொந்தக்காரர். அவனும் ஐயாத்துரையும் மீன் பிடிக்கும் கடற்காணிக்கும் சொந்தக்காரர் அவர்தான்.

''வாருங்க வாருங்க...''

அவன் சால்வைத் துண்டைக் கக்கத்துள் வைத்துக்கொண்டு குரலோடு மசுந்துகிறான்.

''எத்தனை நேரமெண்டடா உன்னைக் கூப்பிர்ற... ஆ?''

அவரோடு நாயுங் குரைத்தது. ஆங்காரமும் திமிரும் குடி கொண்ட அந்தக் குரலினை மோதியெறிய வலுவின்றி நாகலிங்கம் குனிந்து நின்றான். அந்த உழைப்பினில் திமிர்ந்த தேகம், பண்பாடற்ற காட்டு மிராண்டித் தனமான அச் சொற்களில் கூழைக் கும்பிடிட்டு நின்றது.

''சரி சரி இப்ப அதொண்டுமில்லை. நீயென்ன இஞ்சை குத்தகைக்கிருக்கிறியோ, அல்லாட்டிச் சொந்தக் காணியெண்டு எண்ணியிட்டியோ? பாரன் தென்னம் பிள்ளைகளெல்லாம் கருகிப் போகுது... இஞ்சை இந்தக் காணி ஒரு பக்கம்... அங்கை கடற்காணி ஒரு பக்கம்... ஒரு கிழமையா எங்களுக்கு கறிக்கும் வழியில்லை. உனக்குக் கலியாணம் எண்டாப்போலை எங்களுக்கென்ன? நீ ஒத்த பொறுப்பைச் செய்யாதனி... ஓ நீங்க இப்ப பெரிய ஆக்களெல்லோ? அவன் ஐயாத்துரையெண்டவன், ஒரு பொறுக்கி.''

கந்தையரின் குரல் உச்சத்தில் ஏறி விட்டது. ஐயாத்துரையைப் பொறுக்கி என்று சொன்ன பொழுது நாகலிங்கத்திற்கு மனதினுள் கோபம் குபீரிட்டது; ஆனாலும் அவன் மௌனித்தே நின்றான். கந்தையர் ஓயவில்லை.

''டே நாகலிங்கம்... அவன் ஐயாத்துரையெண்ட வடுவாவுக்குச் சொல்லு... இனி என்ரை கடற்காணிப் பக்கம் தலைவைச்சும் படுக்கப்படா ஓம். சொல்லிப் போட்டன். நீயும் இண்டைக்கே காணியை விட்டு வெளிக்கிடு...''

''என்ன?"

நாகலிங்கத்தின் உள்ளம் இடிய அதிர்வின் பெருமூச்சுச் சிறி எழுந்தது. கடலின் உள்ளே வாய் விரித்துக் கிடந்தபடியே பிராணியையோ, ஆட்களின் காலையோ தன்னில் பட்டதாய் உணர்ந்து கொண்டதும் கவ்விக் கொள்ளும் ஆர்க்கைப்போல அவனது நெஞ்சைக் கந்தையரின் ஒலி கடித்து இழுத்து வெளியே போட்டுக் குதறிக்கொண்டிருந்தது.

''நீங்க இப்பிடிச் சொன்னு? ஊருக்கு பெரிய நீங்க எங்கட பிழையளுக்கெல்லாம் கோவிக்கலாமே...?''

''டே பரதேசி நாயே... பொத்தடா வாயை''

அவர் குரல் முடியவில்லை. மண்டாவின் வேகத்தோடு பாக்கியம் அங்கே குமுறிக்கொண்டு வந்தாள்.

''கதைக்கிறதை மட்டுமரியாதையோடை கதையுங்க. நாங்க அப்பிடி வழியத்த பரதேசியளில்லை''

கந்தையர் திடுக்கிட்டார். இப்படி அவரை எதிர்த்தவர்கள் யாருமில்லை. அவள்தான் முதல்.

நாகலிங்கத்திற்கு 'முழி' பிதுங்கியது.

''கந்தையர் நாயின் சங்கிலியைக் கைவிட்டார்.

''என்னடி தேவடியாள் நீ சொல்லிறுய்?''

அவர் குரலின் மூர்க்கத்தை அவளின் குளறல் சன்னமாகப் பாய்ந்து துளைத்தது,

''எணை பொன்னம்மாக்கோ இஞ்சை வந்து பாரணை இந்த வீட்டிலை நடக்கிற கொடுமைகளை...''

மீண்டும் மீண்டும் அவள் அதையே ஒலித்தாள். அதற்குள்ளாக அவளின் வீட்டிலிருந்த எல்லாப் பொருட்களையும் கந்தையர் தூக்கி வெளியே எறிந்து விட்டார்.

கந்தையர் ஒவ்வொரு பொருளையும் தூக்கி வெளியே எறியும் போது நாகலிங்கம் கெஞ்சும் கண்களுடன் அவர் முன்னுகப் போய் நின்றுன்; இடையிடையே கெஞ்சியும் பார்த்தான். ஆனல் கந்தையர் அவனைப் பார்க்கவுமில்லை; அங்கே மனிதர்கள் நிற்பதாய்க் காட்டிக் கொள்ளவுமில்லை.

''எந்தக் கொடுவினையிலை போவான்ரை அநியாயமடி இது?''

பொன்னம்மா அங்கு நின்ற கந்தையரைக் காணுமலே கேட்டாள். அதற்குள் பாக்கியம் ஓடிவந்து பொன்னம்மாவின் மார்பினுள் அடைக்கலம் தேடிக்கொண்டு விம்மினுள்.

''என்ரை செல்லம். என்ன நடந்ததடி சொல்லன்?''

அதற்குள் நாகலிங்கம் சொன்னுன்:

''அக்கா அதுகளைப் பிறகு கதைப்பம். இப்ப அந்தச் சாமான்களை எங்கையெண்டாலும் கொண்டு போகோணும்''

''என்னடா தம்பி, என்ன நடந்ததெண்டு சொல்லன்''

''அங்கை வாருன் பொரிவான்'' பாக்கியத்தின் ஆக்ரோஷமான குரலோடு கையும் குறிகாட்டி நீண்டது. நாகலிங்கம் பாக்கியத்தை அதட்டினுன்.

''பாக்கியம் வாய் பொத்தோணும்; கண்ட கதைகள் கதைக்கப் படாது''

பாக்கியம் மௌனமானுள்.

கந்தையர் பொன்னமாவுக்கு முன்னுல் வந்து நின்று விஷயத்தைச் சொன்னுர்.

குரலிலே மாபெரும் சாதனையைச் சாதித்த பெருமிதம்.

பொன்னம்மாவிடம் அவ்வளவு குரலிருக்கும் என்று யாருக்கும் அன்று வரை தெரிந்திருக்காது. ஒல்லியாய் விழிகள் உள்பிதுங்கி மௌனமாய்த் திரிந்த பொன்னம்மாவுக்கு வேகாரங் கொடுத்த அந்தச் சக்தி எதுவோ?

"பறப்பான். டேதம்பி, பிள்ளை வெளிக்கிடுங்க. இந்தப் பறப்பான்ரை உத்தரியந் தாங்கேலாமைப் போச்சு. அண்டைக்கு காசு கேட்டுப் போக நாயைச் சூக்காட்டின அரக்கன் இவன்... ஊரை அபகரிக்கின்ற இவையின்ரை தலையிலை எப்ப வெள்ளிடி விழுமோ? இந்த அறுவாருக்கு அழிவில்லையோ?''

பொன்னம்மா பிடிமண் அள்ளி எறிந்து திட்டினுள். கந்தையர் எதுவுமே பேசவில்லை. ஆனுல் கண்களிலே வன்மம் பொங்கிக் குமுறிற்று.

× × × × × ×

''தம்பி, எழையளுக்கு வாற கஷ்ட நஷ்டமெல்லாம் ஏழையளுக்குத்தான் தெரியும். நீ ஒண்டுக்கும் யோசிக்காமை எழும்பிப்போய் பார்க்க வேண்டிய அலுவல்களைப் பார்''

நாகலிங்கம் திண்ணையிலேயே, குத்துண்ட நங்கூரம்போல இருந்தான். அவனுக்குள் பலவித யோசனைகள் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன. அவனுக்கு கலியாணமாகி ஒரு கிழமையாவதற்குள் அவனது வாழ்க்கைக்கு இருந்த ஆதாரங்கள் எல்லாமே போய்விட்டன. அவனது தாய் தகப்பன் வசித்த குத்தகைக் காணியிலிருந்து அவன் வெளியேற்றப்பட்டுவிட்டான். சின்ன வட்டனுக இருந்த காலத்திலிருந்தே அவன் தவழ்ந்து, நடந்து, உறங்கி மகிழ்ந்த மண் அது. அவன் சின்னவனுக இருந்தபோது அந்தக் காணி நெருஞ்சிப் பற்றையாக இருந்தது. நாகதாளியும், இக்கீரியும், தூதுவளையுமே நெருஞ்சிகளுக்குள் அடர்ந்து காடாகிக் கிடந்த அந்தக் காணியை அவனது தாயும் தந்தையுந்தான் செம்மைப்படுத்தியிருக்கிறுர்கள். அவன் கைகள் வலிக்க வலிக்க உழவாரத்திஞல் காட்டுச் செவ்வந்தியை செதுக்கி, வலித்துப் பிடுங்கி எறிந்து அழித்திருக்கின்றுன்.

''நீங்க ஏன் இப்பிடி இருக்கிறியள்? என்னிலே கோவமா? என்னுலேதான் எல்லாம் வந்தது. நான் சனியன். மூதேசி. விறுத்தில்லாதவள்...''

பாக்கியத்தின் சொற்களால் அவன் எற்றுண்டான்.

''பாக்கியம்''

அவன் குரல் அவளை உறுக்கியது. நாகலிங்கம் அவளைக் கடுமையாகப் பார்த்தான். அவளின் கண்களில் கண்ணீர் தளும்பி உடைந்தது.

''பாக்கியம் இப்ப நீ என்னத்துக்கு அழுகிருய்?''

அவளிடமிருந்து சட்டெனப் பதில் வந்தது.

''பின்னையென்ன நீங்க சாப்பிடாமை இருந்தா நான் அழாமைப் பின்னையென்ன? என்னிலே அன்பெண்டால் சாப்பிடோணும். அல்லாட்டில் நானும் கிடந்து காய்வன்''

'பாக்கியம்...! பாக்கியம்!'

அவனின் துன்பத்திற்குள்ளும் அவளின் இதமான, பரிவான சொற்கள் அவனின் மனதினுள் மகிழ்வைக் கெம்பவைத்தன. அவன் எழுந்து அவளிற்குப் பக்கத்தில் சென்றுன். அவனுக்காகக் காத்திருந்தவள் போல பாக்கியம் அவனது நெஞ்சினுள்ளே அணைந்து அடங்கினுள்.

அவன் அவளது தலையைக் கோதிவிட்டான்.

''பாக்கியம் எல்லாம் விதிப்படி நடக்குது. என்ன போனுலும் நான் உன்னை ஒரு நாளும் கோவிக்கமாட்டேன். பாக்கியம் நீ இல்லாட்டி... நீ இல்லாட்டி... நான் என்ன பாடுபடுவன் எண்டு எனக்கே சொல்லத் தெரியாது...''

அவனது குரல் திக்கியது. அவள் அவனை நோக்கி நிமிர்ந்தாள். அவனது கண்களில் கண்ணீர் பனித்திருந்தது. அவள் அவனையே வாஞ்சையோடு பார்த்தாள். பார்வையில் நிமிஷங்கள் கரைந்தன.

"என்னை அழப்படாதெண்டிட்டு நீங்க ஏன் அழுறியள்?''

அவளின் குரலிற் செல்லமும் கேலியும் சேர்ந்தொலித்தன.

''நீ சரியான வாய்க்காறியடி...''

அவன் அவளினை வாய் பேசாதவாறு முத்தமிட்டுக்கொண்டிருந்தான்

அவர்கள் நின்ற நிலையில் பொன்னம்மா தன்னுடைய உட்பிதுங்கிய விழிகளை மூடிக்கொண்டு மறுபக்கந் திரும்பிச் சென்றுன்.

நாகலிங்கம், பாக்கியத்தின் சின்ன நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துவிட்டான். நெற்றியின் இடதுபுற ஓரமாக அவளின் தலைமயிர் சிலும்பி முன் சளிந்து கிடந்தது. அவள் இடது கையினுல் நெற்றியை வருடி மயிரிழைகளைச் சரியாக்கிக் கொண்டாள்.

''என்னை விடுங்கோ... சுகமில்லாத பிள்ளைக்கு கஞ்சி குடுக்கோணும்!.

× × × × × ×

கடலுக்கு எதிர்த்தாற்போல வீதியோரமாக மண்ணோடு அடிசாய்ந்து பிறகு குத்திட்டு நிமிர்ந்து இலைகளைச் சடைபரப்பி, இருப்பதற்கு அமைக்கப்பட்ட வாங்கு போல நிற்கிறது அந்தப் பூவரசமரம். அதற்குப் பக்கத்தில் சாதாழைகள் கும்பமாய்க் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பூவரசிற்குக் கிழக்காக சிறிது தள்ளி இறங்கு துறை தெரிகின்றது.

நாகலிங்கம் தன்னுடைய சாதாழைக்கும்பத்தையும் ஒரு பார்வை பார்த்து விட்டு அந்தப் பூவரசமரத்தடியில் கடலைப் பார்த்தவாறு அமர்கின்றுன். சற்று அடங்கியிருந்த மனவேதனை மீண்டும் புகை போலத் தோன்றுகின்றது. நீண்ட கடலின் முடிவும், வானமும் தொடுக்கும் இடம் போலக் காட்சி தரும் பொருத்திலே மணற்திட்டுகளும், தீவுப்பச்சையும், கலங்கரை விளக்கமும் தெரிகின்றன. நீலக்கடல் நடுவில் மிதந்து தெரியும் வெண்மணற்திட்டுகள் சில, பாய்கட்டி ஓடும் வள்ளங்களைப் போலக் காட்சி தருகின்றன. அப்படித் தெரியும் மணற்திட்டு ஒன்றிலேதான் — கல்முனை மணற்திட்டில் தும்பங்காய் நிறைந்திருக்கின்றது. பாக்கியம் தும்பங்காயில் வெகுவிருப்பம் வைத்திருந்தாள்.

அந்த நினைவிடையே, கந்தையர் நாகலிங்கத்தின் மனதிலே தோன்றினுர். தடித்த சொண்டும், சிவந்த வெறிக்கண்களும் கந்தையரை நினைக்கையில் அவன் முன் காட்சியளித்தன. வயதறியாக் காலத்திலிருந்து வாழ்ந்த காணியை விட்டு அகற்றப்பட்டு பொன்னம்மா வீட்டில் தஞ்சம் புகுந்தபோதும், கடற்காணியில் போகும் உரிமை தடுக்கப்பட்ட பொழுதும் அவனுக்கு கோபம் வரவில்லை. வருத்தந்தான் மேலோங்கியது.

நாகலிங்கம் கடலின் மேல், பார்வையைக் கடற்கொக்காய்ப் பறக்க விடுகின்றுன். பூவரசமரத்திற்கு அருகாக ஓடும் வீதியில் — தேங்காய் ஏற்றிச் செல்லும் மாட்டுவண்டியின் சில்லுச் சத்தமோ, பாண் வண்டிக்காரனின் பிலாக்கண ஒலியோ அவனுக்குக் கேட்கவில்லை. தென்னோலை

ஊறப்போடுவதற்குக் கடலினுள் இறுக்கி நட்டிருக்கும் கட்டையைப் போல அவனது எண்ணமெல்லாம், அவன் மீன் பிடித்து வந்த கடற் காணியிலேயே இறுகி ஊன்றிவிட்டது.

கடலினைக் கூடப் பணபலம் பிடித்தவர்கள் காணிகளாகப் பிரித்து விட்டார்கள். வரம்புகள் கட்டாத குறை ஒன்றுதான்.

பழைய நாட்களில் மீன் பிடிப்பதற்குக் கடலினுள் சென்ற வசதி படைத்தவர்கள் தம்முள் உடன்பட்டு, கடலிற் குறித்த இடங்களில் மீன் பிடிப்பதற்கென ஒப்புக்கொண்டார்கள். பிறகு பரம்பரைபரம்பரையாக அந்த இடங்களில் மீன் பிடித்துவந்து, எல்லோருக்கும் பொதுவான கடலை நிரந்தரமான மீன் பிடியிடங்களாக்கி, காலப்போக்கில் அந்த எல்லைகளுக் குட்பட்ட கடற்பரப்பு தமக்கே உரியதென்றும் அதில் தாமே மீன் பிடிக்க உரித்துடையவர்கள் என்றும் கூறி, தாங்கள் கடலிற்குப் போகாது அர சாங்க உத்தியோகங்களைச் செய்துகொண்டு அந்தக் கடற்காணியிலே மீன் பிடிக்கச் சிலரை நியமித்தார்கள். அதிலே மீன் பிடிப்பவன் கடற்காணி யின் சொந்தக்காரருக்கு வாடிக்கையாக, தினசரி தான் பிடிக்கும் மீனில் ஒரு பங்கும், குத்தகைக் காசும் கொடுக்கவேண்டும். நாகலிங்கமும் ஐயாத் துரையும் கந்தையரின் கடற்காணியிலேதான் மீன் பிடித்தார்கள். எத்தனையோ நாள் சுருவோடும், கலவாயோடும், திருக்கையோடும் அவர்கள் போசாடியிருக்கிறார்கள்.

'அந்தக் கடற்காணியிலை நாங்கள் உசிரையும் வெறுத்து முறிஞ் சிருக்கிறம். அப்பிடியிருந்தும் எங்கடை கையிலை சல்லிக்காசுகூட மிஞ்சி றேல்லை. மீன் பறியோடை கரையிலை இறங்கி ருத்தலிலை அதைக் கொண்டு போய் வித்திட்டு, ஒரு ரூவாக்குப் பத்துச் சதம் தீர்வையைக் குத்தகைக் காறன் கையிலை குடுத்திட்டு வீட்டுக்கு வருந்தனைக்கும் காசு புழங்குது. பிறகு பார்த்தால் கடன்... கடன்... கடன்...' நாகலிங்கத்திற்கு மண்டை சிதறிவிடும் போலிருந்தது. அவன் பூவரச மரத்திலிருந்து எழுந்து ஐயாத்துரையின் வீட்டை நோக்கி நடந்தான்.

× × × × × ×

ஐயாத்துரையின், வரிச்சுகள் அறுந்த கிடுகுப் படலையை மிதத்தித் தூக்கித் திறந்து கொண்டு நாகலிங்கம் வளவிற்குள் இறங்கினான். ஐயாத் துரையின் மனைவி தங்கம்மா நாகலிங்கத்தைக் கண்டதும் திண்ணையில் இருந்தவள் எழுந்து உள்ளே போனாள். அவள் போய்ச் சிறிது நேரத்தில் ஐயாத்துரை கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியில் வந்தான்.

''வாமாப்பிளை... வா... இண்டைக்குத்தான் பூனரிக்கு ஒரு அலு வலாய்ப் போட்டு வந்திருக்கிறன்.... தங்கம்மா மாப்பிளைக்கு கொஞ்சம் பாலைப்பழம் கொண்டா!''

ஐயாத்துரை கப்போடு சாய்ந்து சாக்கிற்குள் சுருட்டியிருந்த புகை யிலையொன்றை எடுத்துப் பிரித்து சுருட்டுக்குத்தக்கதாய்க் கிழித்து அடுக்கி, வாற்புகையிலையைக் கிள்ளி வாயில் நனைத்துச் சுருட்டுத் தயார் செய்து கொண்டிருந்தான்.

''மாப்பிளே, மதியம் மேற்காலே போட்டுது... வந்த விஷயம் என்ன? என்னடாப்பா கலியாணம் முடிச்சு உடனே நீ ஒரேயடியா வாடிப்போயிருக்கிறு... கலியாணம் முடிச்சிட்டா இனி உசாராத் திரியோணும்...''

ஐயாத்துரைக்கு கடற்காணி பறிபோன விஷயம் இதுவரை தெரியாது என்பதனே அவன் பேச்சிலிருந்து நாகலிங்கம் ஊகித்துக்கொண்டான்.

''அண்ணே உங்களிட்டை ஒரு அவசரமான விஷயம் சொல்லோணுமெண்டு வந்தனுன்''

ஐயாத்துரை சுருட்டை விரலில் இடுக்கிக்கொண்டு நாகலிங்கத்தைப் பார்த்தான். தயக்கமான அவன் முகம், எதற்குமே கோபங்காட்டாத அவனுடைய கண்கள் எல்லாவற்றிலும் மப்பு மூடியிருந்தது.

''அதுதான் என்னண்டு சொல்லு?''

நாகலிங்கம் ஒரே மூச்சில் சொன்னுன்:

''கடற்காணியிலே இனி எங்களேப் போகவேணுமாம் ...''

ஐயாத்துரையின் கையிலிருந்த சுருட்டு அவன் அதைப்பில் கையிலிருந்து எகிற, அவன் திண்ணேயிலிருந்து கீழே இறங்கினுன்.

''ஆரப்படிச் சொன்னவன்? ஆரு சொன்னவன்?''

நாகலிங்கம் முழங்கையைச் சொறிந்தான்.

''வேறை ஆர் கந்தையர்தான்!''

''ஓ ...!''

நாகலிங்கம் நடந்ததெல்லாவற்றையும் ஐயாத்துரைக்குச் சொன்னுன். சிறிது நேரம் ஐயாத்துரை யோசித்துவிட்டுத் தனக்குத்தானே கந்தையரின் செயல்களுக்குரிய காரணங்களே உணர்ந்து கொண்டான்.

நாகலிங்கத்திற்கு கலியாணமாகி மூன்றும் நாளன்று கந்தையரின் மகன் வீட்டுப்படலேயில் நின்று ஐயாத்துரையைக் கூப்பிட்டான். ஐயாத்துரை படலேயடிக்கு வந்தான். கந்தையரின் மகன், தன்னுடைய தகப்பன் அன்று பின்னேரம் இருவரையும் வேலியடைக்க வரும்படி சொல்லிவிட்டதாகச் சொன்னுன். அவன் சொன்ன வேளேயில் ஐயாத்துரைக்கு நெஞ்சினுள் ஆத்திரம் குமுறியது. தனக்குள் அதை அடக்கிக்கொண்டான். கலியாணமாகி மூன்று நாட்களும் ஆகவில்லே. அதற்குள் நாகலிங்கத்தை வேலியடைக்கக் கூட்டிக்கொண்டு வரச்சொன்ன கந்தையரின் முதலாளித் திமிர் அவனுக்குப் பிடிக்கவில்லே. நாகலிங்கம் கந்தையர் கூப்பிட்டால் போய் விடுவான் என்பது ஐயாத்துரைக்குத் தெரியும். அவன் எதற்கும் வளேயும் மெதுமையானவன். ஐயாத்துரை கந்தையரின் மகனுக்குச் சொல்லிவிட்டான். ''இப்ப நேரமில்லே ஒரு கிழமை கழிச்சுவாறம்'' அந்தச் சொற்களுக்கு வன்மம் தீர்க்கவே இந்த முயற்சிகள் என்பது ஐயாத்துரைக்கு விளங்கிவிட்டது.

ஐயாத்துரை நாகலிங்கத்தைப் பார்த்தான். வழக்கமாகவே சோர்ந்து காணப்படும் அவன் இப்போது எல்லாமிழந்த அனுதைபோல நின்ருன். ஐயாத்துரைக்கு அவனின் மனம் விளங்கும். எதிலும் நாகலிங்கம் நியாயம் நீதிக்குக் கட்டுப்பட்டவன். யாருக்கும் விசுவாசமானவன். அவன்தான் இப்போது நிராதரவாய் நிற்கின்ருன். நினைக்க நினைக்க ஐயாத்துரைக்கு ஆத்திரம் கூடிக்கொண்டிருந்தது. சண்டிக்கட்டை மடித்துக் கட்டிக் கொண்டான்.

''கண்டறியா மயிர். ஒருநாளெண்டான்ன தன்ரை காணி எதெண்டு அறியாதவன். நாங்க இவள நாளா முறியிறம் ... அது எங்கடை தாய் மாதிரி, டே நாகலிங்கம் எவனடா சொன்னவன் எங்களை அதிலை மீன் பிடிக்கப்படாதெண்டு. ...டே இஞ்சைபார் .. இஞ்சாலைபார் ... நாளைக்கு... நாளைக்கு வெள்ளி .. அப்ப நாளேண்டைக்கு நான் அந்தக் காணிக்கை தான் பறிபோட்டு எடுக்கப்போறன். நீ என்னேடைவா ... எங்களை ஒரு தரும் அசைக்கேலாது ...''

ஐயாத்துரையின் குரல் ஆத்திரத்தினில் உச்சமாகி ஒலித்தது. அவனது சத்தத்தால் அயலிலுள்ளவர்கள் அவனது முற்றத்திற்கு வந்து விட்டார்கள். ஆட்களைக் கண்டதும் அவனுக்கு கோபம் மேலுங் கூடிவிட்டது. கந்தையரை நேருக்குநேர் நின்று பேசுவது போன்ற ஆத்திரத்தில் அவன் சத்தமிட்டான்.

''முந்தியைப் போலை எங்களை ஏமாத்தேலாது. காணிக்காறன் வேணுமெண்டாம் போய் தன்ரை நாயத்தைக் கோட்டிலை சொல்லட்டுக்கும். தம்பி நாகலிங்கம் நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. நாங்க இப்பிடிக் கனபேரைக் கண்டிருக்கிறம். ... இண்டைக்கும் நாளைக்கும் போகட்டும், நாளேண்டைக்கு நாங்க கடலுக்குப் போய்க் காட்டுவம்!''

நாகலிங்கம் கைகளைப் பிசைந்து கொண்டு நின்ருன்.

''நீ போ தம்பி, நான் கொஞ்சத்தாலை பூவரசடிக்குவாறன். நாங்க இருக்கேக்கை ஒண்டுக்கும் யோசியாதை போ ...''

× × × × × ×

நாகலிங்கம் திண்ணையில் யோசித்துக்கொண்டிருக்க, பாக்கியம் திண்ணைக்கு கீழ் உள்ள ஒட்டில் அவனுக்கு அருகாகப் போயிருந்தாள். அவனுக்கு யோசனை எல்லாம் சனிக்கிழமையைப்பற்றி.

''என்னத்துக்கு நெடுக நீங்க இப்பிடி இருக்கிறியள்?''

பாக்கியம் வாஞ்சையோடு கேட்டாள். பாக்கியத்தின் குடும்பப் பொறுப்புத் தெரியாத தன்மைக்காக நாகலிங்கத்தின் மனதினுள் லேசான வருத்தம் நிழலாடி மறைந்தது. வேண்டுமென்று சிரித்த சிரிப்புடன் அவளைப் பார்க்கின்ருன்.

''இப்பிடி நான் ஒரிடமும் போகாட்டில் காசென்னெண்டு வரும்?''

பாக்கியம் அவன் கேள்வியில், ஒட்டின் விழிப்பினைச் சுரண்டினாள். பிறகு அவளுக்குள் நினைத்தாள்.

'பொன்னம்மாக்கா சொன்னவ. இந்த ஊருக்கை வாடைக்காலத்திலைதான் ஆம்பிளையள் உழைப்பினை. சோளகத்திலையெண்டா மழையும் புயலும் கடலுக்குப் போகேலா ... அப்ப பெண்டுகளின்ரை உழைப்புத்தான். மட்டைக் கடலுக்கை போய் மட்டையள்ளியாந்து தும்பாக்குக் கயிறு விடுவினை. அந்தக் காலத்திலை ஒரு முத்தல் கயிறு அறுவே எழுவேசமெண்டு போம்'

பாக்கியம் நினைவுகளை முறித்துக் கொண்டாள்.

''எப்ப சோளகம் பேரும்?''

நாகலிங்கம் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான். தான் எதையோ சொல்ல, அவள் ஏதோ கேட்கின்றாளே என்ற எண்ணம் அவனுள்.

''ஏன் பாக்கியம் ஏன் கேட்டனீர்?''

நாகலிங்கத்தின் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. அவளுக்குள்ளேயே திட்டங்கள் வளர்கின்றன என்பதை அவளின் சின்ன நெற்றியில் கீறும் கோடுகள் காட்டுகின்றன.

''முதல்லை நீங்க சொல்லுங்க ... எப்ப சோளகம்?''

''அதுக்குக் கன நாள் கிடக்கு''

அவனது பதிலில் அவளது முகஞ்சாம்பி, கேட்ட துருதுருப்பு முகத்திலே சப்பளிந்து விட்டது. அவளின் முகவாட்டம் நாகலிங்கத்தின் மனதில் காய்வினை உண்டாக்கியது. அவளைப் பிடித்து தனக்கருகாகத் திண்ணையில் இருத்தினான். அவள் தோளோடு தலை சாய்த்திருந்தாள்.

''பாக்கியம் டக்கெண்டேன் உம்முடைய முகம் வாடினது?''

அவளது கன்னத்திற்குக் கையைக் கொடுத்து, தன் முகத்திற்கு நேராக அவளுடைய முகத்தை நாகலிங்கம் திருப்பினான். அவளுடைய கன்னங்களில் லேசாகக் கரிபூசிக் கிடந்தது.

''சொல்லும் ... என்னெண்டு சொல்லனை ... எங்கை ஆ ... வாய் திறக்குது ... ஆ ...''

''போங்க என்னைக் கேக்கப்படா... எனக்குப் பகிடி விடாதேங்க...''

நாகலிங்கத்தின் சொற்களில் அவளுக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டுதான் பதிலும் வந்தது. நாகலிங்கம் பொய்க் கோபத்துடன் திண்ணையிலிருந்து எழுந்தான்.

''அப்பநான் போறன் ...''

அவள், அவன் பின்னாலேயே போனாள்: ''சொல்லுறன்''

அவன் நின்றான். ''நான் மட்டைக் கடலுக்குப்போறன்'' – நிலத்தைப் பார்த்தபடி கூறுகிறாள் பாக்கியம்:

''அடியடா புறப்படலேயில்லை எண்டாலும் ...''

நாகலிங்கத்தின் குரல் துள்ளியெழ அவளின் கைகளினை எட்டிப் பிடித்தான். அவள் திமிறினாள். அவனது கேலிக்குரலில் அவனது முகத்தை ஏறிடவே அவளுக்கு வெட்கம்.

''என்ரை மனிசி உழைக்கப்போறா ... பொன்னம்மாக்கா இஞ்சை வாவனணை ...''

நாகலிங்கம் அவளைப் பிடித்த பிடியை விடவில்லை. அவன் அவளின் முகத்திற்கு நெருங்கி, அடங்கிக் கனிந்த குரலிற் சொன்னான்:

''பாக்கியம் நான் என்ன உடம்பிலை பெலமில்லாதவன் அல்லது வலது குறைஞ்சவனெண்டு நெச்சீரே .. மற்றவங்களைப் போலையில்லை ... உம்மை நான் ஒரு நாளெண்டாலும் கஷ்டப்படுத்தன். ஆளே ஈக்குக்குச்சி போலை உம்மாலை தக்கை தூக்கி மட்டையடிக்கேலுமே? வெறும் விசர்ப் பெட்டை. சொல்லக்கிடேலை கோவமெண்டா மூக்குக்கை அவவுக்கு வந்திடும்''

பொறுப்போடு அவன் கூறிய அன்பான, வாத்சல்யம் நிறைந்த குரலின் அணைப்பினால் அவள் அவனது தோளில் புதைய எண்ணினாள். என்னவோ கண்களில் துளிருகின்ற கண்ணீரையும் அவள் துடைக்கவில்லை.

× × × × × ×

கடலுக்கு எதிர்த்தாற்போல வீதியோரமாக அடிசாய்ந்து, பிறகு குத்திட்டு நிமிர்ந்து இலைகளைச் சடைபரப்பி இருப்பதற்கு அமைக்கப்பட்ட வாங்குபோல நிற்கிறது அந்தப் பூவரசமரம். பச்சை இலைகளிடையே மஞ்சட் பூக்கள் சொரிவாய்க் கிடக்கின்றன. மரத்தடியில் உதிர்ந்து வாடிய கபிலநிறப் பூவரசம் பூக்கள்.

வாடிக்கிடந்த பூவொன்றைக் கையிலெடுத்துக் கசக்கிக்கொண்டு நின்றான் ஐயாத்துரை. அம்மன் கோயிலடியிலிருந்து வந்துகொண்டிருக்கும் முருகரையும், வேலாயுதரையும் அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

''அண்ணை கோயிலடியாலை வாறம் ... சந்தணம் திருநீறு கொஞ்சம் எடன் ...''

''ஒந்தம்பி உங்களைத்தான் பாத்தண்டு நிக்கிறன். வெள்ளிக்கிழமை நாத்து இண்டைக்கு கோயிலுக்கும் போகேல்லை ...''

''என்னண்ணை என்ன விஷயம்?''

ஐயாத்துரை சண்டிக்கட்டை மடித்துக் கட்டிக் கொண்டான்:

''தம்பி நான் சொல்லுறதைக் கவனமாகக் கேளுங்கோ ... கந்தையர் எங்களுக்கு செய்த வேலை தெரியுமே?''

வேலாயுதர் தலையை ஆட்டிக்கொண்டார். தெரியும் என்ற அர்த்தம் அதில் தொனித்தது. பூவரசமரத்தடியில் புதிதாகக் கம்புக்கட்டோடு தம்பிராசாவும் வந்து சேர்ந்து கொண்டான்.

''தம்பி முந்தியப் போலை எங்களை ஏமாத்தேலாது. கந்தையர் வேணுமெண்டா கோட்டடிக்குப் போகட்டு. போய்த் தன்ரை காணியின்ரை எல்லையைக் கோட்டடியிலை சொல்லட்டு. எப்பிடியடா சொல்லுற? அங்கை பார் நாகலிங்கமும் வாருன். அவனைப் பாருங்க கலியாணம் முடிஞ்சு ஒரு கிழமை முடியுமுந்தி கந்தையருக்கு சேவகம் பண்ணப்போகாததிலை காணியில்லை, பூமியில்லை ... கடலுமில்லை. தம்பி வேலாயுதம் நீ சொல்லு? நாங்க என்ன எல்லாருக்கும் சின்னுகளே ... அல்லா வேலைகாறரெண்டு எங்களைத் தாரைவார்த்திருக்கே?''

ஐயாத்துரை இடையில் நிறுத்திவிட்டுக் கடலை நோக்கித் திரும்பிருன்.

''எங்களைப் போலை இவங்கள் வள்ளத்திலை ஒரு நாளெண்டான்ன வந்திருக்கிருங்களாடா? நாங்க முறிமுறியெண்டு முறிய அவைகள் காலாட்டிக் கொண்டு வீட்டிலையிருந்திட்டு இப்ப சண்டித்தனம் பேசிற தெண்டா முடியுமே? முறியிறவங்களை இனிமேல் முந்தியைப்போலை வெருட்டேலாதடா ... வெருட்டேலாது''

ஐயாத்துரையின் உறுதியேறிய குரலில் நாகலிங்கத்தின் உடல் சிலிர்த்தது. அவனின் உள்ளத்துள் வாடைக்காலக் கடல் அலைகளாய் ஐயாத்துரையின் சொற்களே அடித்துப் புரண்டு ஒலித்துக்கொண்டிருந்தன. வேலாயுதரும், முருகரும், நாகலிங்கமும் ஐயாத்துரை சொன்னதை ஏற்றுக்கொண்டனர். தம்பிராசா முகத்தைக் கோணிக்கொண்டு ஒரு மாதிரி நின்றுவிட்டுக் கம்புக்கட்டைக் கீழே போட்டான்.

''எண்டாலும் அண்ணை, நீங்க செய்தது பிழையான வேலைதானே?''

''என்ன ... என்னெண்டு?''

ஐயாத்துரை கேள்வியோடு தம்பிராசாவைப் பார்த்தான். பருக்கள் நிறைந்த தம்பிராசாவின் முகம் நிச்சயமான முடிவோடிருந்தது. ஐயாத்துரையையே கவனியாதவன் போல அவன் தொடர்ந்தான்.

''எவ்வளவெண்டாலும் அந்தாளின்ரை காணியுக்குள்ளை திண்டு கொண்டு நாகலிங்கமும் பெஞ்சாதியும் அந்தாளை மட்டுமரியாதையில்லாமல் பேசப்படாது .. ''

தம்பிராசா பிடரியைத் தடவியவாறு வேலாயுதரைப் பார்த்தான்.

''நான் சொல்வது சரியா?'' என்ற மௌனமான கேள்வி அவனது முகத்தினிலே எழுத்துக்கூட்டியிருந்தது. பார்வையில் வேலாயுதர் தலை குனிந்தார்.

''அந்தாளின்ரை உதவியில்லாட்டில் நாகலிங்கம் நீங்கெல்லாம் கஞ்சி குடிக்கேலுமா?''

ஐயாத்துரைக்கு ஆத்திரம் குபீரிட்டது. வார்த்தைகள் வெடித்துப் பொரிந்தன.

''தம்பிராசா, உப்பிடி வேறுரெண்டான்ன கதைச்சிருந்தா இப்ப வேளாமுள்ளு மறுமொழி சொல்லியிருக்கும் ... உங்களைப்போலை நாங் கொண்டும் மற்றவைக்கு கால்கழுவுறேல்ல''

ஐயாத்துரையின் கோபம் எங்கே வந்து முடியுமென்று வேலாயுதர் அறிவார். அவர், ஐயாத்துரையைப் பல கதைகளைச் சொல்லி இறங்கு துறையடிக்குக் கூட்டிச் சென்றார். தம்பிராசா பேசாமல் கம்புக்கட்டைக் கொண்டுபோய் கடலுள்ப் போட்டுவிட்டு ஐயாத்துரை போனதிக்கை நோக்கி ஏளனத்துடன் சிரித்தான்.

''விடியக் கலாதிப் பட்டினையெண்டால் வீணுகக் கோட்டடியிலை தான் போய் நிப்பினை. தாறதை வாங்கிக்கொண்டு பணிவிடை செய் யிறதை விட்டிட்டு பேய்த்தனமா அந்தாளோடை, பெரிய மனிஷனோடு போய்க் கொழுவலுக்கு நிக்கினை.''

× × × × × ×

அதிகாலை.

ஊர் கடற்கரையில் நின்றது.

ஐயாத்துரை சொன்ன சொற்கள் ஊரின் இதயத்துள் நிறைந்து பரபரப்பூட்டி விட்டது. கடற்காணிக்காரன் வெள்ளாப்பு நேரத்தில் ஆள் வைத்து அடிப்பிக்கலாம் என்ற குசுகுசுப்பு எங்கும் மார்கழி வெள்ளமாய்ப் பரவிவிட்டது.

ஐயாத்துரையும் நாகலிங்கமும் கைகளில் சாமான்களுடன் கம்பீர மாக நடந்து வந்தனர். ஐயாத்துரையின் வலது தோளில் இரண்டு மரக் கோல்கள், ஒரு மண்டா ஆகியனவும் இடது கையில் சவளுமிருந்தது. நாகலிங்கம், பழந்தண்ணீர்க் குடுவையையும், பறிக்கூட்டையும், ஈக்கில் கோர்வையையும் கையிலே கொண்டு வந்தான். பாக்கியத்தை சமாதானப் படுத்தி வீட்டிற்குள்ளிருக்கும்படி செய்ததில் நாகலிங்கத்திற்குச் சிறிது நேரம் போய்விட்டது. அவளின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் படுத்த அவன் படாத பாடுபட்டுவிட்டான். துணிவேயான அவளின் பயத்தினை அவன் ஏளனத்தோடு கண்டித்துவிட்டு வந்தான்.

பூவரச மரத்தடியில் இருவரும் தங்கள் பொருட்களை வைத்து விட்டு துண்டை எடுத்து தலையில் வரிந்து கட்டிக்கொண்டனர். அதே நேரத்தில் இறங்கு துறைப் பக்கமாக நாய் குரைத்துக் கேட்டது. பேச்சுக் குரல்கள் கிளம்பின: ''கந்தையர் ஆக்களோடை வாறார்...''

'இண்டைக்கு வாற அமந்தறையோடை இவையள் துலையப் போகினை. இதெல்லாம் அழியிற புத்திதான்' தம்பிராசா தன்னுள் முணு முணுத்துக்கொண்டான்.

வள்ளத்தினுள் பறி, மரக்கோல்கள், சவள் ஆகிய யாவும் ஏற்றி யாகி விட்டன. கஞ்சிக் குடுவையைப் பத்திரமாக சவளோரமாக வைத்து விட்டு கட்டுக்கல்லை ஐயாத்துரை வள்ளத்தினுள் தூக்கிப் போட்டான்.

''டே...!''

கடற்கரையெங்கும் அந்தக் கட்டைக்குரல் மௌனத்தை உதறி ஒலித்தது. குரலோடு நாலு தடியர்கள் மண்டாக்களைத் தூக்கிக்கொண்டு வந்தனர். அவர்களுக்குப் பின்னாலே நாயும் கந்தையரும். கடற்கரை மண் கசகசக்கிறது.

''ஆரடா அவன் ஐயாத்துரை?''

குரலுக்குப் பதிலேதுமற்ற பயங்கரம். அலைகளின் சலசலப்பு மட்டும் கேட்கின்றது.

''வள்ளத்தடியிலை நிக்கினை போலை...'' கந்தையரின் குரல் உறுமுகிறது.

கிழக்கின் வெளிறலில் பரவும் மெல்லிய வெளிச்சம்; அதில் உருவங்கள் கண்களிற்குத் தெளிவாகிக்கொண்டிருக்கின்றன.

''எளிய கூலிக்காற நாயள்... எவனடா அவன்?''

திமிரான தடியனின் குரலை ஐயாத்துரையின் குரல் மோதி விழுத்தியது:

''டேய் நாங்க கூலிக்காற நாயளில்லையடா... தொழிலாளியடா... தொழிலாளி...''

இடையிலே கந்தையரின் கனைப்புக்குரல் கேட்டது. அதற்குள் வள்ளத்துள் ஏறி நின்ற நாகலிங்கம் நீரினுள் தொப்பென்று குதித்தான்.

''நான்தான்ரா ஐயாத்துரை, இப்ப என்ன செய்யப் போறியள்? செய்யிறதைச் செய்யுங்க பாப்பம்... துணிவிருந்தா வாருங்கடா...''

வள்ளத்துள் நின்ற ஐயாத்துரை பதைபதைக்க நாகலிங்கம் கரையை நோக்கி நிமிர்வுடன் நடந்துவந்தான். முன்னே நோக்கி நடந்து வந்த அவனை நோக்கி மும்முனை மண்டா சீறிக்கிளம்ப, அவன் குனிய, அது மண்ணினுள் சதக்கென்று புதைய கரையின் இதயத்துள் பெருமூச்சு நடுங்கியது.

''அவையள் செய்யிற தொழிலுக்கை அவயளுக்கொரு சண்டித்தனம்... மடை நாயள்... வழியத்த பரதேசியள்... நாய்கள்...''

கந்தையரின் திமிர்க் குரலில் ஏளனம் மேவியது.

அந்தக் கணத்திலிருந்து நாகலிங்கத்தின் மனதினுள் புதியதொரு மனிதன் தோன்றிவிட்டான். அவன் தொழிலாளி; மீன்பிடிகாரன். அவன் தொழில் செய்வதனைத் தடுக்க யாருக்குமே உரிமையில்லை. ஐயாத்துரையின் குரல் அவனின் காதோடு உரத்துக்கேட்கிறது.

'எங்களைப் போலை இவங்கள் வள்ளத்திலை ஒரு நாளைக்கெண்டான்ன வந்திருக்கிறுங்களாடா?... நாங்க முறிமுறியெண்டு முறிய அவையள்

காலாட்டிக்கொண்டு வீட்டிலை இருந்துவிட்டு இப்ப சண்டித்தனம் பேசி றேண்டா முடியுமே? முறியிறவங்களை இனிமே முந்தியைப்போலை வெருட் டேலதடா... வெருட்டேலாது...'

''அடியுங்கடா...!''

கந்தையரின் குரல் துரிதத்திற்காக ஓங்கியது. அதே வேளையில் நாகலிங்கத்தின் பக்கமாக ஐயாத்துரை குதித்தோடி வந்தான். கையில் சின்ன மரக்கோல்.

"நாகலிங்கம் இனி யோசிக்கேலாது; வாறவன் வரட்டும்... எங்களை நாய்களெண்டா நாங்க கடிச்சுத்தான் தீருவம்...''

அவனுடைய குரல் ஓயவில்லை. அதற்குள்ளே சீறிவந்த மண்டா அவனது தோளில் குத்த, அவன் அலறிக்கொண்டு கையைப் பொத்திய படி கடற்கரை மண்ணிலே துவண்டு விழுந்தான். ரத்தம் சேருய் வழிந்தது,

இதுவரை நட்ட களங்கண்டித்தடி போல் நின்ற தம்பிராசாவின் மனதினுள்ளே அவனையறியாமலே ஒரு வேகம் ஏற்பட்டது. தன்னுடைய தோளில் காயம் பட்டது போன்ற துடிப்பில் அவன் தனது தோளைப் பொத்திக்கொண்டான். வேலாயுதரும் இன்னுஞ் சிலரும் கொடுக்குச் கட்டுவதும் அவனுக்குத் தெரிந்தது.

ஐயாத்துரைக்குப் பக்கத்தில் போய் நின்றுகொண்டே நாகலிங்கம் வெறியனுகக் கத்தினுன்: ''ஐயாத்துரை அண்ணரையும் என்னையும் சாக விடப் போறியளோ?'' அவனது குரல் ஓயமுன், இன்னெரு குரல் கூவியது:

''பொன்னம்மாக்கான்ரை வீட்டை எரிச்சுப் போட்டாங்கள்...! என்ரை ராசா...!''

ஐயாத்துரை இரத்தம் வழியும் தோளைப் பொத்திக்கொண்டு நிலத் திலிருந்து எழுந்தான். கூவியவள் நாகலிங்கத்தின் மனைவி பாக்கியம். தலை மயிர் அவிழ்ந்து புரள கிழிந்த சீலையுடன், பிதுங்கிய பயம் நிறைந்த கண் களுடன் நடுங்கியபடியே அவள் கதறிக்கொண்டு ஓடிப்போய் ஐயாத் துரைக்குப் பக்கத்தில் நின்ற நாகலிங்கத்தின் காலடியில் தொப்பென்று விழுந்தாள்.

ஐயாத்துரையின் குரல் கரையினை நோக்கி மீண்டும் குளறியது:

''அண்ணை இனியும் பாக்கவே போறியள்? நாங்க சாகிறதைப் பாக்கவே நிக்கிறியள்? இண்டைக்கு வீடெரியுது. நாளைக்கு எங்களை எரிப் பாங்கள். எங்களிலை கனபேர்... அவங்களிலை நாலுபேர்... பிறகும் நாங்க தான் அடிவாங்குறம்...''

ஐயாத்துரையின் குரல் ஓயுமுன் இரண்டு தடியர்கள் அவனை நோக் கிப் பாய ..

''டே, அவையள்ளை ஒருதனும் கைவைக்கப்படா . வைக்கிறவன்ரை சவந்தான் இதிலை விழும்'' கூறிக்கொண்டே தம்பிராசா ஐயாத்துரைக்கு முன்னலே போய் குஞ்சைக் காக்கும் கோழிபோல மறைத்து நின்றுன்.

கண்களில் மிதக்கும் நட்புறவுடன் ஐயாத்துரை தம்பிராசாவைப் பார்த்தான். நேற்றைய தம்பிராசா செத்து இன்று புதுத் தம்பிராசா தோன்றியிருக்கிறான்.

தம்பிராசாவின் மனதிலே பல்வேறு சம்பவங்கள் சுற்றிச் சுழன்றோடின. அந்தச் சிறிய கிராமத்திலே அவன் வயதறிந்த காலத்திலிருந்தே உளமார அவனுக்காக இரங்கி உதவியர்கள், நாயை விடக்கேவலமாக அவமதிக்கப்படுவதனை அந்தக் கணத்திலே அவன் தாங்க முடியாதவனானான். பணபலத்தையே பெரிதெனநினைத்துக் கூழைக் கும்பிட்டிட்டு வாழ்வதை விட, வறுமையின் துன்பத்திற் கெதிராக நெஞ்சு நிமிர்த்தி நிற்பது மகோன்னதமான வீரச் செயல் என்ற எண்ணம் அவனது நெஞ்சினுள்ளே ஆவேசமாகத் தலை உயர்த்திற்று.

"அண்ணை... தொர்றவன் தொடட்டும் பாப்பம். நாங்கள்ளாம் ஒண்டு. இனி எங்கடை தலையிலை மிளகாய் அரைக்கேலாது..."

தம்பிராசா முஷ்டியை உயர்த்திக் காட்டிய படியே கரையைப் பார்த்தான். வேலாயுதர், முருகர், மூத்தர் எல்லோரும் கொடுக்கை வரிந்து கட்டிக்கொண்டு அவனை நோக்கித் தோழமையுணர்வுடன் வந்தனர். கரையில் நின்ற முழுப்பேரும் ஐயாத்துரையையும், நாகலிங்கத்தையும் சுற்றிவர நின்ற பரபரப்பில் கந்தையரின் நாய் குரைத்தது.

"முறியிறவங்களை முந்தியைப்போலை வெருட்டேலாது..."

நாகலிங்கம் ஓங்கிய குரலிற் சொல்ல சுற்றி நின்றவர்களின் தலைகள் தானகவே அசைந்தன. கரையில் நின்ற நாலு தடியர்களும், கூட்டாக நிற்கும் தொழிலாளிகளையும் கைசோர்ந்து நிற்கும் தங்கள் முதலாளியையும் பார்த்தனர். எதுவுமே தோன்றாத நிலையில் மண்டாவை எடுக்காமல் அவர்கள் அங்கிருந்து தலையைக் குனிந்தபடி நடந்தனர். எல்லாம் இழந்த நடை.

கடற்கரையில் மெல்லிய காற்று குளிர்ச்சியோடு வீசிற்று. கடற்கரையின் நீளப்போக்கில் சனங்கள் நின்றனர். கசகசக்கும் மணற் தரையினுள் ஒளிய மார்க்கமற்ற நண்டுக் குஞ்சுகள் வள்ளங்களின் கீழே ஒதுங்கிப் பதுங்கின. கடல்நாரைகளும், காகங்களும் இரைச்சலிட்டுப்பறந்தன. ஒன்றுமே விளங்காத சிறுவர்களின் துஷ்டத்தனங்கள் பொறுக்க முடியாத குட்டி நாய்கள் வாள் வாளென்று ஒலியிட்டன. நோஞ்சான் சிறுவனொருவன் முருகைக் கல்லொன்றை எடுத்து, கந்தையரின் நாயை நோக்கி வீசி விசுக்கி எறிந்தான்.

கடற்கரையில் தனியாய் நின்ற கந்தையர் பார்ப்பதற்கு பார்வையற்றவராகித் தலை கவிழ்ந்து நடந்தாலும் மனதினுள் நிறைந்த பழைய திமிரும், வன்மமும் இம்மியளவும் குறையவில்லை.

முருகர், கந்தையர் போகும் திசையை நோக்கிக் காறியுமிழ்ந்து விட்டு முணுமுணுத்தார்:

"நாங்களெல்லாம் ஒண்டெண்டு இவருக்கு இனியெண்டான்ன தெரியட்டு!"

●●

## ஜானகி

மணி நாலரையாகி விட்டது. வாசலைப் பார்த்தபடியே நின்ற ஜானகி அப்போதுதான் தனக்குப் பின்னால் வந்து தன் தோள்களில் கை வைத்த ஜெயலட்சுமியை நோக்கி முகமலர்ந்துப் புன்னகை செய்தாள். ஜெயலட்சுமிக்கும் ஜானகியைப் போலத்தான் மூன்றுமணியோடு ஆஸ்பத்திரியில் வேலை முடிந்துவிட்டது.

''இன்னும் அம்மா வீட்டிலிருந்து வரவில்லையே?''

ஜெயலட்சுமியின் கேள்விக்கு இல்லையென்று தலையசைத்துப் பதிலளித்தாள் ஜானகி.

''பஸ் பிந்தியிருக்கலாம். கொஞ்சநேரத்திலை வந்திடுவா...''

ஜானகியின் நெஞ்சிற்கு அவளின் சொற்கள் ஆறுதலாயின. ஜானகி தாதிகள் பயிற்சி நிலையத்திற்கு மாணவத் தாதியாக வந்து ஏழு மாதங்களாகி விட்டன. இதுவரை ஒரு முறையாகிலும் அவளுடைய தாயார் கௌரி அம்மாள் நாலுமணிக்கு பிந்தி வந்ததில்லை இன்றும் மூன்று மணிக்கு வருவதாகக் கடிதம் எழுதியிருந்தவள் — இப்போது நேரம் ஜானகி கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் மணி நாலுநாற்பது.

''ஜெயா சொல்லுவது போலேதான் இருக்கவேணும். பஸ்சைத்தான் விட்டிருப்பா வீட்டிலும் அலுவலுகள் இருந்திருக்கும். பாவம் அவவும் தனியாள்தான்'' தன்னுடைய மனதை ஆறுதல்படுத்த ஜானகி முயல்கிறாள். இப்போது தாதிகள் பயிற்சி நிலைய முன் முகப்பிலே பல மாணவிகள் உறவினருடன் கதைத்துக் கொண்டு நிற்கின்றனர். அவர்கள் நிற்குமிடமெல்லாம் சிரிப்பும் களிப்புமாய் ஆனந்தமே சூழ்ந்திருக்கிறது.

ஜானகி தனியளாய் வாசலிலேயே தாயார் கௌரியம்மாள் வருவாளென்ற நம்பிக்கையோடு காத்துக்கொண்டு நிற்கின்றாள்.

சிவசுப்பிரமணிய சர்மாவின் இரண்டு பிள்ளைகளில் இளையவள் ஜானகி. மூத்தவன் சுந்தரேசன். சுந்தரேசசர்மா பதுளை சித்தி விநாயகர் கோவிலில் பூசகராயிருக்கிறார், அவரை ஊர்க்கோயிலிலேயே பூசகராக இருக்கும்படி ஊர்மக்கள் வேண்டியதற்கு இணங்கி அவர் பூசகவேலை செய்து இரண்டு மாதங்கள் கழிய முன்னர் அங்கே இருக்க விரும்பாமல் பதுளைக்குப் போய்விட்டார். மிகக் குறைந்த சம்பளத்தினால் அவர் அதிருப்பட்டிருந்தாரென்பதை கோயில் நிர்வாகிகள் அறிந்திருந்த போதிலும் அதில் எவ்வித மாற்றமும் செய்யும் நிலைமையிலே அவர்கள் இருக்கவில்லை. சிவ

சுப்பிரமணிய சர்மா தன் காலத்தில் ஊரின் கிருத்தியங்கள் எல்லாவற்றிலும் கலந்து கொள்வதற்கும் அதிக வருவாய் பெறுவதற்கும் அவரின் கம்பீரமான தோற்றமும், வயது முதிர்ச்சியும் பிரதான காரணங்களாயிருந்தன. சுந்தரேசசர்மா இருபத்திநாலு வயதேயான மெலிந்த இளைஞன்.

சிவசுப்பிரமணியசர்மா மூன்று ஆண்டுகளுக்கு முன் திடீரென்று இறந்து போனார். இப்போது தகப்பனாரை நினைக்கையில் ஜானகிக்கு நெஞ்சைப் பிளந்து கொண்டு அழுகை வந்தது. இன்னும் அவர் உயிருடனேயே இருப்பதுபோல ஜானகியின் நெஞ்சிற்குள் பிரமை. 'ஜானகீ' என்ற அந்த ஆதரவான அழைப்பிற்குள் உள்ள வாஞ்சை இன்றும் அயலில் கேட்பது போல இருக்கின்றது. பொழுது விடியும்போது அவரின் வெண்கலக்குரல் தான், பூபாள முணுமுணுப்பே ஜானகியை நித்திரையினின்று மெதுவாகத் தொட்டு எழுப்பும். அவர் சொல்வன ஏதோ சமஸ்கிருத சுலோகங்கள் தான். ஆனால் அந்தக் குரல் அதற்குக் கொடுத்த இனிமையும், வலிவும் அதுவே மனதினை உருக்கி எங்கும் நாதமாய் இழையும்.

தன்னுடைய பரந்த தோளில் ஓடும் பூணூலைப் புனிதமான பக்குவத்தோடு தொட்டுக்கொண்டே அவர் அடிக்கடி அடங்கிய குரலிற் கூறுவார்:

''நாங்கள் எப்போதும் உயர்ந்தவர்கள். பிராமண சம்பிரதாயங்கள் இறைவனை அவர்களுக்கு வெகு அண்மையில் வைத்திருக்கின்றன...''

அவள், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வீட்டு வாசலிலே கோலமிட்டு நிமிர்கையில் சிவசுப்பிரமணிய சர்மா அவளின் முகதரிசனங் கண்டு கோயிலுக்குப் புறப்படுவார். கோயிற் பூசகரான அவர் அந்த ஊரிலுள்ளவர்களின் ஏனைய சடங்காசாரங்களையும் செய்து வந்தமையால் மத்தியதர வாழ்க்கையினை வாழ்வதற்கு சந்தர்ப்பங்களிருந்தன. தனது பிள்ளைகளை ஆசாரசீலம் தவறாது தனது வழியிலேயே வளர்க்க வேண்டுமென்பதற்காக அவர் படாத கஷ்டங்கள் பட்டார். தன் பிள்ளைகளை மற்ற எல்லோரோடும் ஒன்றாக இருந்து படிக்க விடுவதற்குக்கூட அவர் மனம் விரும்பவேயில்லை. எனினும் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரான அவரது நண்பர் கனகசபாபதி அவருக்குக் கொடுத்த வாக்குறுதியினால் சுந்தரேசனும், ஜானகியும் கிராமப் பள்ளிக்கூடத்திற்குப் போக முடிந்தது. கிராமப் பள்ளிக்கூடத்திலே சுந்தரேசனுக்கும். ஜானகிக்கும் தனி வசதிகள் இருந்தன. அவர்களுக்கென்று தனி இருக்கை. நட்பற்ற தனி வாழ்க்கை.

படிக்கும்போது சுந்தரேசன் தான் வைத்திருந்த குடுமியினால் பட்ட கஷ்டம் சொல்லித்திராது. வாத்தியார் இல்லாத நேரத்திலே, தனக்குப் பின்னாலிருந்து மாணவர்கள் ''டே, டே குடும்பாஸ்'' என்று அடித்தொண்டையிலே கேலி செய்வதைக்கூட சுந்தரேசன் கேட்டுவிட்டு வந்து தாயின் முன்னாலே விசும்பி விசும்பி அழுதானே தவிர சர்மாவிடம் ஒரு வார்த்தை தன்னும் சொன்னதேயில்லை. தனக்குத்தானே அப்படியொரு கட்டுப்பாட்டினைச் சுந்தரேசன் விதித்துக் கொண்டதற்கு, சர்மா அவனுக்குச் செய்த நித்திய உபதேசங்களே காரணம்:

சுந்தரேசனுக்கு விளையாட்டுத் தோழர்களில்லை. பஸ்ஸிலே என்றுமே அவன் பிரயாணம் செய்ததில்லை. சினிமாப்படத்தைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரியாது. அவனைப்பற்றி ஊர் நினைக்கும்: 'புராண காலத்து முனிவன்தான் இந்தப்பிள்ளையினுடைய உருவத்திலே பிறந்திருக்கிறான்!'

''இந்தக் காலத்திலும் சுந்தரேசனைப் போலை ஆசாரசீலம் பார்க்கிறவை யார் இருக்கிறார்களென்று ஊர் சொல்லவேண்டும். ஜானகி பெரிய பக்தையாக, சங்கீத மணியாக வரவேண்டும். இவைதான் என்னுடைய ஆசைகள். பாவமும், நாசமும், நிறைந்த இந்த உலகத்திலை நான் இதற்காகத்தான் மாடுபோல உழைக்கிறேன்...''

இப்படி அவர் தம்முடைய மனைவி கௌரி அம்மாளுக்கு அடிக்கடி சொல்வார். கௌரி அம்மாள் தன்னுடைய பெரிய கண்களால் உணர்ச்சி வசப்பட்டிருக்கும் அவரையே பார்த்தபடி இருப்பாள். இப்படி அவர் சொல்கையில் அவரின் ஆழ்ந்த கண்களில் இனம் புரியாத பரவசம் பொங்கிப் பூத்திருக்கும். அப்படியே, அந்தச் சொற்களையே வடிவமாய், காட்சியாய் காணும் பாவனையில் அவர் முகத்திலே, மலர்ச்சி எல்லை மீறிய நம்பிக்கையோடு பிரகாசிக்கும்.

அவர் இறந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் என்ன, ஜானகிக்கு அவை என்றுமே நினைக்க அலுக்காத நிகழ்ச்சிகள்தான். தாதிமார் பயிற்சி நிலையத்திற்கு வந்து சேர்ந்த முதலிரு மாதங்களும் அவள் எல்லையில்லாத மனவேதனைப்பட்டாள். எந்த நிமிஷமும் தகப்பனின் எண்ணந்தான். அவருடைய கனவுகளையும் ஆசைகளையும் தான் பொடிப்பொடியாக நொருக்கி எறிந்துவிட்டேனே என்ற குற்ற உணர்வோடு அவள் மனம் நைந்தாள். தன்னாலே தகப்பனின் ஆத்மா சாந்தியற்று உலாவும் என்று அவள் தன்னுள்ளேயே கலங்கினாள். நடு இரவினில் திடீரென்று திடுக்கிட்டெழுந்து கட்டிலில் இருந்து மௌனமாய் அழுது, அதுவே தாங்காத வேதனையின் விசும்பலாய், விக்கலாய் வருகையில் அதை அவள் பிரயத்தனப்பட்டு அடக்கும்போது அவளின் அறைத்தோழி செல்வராணி எழுந்து கூறுகின்ற ஆறுதல் மொழிகள்தான் அவளிற்கு குளிர்தரு நிழலாயிருந்தன.

''வாழ்ந்த வாழ்க்கையையே நினைவில் பதித்துக்கொண்டு வாழ்வதிலை என்ன பிரயோசனம்? காலத்துக்கு சரிவராத சம்பிறதாயங்களைக் கட்டிக்கொண்டு வாழ விரும்பினால் காட்டுக்குள்ளை போய்விட்டால் நல்லது...''

இதை ஜானகிக்கு செல்வராணி அடிக்கடி சொல்வாள். செல்வராணி கதைப்பது குறைவு. அதிகமான நேரம் அவள் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பாள். கதைக்க ஆரம்பித்துவிட்டாலோ அவளின் ஆழ்ந்த இதயமும், அறிவின் தெளிவும் எவரையும் அவள் மீது மதிப்புவைக்கச் செய்துவிடும்; மெல்லிய அவளின் உருவமே மறைத்துபோய் எதற்கும் கலங்காத சித்தமுடைய யுவதி ஒருத்தி தோன்றி நிற்கிறாள் என்று நினைக்க வைக்கும்.

ஜானகியைக் கௌரி அம்மாள் கூட்டிக்கொண்டு தாதிகள் பயிற்சி நிலையத்திற்கு வந்தபோது அவர்களுக்குப் பக்கத்தில் செல்வராணியும் நின்றாள். அந்தநேரத்தில் அவர்கள் நிற்கும் பக்கமாக வந்த சிஸ்ரர் அரிய மலர், கௌரி அம்மாளைப் பார்த்து ''இரண்டுபேரும் உங்களுடைய பிள்ளைகளா?'' என்று கேட்டாள். கௌரி அம்மாளின் முழுச்சாயலும் செல்வராணியில் அப்படியே இருந்தது; ஜானகியின் தமக்கை போலிருந்தாள். கௌரியின் முகத்திற்கே பொலிவு தருவது அவளின் கண்கள். அந்தக் கண்களோடு மூக்குத்தியின் மின்னல் பிரகாசிக்கும். செல்வராணி மூக்குக் குத்தாதவள். சினேகிதிகளான ஜானகியையும் செல்வராணியையும் விடுதியிலே எப்போதும் இணைபிரியாது காணலாம் என்று எல்லா மாணவிகளுமே சொல்லிக்கொள்வார்கள்.

ஏதோ நினைவில் ஜானகி தன்னுடைய மூக்கைத் தடவிப் பார்த்தாள். பேசரி அணிந்து, இப்போது சிறிது தூர்ந்து போய்விட்ட மூக்குத் குத்திய துவாரம் விரலில் நெருடிற்று. தாதிமார் பயிற்சி நிலையத்திற்கு வரும்போது பேசரியை அடைவு வைத்துவிட்டுத்தான் வரமுடிந்தது. அடைவு மீட்க இந்த மாதந்தான் வழி பிறந்திருக்கிறது. கௌரி அம்மாள் இன்றைக்கு வரும்போது அந்தப் பேசரியைக் கொண்டு வருவாள்.

மீண்டும் ஜானகி வெளியே வந்து பார்த்தாள். தாயைக் காணவில்லை. ஏழு மணிக்கு வேலை முடிந்து வந்த செல்வராணிக்கு ஜானகியின் முகத்தைப் பார்த்தவுடன் அவளின் தாய் வரவில்லை என்பது தெரிந்துவிட்டது.

''செல்வா, என்னவோ தெரியேல்லை. எனக்கு ஒரே பயமாகத்தான் இருக்குது. அம்மா இண்டைக்கு வாறனெண்டு எழுதினவ. பிறகு ஏன் வராமல் விட்டவ எண்டு எனக்குத் தெரியேல்லை...''

''சிலவேளை பஸ்ஸை விட்டிருப்பா...'' செல்வராணி ஆறுதல் சொன்னாள்.

''கீரிமலையிலிருந்து அரை மணித்தியாலத்துக்கொரு பஸ் இருக்கு'

செல்வராணி மீண்டும் மௌனமானாள். ஜானகியின் கண்கள் கலங்கியிருந்தன. சிறிது நேரத்தின் பின் ஜானகியே கதைத்தாள்:

''நான் நேர்சாக இஞ்சை வந்த விஷயம் அண்ணனுக்குத் தெரியாது. அப்பாவின்ரை அந்திரட்டிக்கு வந்தவர் பிறகு வீட்டுக்கு வரேல்லை. என்ரை அயலிலை உள்ளவைக்கு என்னைப் பிடிச்சுத் தின்னுற கோவம்... நான் நேர்சானதாலை எங்கடை சாதி போட்டுதாம், சம்பிரதாயங்கள் போட்டுதாம்...''

ஜானகி துயரோடு பேசாதிருந்து விட்டு மீண்டும் தொடர்ந்தாள்:

''செல்வா, நான் இங்கை வந்ததற்குப் பிறகு இரண்டு தரந்தான் வீட்டிற்குப் போனனான். அம்மா அங்கை கூனிக்குறுகிக்கொண்டு சீவிக்கிறா. எல்லாரையும் விடப் பெரிய சாதியாம் நாங்கள். ஆனால் இப்ப நான் எல்லாருக்கும் புண் கழுவிற வேலை செய்யிறனாம். இப்படி என்னாலை அம்மாவுக்கு ஊரிலை ஒரே வசை'' ஜானகி மெல்ல விசும்பினாள். செல்வராணி அதே வேளையில் தன்னையும் நினைத்துக்கொண்டு மனதினுள்ளே சிரித்துக் கொண்டாள்.

''ஜானகி நீர் அழாதேயும். ஊர் நூறு சொல்லும். பத்து வருஷத்துக்கு முந்தி முதல் முதல்லே கவுண் போட்டுக்கொண்டு கொன்வென்ருக்கு எங்கடை அக்கா படிக்கப் போனதுக்காக எங்கடை குடும்பத்தை ஊர் முழுதுவே திட்டித் தீர்த்தது. இண்டைக்கோ எங்கடை ஊரிலே ஆறு குமருகள் சயிக்கிளிலே பள்ளிக்கூடத்துக்குப் போய் வருகுதுகள். யார் என்ன சொன்னாலும் காலம் மாறிக்கொண்டு வருகுது. நீ நேர்ஸ் வேலையை ஒரு தொழிலாக நினையாதை, தொண்டாக நினைச்சுக்கொள். அந்த உண்மைக்காக என்ன பேச்சு வாங்கினால்த்தான் என்ன?''

பேசாமலேயிருந்த ஜானகி ஏதோ நினைவில் கூறினாள்:

''நான் ஏன் பிராமணத்தியாய் பிறந்தேன்?''

அந்தச் சோகமான சூழ்நிலையிலும் தன்னை மீறிக்கொண்டு செல்வராணி கொல்லென்று சிரித்தாள். ஜானகியின் பெருமூச்சு அப்போது சிறியழிந்தது. அதன் சுவடுகள் மறையுமுன் வெளியிலிருந்து இரண்டு மூன்று குரல்கள் திகைப்பில் நடுங்கிக் கேட்டன.

''ஜானகிக்கு தந்தி வந்திருக்குது!''

## இரண்டு

வீட்டு வாசலை அடையும்வரை அந்தத் தந்தியிலிருந்த சொற்கள் பேரொலியாக ஜானகியின் மனதினுள் கூவிக்கொண்டிருந்தன. உள்ளும் புறமும் அந்தச் சொற்கள் அவளைக் கலக்கத்தில் சிலிர்க்க வைத்து, "தெய்வமே விபரீதமாக ஒன்றும் நடந்து விடக்கூடாது...'' என்ற வேண்டுதலை பஸ்ஸில் வரும் போது வீதியோரமாயுள்ள கோயில்களைக் காணும் போதெல்லாம் வாயில் பிரார்த்தனையாய் வரச் செய்தது.

கைக்குள் மடித்து வைத்திருந்த தந்தியை மீண்டும் எடுத்துப் பார்த்தாள் ஜானகி — 'அம்மாவிற்குக் கடுமை. உடனே வரவும். சுந்தரேச சர்மா' தந்தி அவசரமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜானகி பஸ்ஸிலிருந்து இறங்கிப் படலையடிக்கு வந்தாள். இனந்தெரியாத கலவரத்தால் நெஞ்சு துடித்துக் கொண்டிருந்தது. மெல்லப் படலையைத் திறந்தாள். படலையைத் திறந்தவள் தலைவாசலைப் பார்த்தவுடன் திறந்த படலையை அப்படியே பிடித்தபடி நின்று விட்டாள்.

''ஜானகீ ..''

கூப்பிட்டுக்கொண்டே கௌரியம்மாள் களிவோடு படலையடிக்கு வந்தாள். கௌரியம்மாள் மூன்று நான்கு அடிகள் எடுத்து வைக்குமுன் உள்ளேயிருந்து சுந்தரேசனின் செருமல் கேட்டது. கௌரியம்மாள் சுந்தரேசனை எரிப்பது போல நிற்க ஜானகி அவனைப் பார்க்காமலே தலை குனிந்தாள்.

''போய்க் குளிச்சிட்டு உள்ளை வாருங்கோ''

சுந்தரேசனின் குரலில் கேலியும் கண்டிப்பும் கலந்திருந்தன. ஜானகிக்கு ஏதோ விபரீதம் நடக்கப்போகிறதென்பது விளங்கிவிட்டது.

ஜானகி கிணற்றில் குளிக்கும்வரை கௌரியம்மாள் ஒன்றும் பேசா மலே கிணற்றடியில் நின்றாள். மகளை அவள் கவலையோடு பார்த்து நெடு மூச்செறிந்தாள். 'மனம் தியங்கி அனுங்கிற்று.

'ஜானகிக்கு இப்ப கலியாணம் ஆகவேண்டிய வயது. என்ரை தவம், குடும்பத்துக்காக இப்பிடியே தேய்ந்து கொண்டு போகுது. என்ரை தெய்வம் மேலையிருந்து இதையெல்லாம் பார்த்துக்கொண்டு எப்பிடியெல் லாம் புலம்புறாரோ... அவரின்ரை ஆத்மாவே சாந்தியில்லாமல் துடிச்சுக் கொண்டிருக்குமோ?...''

கௌரியம்மாளின் கண்கள் கலங்கின, நெஞ்சைப் போல:

'முந்தி இந்தப் பிஞ்சு முகத்திலையிருந்த சந்தோஷம் எங்கை? ஜானகி எண்டு கூப்பிட்ட உடனே என்ன மாதிரி என்ரைபிள்ளை துள்ளிக் குதிச்சுக்கொண்டு ஓடிவரும், இப்ப முருங்கக்காய் மாதிரி வத்தல் பத்தி வந்திருக்குது. ஊருக்குள்ளேயும் நிம்மதியில்லை. இவ்வளவு நாளும் நாங்க பட்ட கஷ்டத்தைக் கேட்க ஆளில்லை. இப்ப இவன் வந்து சாதிபோட்டு தெண்டு சத்தம் வைக்கிறான்'

ஜானகி குளித்துத் துடைத்துவிட்டு திருநீற்றுக் குடுவைக்குள் திரு நீற்றை அள்ளிப் பூசிக்கொண்டு நிமிர்கையில் சிவசுப்பிரமணிய சர்மா படமாகி மேலே தெரிந்தார். செவ்வரத்தைப் பூச்சரம் அவரின் படத் திற்குச் சூட்டப்பட்டிருந்தது. ஜானகியின் கைகள் கூம்பி, கண்கள் பிரார்த் தனைக்காகக் குவிய 'அப்பா' என்ற தளதளத்த குரலில் வாய் முணு முணுத்தது.

''ஜானகி...'' சுந்தரேசனின் குரல் கர்ண கடூரமாக ஒலித்தது. ஜானகி கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்ப, கௌரியம்மாள் அவளின் பக்கத்திலே வந்து நின்றாள்.

சுந்தரேசன் இப்போது தலைகீழாக மாறியிருந்தான். தலையில் குடு மிக்குப் பதிலாக பாகவதர் குறோப், கிளீன் சேவ், முகத்திலே இரண் டொரு காயங்களின் வடு. முன்னையை விட ஒரு சுற்றுப் பருத்திருந்தான். குரலிலேயும் கர்ண கடூரமிருந்தது.

''எனக்கு இண்டைக்கு ரெண்டத்தொரு முடிவுவேணும்!''

சுந்தரேசன் சினந்த குரலில் கடுகடுத்தான்.

''ஜானகி... சாதிகுலம் என்ற சம்பிரதாயங்கள் சும்மா வரேல்லை. அவை தெய்வம் அருளியவை எண்டு அப்பா சொன்னது பொய்யில்லை. சம்பிரதாய விதிகளையும், வைதீக நெறிகளையும் நாங்க மறந்தாலும் நீங்க மறக்கப்படாது. அதுவும் நீ ஒருநாளும் அதுகளை மீறி நடக்கப்படாது...''

கௌரியம்மாள் மகனை ஏளனம்மேவப் பார்த்தாள்.

'இரண்டரை வருஷங்களாக வீட்டிற்கு ஒழுங்காகக் காசு அனுப் பாதவன் — இன்று சாதிசம்பிரதாயங்கள் போய்விட்டதென்று கொந்தளிக் கின்றான். ஜானகியும் கௌரியம்மாளும் சாப்பாட்டிற்கு வழியின்றி எத் தனையோ நாட்கள் பட்டினி கிடந்திருக்கின்றார்கள். பக்கத்து வீட்டுப் பூர

ணம் அவர்களின் நிலைமைக்கிரங்கி ஒரு கொத்தரிசி கொடுத்தபோது, அவ ளிடம் வாங்கினுல் அது தங்கள் சாதிக்கு இழுக்கு என்ற பயத்தினுல் நிரா கரித்திருக்கிருர்கள். பிறகு பசி தாங்கமுடியாத நிலைமையில் தாங்கள் பிராமண குலத்தில் பிறந்தமைக்காக தங்களையும், தங்கள் சம்பிரதாயங் களையும் நொந்து நொந்து அழுதார்களே...'

''சுந்தரேசா, நீ இப்ப என்ன கேக்கிருய்?''

கௌரியம்மாளின் கேள்விக்குத் தாமதமின்றிப் பதில்வந்தது.

''ஜானகி இனிவேலைக்குப் போகப்படாது...''

ஜானகிக்கு நெஞ்சில் இடிவிழுந்தது. அவனின் மனக்கோட்டைகள் யாவுமே தரைமட்டமானதுபோல இதயத்துள் துக்கம் பரவிற்று. ஆனுல் கௌரியம்மாளினது முகத்திலோ ஏளனம்.

''பிரபு கட்டளையிடுகிருர். ஜானகி நீ கேள்..''

''அம்மா, நீ என்ன சொல்லுருய்?'' சுந்தரேசன் உறுமினுன்.

''சுந்தரேசா, நீ எனக்குத் தெரியாமல் பொய்த்தந்தி அடிச்ச போதோ நான் உனக்கு மறுமொழி சொல்லியிருக்கவேணும். விட்டிட்டன் இப்பிடிச் சித்திரவதை செய்யத்தான் ஜானகியைக் கூப்பிட்டனியா? நீ பெரிய சாத்திரமெல்லாம் கதைக்கிருய். மானம் போட்டுதென்று சத்தம் வைக்கிருய். ஜானகி ஒற்றை உடுப்போடை வெளியிலை வெளிக்கிட முடி யாமை இருக்கேக்கை சீத்தைத் துணியிலை ஒரு யார் எண்டாலும் நீ எடுத்துக் கொடுத்திருக்கிறியா? ஒரு மூக்கு மின்னியை வாங்கு இந்தா தங்கச்சி போடு என்று சொல்லியிருக்கிறியா? அவர் போய் மூன்று வரு ஷங்களுக்கு மேலையாப் போச்சு... அதுக்குப்பிறகு நீ எங்களுக்கு எவளவு காசனுப்பினுய்? மானத்தைப்பற்றிக் கதைக்கிற நீ எங்களுக்கும் வயிறிருக் குது எண்டதைப்பற்றி மட்டும் ஏன் யோசிக்கிருயில்லை?''

கௌரியம்மாளின் குரல் கலங்கிற்று. முகத்தில் வைராக்கியம்.

''நீ இதுவரை அனுப்பின காசு எல்லாமாகச் சேர்த்து முன்னூறு ரூபாவும் வராது. இந்தக் காசிலை நாங்க சீவித்திருக்கேலுமே? சம்பிறதா யங்கள் பேச வயிறு விடுகுதில்லையே... வயிறை நிரப்பிவிட்டு உல்லாசமாக இருக்கிறவைக்குத்தான் சம்பிறதாயங்கள் சரிவரும்...''

''ஊருக்குள்ளை வந்த உடனை சனங்கள் எல்லாம் என்னைப்பார்த் துச் சிரிக்குது.''

சுந்தரேசனின் சொற்கள் கொதித்தன.

''ஊருக்குச் சிரிக்கத்தான் தெரியும்... ஊர் சிரிக்கிறதுக்காக நாங்க நெடுக அழுது கொண்டிருக்கேலாது. ஜானகி தானுகப்போகேல்லை. நானு கத்தான் அனுப்பினனுன்''

கௌரியம்மாளின் குரலில் பாதிக்கப்பட்ட வாழ்க்கையின் சீற்ற மிருந்தது.

''சுந்தரேசா நீ சொல்லிறமாதிரி ஜானகி நிக்கப்போறதில்லை...''

கௌரியம்மாள் நிதானமாகச் சொல்லிமுடிக்க, சுந்தரேசன் கைக ளைப் பிசைந்தபடி சண்டையில் தோற்ற நாயைப்போல அவர்களைப் பார்த் தான். நரும்பியபடி கூறினன்.

''இண்டைக்குத்தான் நான் உங்களைக் கடைசியாகப் பார்க்கிறன். இனி நீங்கள் செத்திட்டீங்கள் எண்டு நான் நிம்மதியாயிருப்பன்''

சுந்தரேசனின் சொற்கள் ஜானகியின் மனதை வலிய கால்களாகி உதைத்தன. அவன் நிற்கவில்லை. தன்னுடைய சூட்கேசை எடுத்துக்கொண்டு உன் மத்தம் பிடித்தவன்போல வெளியே வேகமாகச் சென்றான்.

ஜானகி கூவினள்: ''அண்ணை போகாதை நில்...''

கௌரியம்மாள் திகைத்து வாயடைத்து நின்றாள்.

அவன் போயேவிட்டான்.

## மூன்று

தாதிகள் பயிற்சிப்பாடசாலை உறக்கத்தில் கிடந்தது. ஜானகி கட் டிலில் இருந்தாள். வெளியேயிருந்து நிலவின் கதிர் கீற்றாக அறையுள் விழுந்தது. பாடசாலைக்கு முன் ஓங்கி வளர்ந்து நிற்கும் வாகைமரத்தில் காற்று மோதுண்டு ஒலி கிளம்பிற்று. எதிரே தெரியும் ஒற்றைத் தென்னை மரத்தின் பச்சையோலைகளில் நிலவு வெளிச்சந்தடவி மண்ணில் வழிந் திருந்தது.

ஜானகி நடந்ததெல்லாவற்றையும் செல்வராணிக்குச் சொல்லி விட் டாள். இப்போதுமென்ன; ஜானகியின் இருளிலாழ்ந்த கண்கள் கலங்கியே கிடக்கின்றன.

''செல்வா, பெண்ணாய்ப் பிறக்கிறது பாவம். அதிலையும் என்னைப் போலை பிறக்கிறது கொடிய பாவம்...''

செல்வராணி தன்னுடைய சிறிய நெற்றியைத் துடைத்துக்கொண் டாள்.

''ஜானகி உலகத்திலை நீர் ஓராள்த்தான் இப்பிடி இருக்கிறதெண்டு யோசிக்கிறீர். உம்மைவிட மோசமான நிலைமையிலை இங்கை ஏராளம் பேர் சீவிக்கினம். வறுமை, ஒடுக்கு முறைகள், சம்பிரதாயங்கள், சமூகத் தின்ரை அவச்சொல் — எல்லாத்தையும் தாங்கிக்கொண்டுதான் நாங்க வாழவேண்டியிருக்குது. நீர் எனக்கு உம்முடைய துயரங்களை யெல்லாம் சொல்லி அழுகிறீர். ஆனல் மற்றவையளுக்கு சொல்லாமலே இந்த அறை களுக்குள்ளையிருந்து எத்தினைபேர் அழுதிருப்பினை ... அழுதுகொண்டிருப் பினை ... அதெல்லாம் ஆருக்குந் தெரியாமலே காற்ரோடை கலந்து போயி ருக்கும் ... நாங்க பரமேசுவுக்குப் பஞ்சங்கொட்டியெண்டு பட்டப்பேர் வைச்சம். அதுக்காகச் சிரிக்கிறம். பரமேஸ் பாவம். ஏழு சகோதரிகள் அவளுக்குப் பின்னலை இருக்குது. குடும்பத்துக்காகச் சீவிக்கிருள். அவள் காசு மிச்சம் பிடிக்கேக்கை நாங்க பழிக்கிறம்... ஆனல் நாங்க: நாங்கள் எங்களுக்குள்ளையே ஒருத்தியை ஒருத்தி ஏமாத்துறம். டிஸ்ரில் வாட்டரை மருந்து என்று சொல்லி ஊசி ஏற்றி நாங்கள் நோயாளியை மட்டும் நித்

திரை கொள்ள வைக்கேல்லை. எங்களையும் அதுபோலை பொய்யாலை ஏமாற்றிக்கொண்டு நாங்களிருக்கிறம். நாங்கள் ஒவ்வொருத்தியும் பணக்காரியெண்டும், நல்லசாதியெண்டும், ஏதோ தற்செயலாகத்தான் இங்கை வந்த மாதிரியும் பாவனை பண்ணிறம் ... பெண்பாவம் செய்தவள் எண்டு சொல்லிறது அறியாமை. அவளுக்குள்ள கஷ்டத்துக்குக் காரணம், அவள் மற்றப் பொருட்களைப்போல இண்டைக்கு ஒரு வியாபாரப் பொருளாயிருக்கிறதுதான் ...''

செல்வராணி பெருமூச்செறிந்தாள்.

''ஜானகி என்னைப்பாரும். நான் இங்கை வரமுந்தி பள்ளிக்கூடத்திலை படிக்கிற போது ஒவ்வொருநாளும் அழுதழுது என்ரைமனம் வாழ்ந்திருக்குது. அண்டைக்கு நீர் அழுதுகொண்டு ஏன் பிராமணத்தியாய்ப் பிறந்தனெண்டு புலம்பினது நினைவிருக்குதே? உம்மைப்போலை படிக்கிற போது, போடிங்கிலை இருக்கேக்கை நானும் புலம்பி அழுதிருக்கிறன்...''

''என்ன?'' ஜானகியின் சோகக் குரலில் வினவுகின்ற அதிசயம்.

''ஓம்... ஆனால் நான் ஏன் பறைச்சியாகப் பிறந்தேனென்று புலம்பியிருக்கிறன்''

அந்த விநாடி அமைதி அங்கு வெளிச்சமாய் எரிந்தது. இருவருமே தத்தமது சிந்தனைக்குள் சுழன்றனர்.

''ஜானகி உமக்கு இது அதிசயமாயிருக்கும். சமூகத்தின் அடித்தளத்திலை பறையர் குலத்திலை நான் பிறந்தன். ஆறும் வகுப்பிலையிருந்து எஸ். எஸ். சி. வரை ஸ்கொலசிப்பிலை படிக்கேக்கை என்ரை சாதி தெரியப்படாதே என்ற பயத்தோடையும் சஞ்சலத்தோடையுந்தான் நான் வாழ்ந்தேன். ஆமை ஓட்டுக்குள்ளை அடங்கிற மாதிரி நானும் புத்தகங்களையே தஞ்சமென்று அடங்கினன். ஜானகி, புத்தகங்கள் என்ற உலகத்துக்கை எனக்கு நல்ல விளக்கங்கள் கிடைத்தன. பிறகுதான் உலகத்திலை எனக்கு நம்பிக்கையே வந்தது. கொஞ்சப்பேரினுடைய நலத்திற்காகத்தான் சாதி, சமயம், சம்பிரதாயமெல்லாம் இருக்குதென்று என் மனம் உணர்ந்தது. இங்கை வரும்போது நான் புதுப்பிறவியாக வந்தன். எடியே, நீ நேர்சாகப் போறாய், உனக்குக் கலியாணமே நடக்காது எண்டு கூடப் பலர் சொல்லிச்சினை. இன்னுஞ் சிலர் நேர்ஸ் வேலையே ஆட்டக்காரியளுக்குத்தான் என்று சொல்லிச்சினை. முந்தி ஆரேனும் பிழை விட்டிருக்கலாம். ஆனால் எல்லாக் காலமும் இந்த நேர்ஸ்மார் ஆட்டக்காரியளா இருக்கிறதில்லை. அவையள் கெட்டுப்போறதுக்கு அவையளுக்கு மேலை பல சந்தர்ப்பங்கள் திணிக்கப்பட்டிருக்கு. நான் இஞ்சை வந்த பிறகுதான் நேர்ஸ்மாரைப்பற்றி வெளியுலகம் எவ்வளவு தவறான அபிப்பிராயம் வைத்திருக்கெண்டு தெரிஞ்சுது. நேர்ஸ் ஒரு பெண். அவளுக்கு எல்லோரையும் போலை மன உணர்வுகள் இருக்கு என்பதை வெளியுலகம் விளங்கிக் கொள்ளாததற்கு இந்த அமைப்பிலே பெண் அடிமையாய் இருக்கிறதுதான் காரணம். எங்கையோ எப்பவோ படிச்ச ஞாபகம். அந்த வசனம் இப்பவும் மனதிலை நிக்குது. அதென்னவென்று சொல்லட்டுமா? பெண் பிள்ளைப் பெறும் இயந்திரமாகவும் விற்கவும் வாங்கவுமுரிய பொருளாகவும் எந்த அமைப்பில் இருக்கிறாளோ, அங்கே அவள் அடிமையாகத்தான் இருப்

பாள்.... இது முழு உண்மை. இப்பெண் நினைச்சவனைக் கலியாணம் முடிக்கேலாது. சுதந்திரமாய் வாழேலாது எண்டிறதுக்கு நீர் நினைக்கிற மாதிரி சாதி காரணமில்லை. கோளாறு வேறை எங்கையோ இருக்குது''

செல்வராணி நிறுத்திவிட்டுத் தொடர்ந்தாள்:

''உம்மடை கவலையை நான் தூண்டிவிடேல்லை. என்னவோ இதெல்லாம் என்ரை மனதுக்குள்ளை நீண்ட நாளாய்க் குறுகுறுத்துக் கொண்டு கிடந்தது. சொல்லியிட்டன். வீட்டிலை நடந்ததொண்டுக்கும் நீர் யோசியாதையும். இந்தச் சாதிசம்பிரதாயமெல்லாம் எப்பிடி உடைஞ்சு போகுது எண்டு நாங்க இரண்டு பேரும் ஒண்டாய் இருக்கிறதிலையிருந்து தெரியும். எவ்வளவுதான் விரும்பாவிட்டாலும், எத்தினை பேர் குறுக்காலை நிண்டு மறிச்சாலும் ஓடி வாற ஆறை ஆரும் பின்னாலை தள்ளி விடேலாது. அதுதான் அவையளைத் தலை குப்புறத் தள்ளி விழுத்தும். உங்கடை அண்ணன் சாதி போகுதெண்டு குளறலாம். ஆனல் உங்கடை வயித்தைப் பற்றி யோசிக்கத்தான் அவருக்குத் தெரியேல்லை...''

செல்வராணி கதையை முடித்துவிட்டு யோசித்த வண்ணமிருந்தாள்

## நான்கு

அவள் வீட்டிற்குப் போய் வந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது

ஜானகிக்கும் செல்வராணிக்கும் அன்று மூன்று மணிவரை வேலை. மிகுந்த ஆதரவான மென்மையோடு டெம்பரேச்சரைப் போட்டு ஜானகி மணிக்கூட்டைப் பார்த்தாள். இரண்டு பத்து.

இருபத்தாறும் கட்டிலில் கால்வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்த நோயாளிக்குச் செல்வராணி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். பதினெட்டாங் கட்டிலில் தலையிலும் காலிலும் பலத்த பன்டேஜ்க் கட்டுகளோடு கிடந்த நோயாளியை நோக்கி ஜானகி நடந்தவள்... அந்த முகத்தை...

பன்டேஜ் கட்டுக்குள் மறைந்திருந்த அந்த முகத்தைப் பார்த்தவள் உலகம் குலுங்கி எகிறிக் கவிழ்ந்ததுபோலப் பிரமையுற்றாள்.

ஜானகி மயக்கமானாள்!

''அண்ணா!''

மயக்கம் தெளிந்த ஜானகி கூவினாள்...

''அண்ணனைப் பார்க்கவேணும்... செல்வா... நான் இப்ப அண்ணனைப் பார்க்கவேணும்...''

சிஸ்ரர் அரியமலர் ஜானகியின் தலையை ஆதரவாய் வருடினாள். ''போவம், நீர் வெளிக்கிடும். பயப்பிடவேண்டாம்.''

செல்வராணி ஜானகியைக் கேட்டாள்.

''ஜானகி, உங்கடை அண்ணன் லொறியிலை வேலை செய்யிறவராம் ரெண்டரை வருஷமாய் அவர் கிளீனராகத்தான் இருந்தவராம். மூண்டு நாளைக்கு முந்தி லொறியில் அடிபட்டு அறிவில்லாமை இங்கை கொண்டு வந்ததாம்...''

ஜானகி கிறீச்சிட்டாள்.

''என் அண்ணு... ஒரு நாளும் இராது. அண்ணன் கிளினராய் நிண்டவரா? பொய்... என்னுலை நம்பமுடியாது''

## ஐந்து

வார்ட் வந்தது. ஜானகி எட்டி முன்னே போனுள்.

ஜானகியின் மனக்கண்களில் சிவசுப்பிரமணிய சர்மாவும், சுந்தரேசனும் மாறிமாறித் தெரிகின்றனர். தங்கள் சாதிக்கௌரவத்தை அவர்கள் நிலைநிறுத்த எவ்வளவு பாடுபட்டார்கள். சுகங்களைத் துறந்தார்கள். தியாகம் செய்தார்கள். அத்தகையவர்களில் ஒருவனுன சுந்தரேசனு கிளினராக... சுத்தப்பொய்...

ஜானகி வெகு ஆவேசமான பார்வையினை அந்தக்கட்டிலிலே விழுத்தினுள்.

செல்வராணி சொன்னது பொய்யில்லை; பொய்யேயில்லாத உண்மையையே அவள் சொல்லியிருக்கின்றுள்!

தலையிலும் காலிலும் கட்டோடு கிடப்பது அவளின் அண்ணன் சுந்தரேசன்தான்.

குற்றவாளியைப் போல சுந்தரேசன் அவளைக் கண்டதும் தலையைச் சரித்தான். பயங்கரமான தோல்வியை அவன் முகம் ஏற்றிருந்தது.

மௌனத்தின் வேதனை கலங்கியது. செல்வராணி சொன்னது உண்மைதான்.

இரண்டரை வருஷங்களுக்கு முன்பே சுந்தரேசசர்மா தம் குலத் தொழிலைக் கைவிட்டு விட்டார். சம்பிரதாய வரம்பிற்குள் வாழமுடியாது மாற்றத்தின் தாக்குதல்கள் அவரைக் கிளினராக்கி விட்டன.

வெளியே போகும்போது செல்வராணி சொன்ன சொற்கள் ஜானகியின் மனதினுள் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

''ஓடிவாற ஆறை ஆரும் பின்னுலை தள்ளிப் திருப்பேலாது. அதுதான் அவையளைத் தள்ளி விழுத்தும்''

## அந்த நாள் வரவேண்டும்

தபாற்காரனின் வருகையினை ஆவலோடு காத்திருந்த அவர், அவன் வந்து போனதையும் மறந்து அதிர்ச்சியில் அவன் கொடுத்துவிட்டுப் போன கடிதத்தைப் பிரித்தது பிரித்தபடியே சமைந்து போயிருந்தார். கொடூரமான கடிதம்.

அந்த வீடே அந்த நிமிஷங்களில் மௌனத்தின் கைதியாகி விட்டது.

சாமிநாதரின் மகள் புனிதவதி, சுவாமி அறையினுள் விசும்பிக் கொண்டு பயத்தின் நிழலின் கீழே குறுகிப் போய் அசைவற்று நின்றாள். வாசற்கதவு திறந்து விடுகிறாற்போல அசைகையில் அவளின் இதயம் திக்கென்று அடித்துக்கொள்கின்றது. தன் தகப்பனாரின் முன் அவள் மீண்டும் எப்படி விழிக்கப் போகின்றாள்? அந்த முதிய தந்தையின் துன்பம் கீறி உழுத முகத்தினை எப்படி எதிர்கொண்டு நோக்குவது என்ற எண்ணந்தான் அவளது அச்சத்தின் மூலவேராக இருந்தது.

அவளின் கடுமையான உழைப்பு, தியானம், வேண்டுதல்கள் எல்லாமே பொய்த்துப் போய் விட்டன. இதோ இந்தக் கடவுளர்களை வேண்டி அவள் எல்லா விரதங்களுமிருந்தாள். நேர்த்திக் கடன்கள் வைத்தாள். கோயில் மணியோசை கேட்கின்ற வேளைகளிலெல்லாம் குவிந்த கரங்களும் பணிந்த நெஞ்சமும் ஒரு வரத்தை ஒரேயொரு வரத்தினைத் தானே கேட்டன.

பதினெட்டு வயதுகளின் நம்பிக்கையாக, ஊன்று கோலாக அவளுக்கிருந்த தெய்வ நம்பிக்கையின் ஆணிவேர் அறுந்து கொண்டிருக்கின்றது.

'முருகா, கடவுளே நான் உனக்கு முன்னாலே நின்று எத்தனை வேண்டுதல்கள் செய்தேன். இந்த ஏழைக் குடிசையிலே உனக்கு விளக்கு வைச்சு ஓயாமல் வணங்கினன். என்ரை ஐயாவினுடைய ஒரேயொரு நம்பிக்கையான எனக்கு இப்ப செய்யாத அருளை இனியா நீ செய்யப் போகிறாய்?'

புனிதவதி பொருமிப் பெருமூச்செறிந்தாள்.

அவளின் அழுகைக்கு இரங்காதது ஒரு தெய்வமா?... தெய்வம்... தெய்வம் தெய்வம்...

காசு கொடுத்துக் கேள்விப் பேப்பர் எடுத்துத்தான் சோதனை பாஸ் பண்ணினவன் என்று மறைமுகமாகக் கூறப்பட்ட கணேசன் அவனது பட்டாளம் ஆகிய எல்லோருமே தேர்வினில் சித்தியடைந்து விட்டார்கள்.

கணேசனும் அவனது பட்டாளமும் அந்த ஊரிலே என்ன அடாதுடித்தனம் செய்யவில்லை? ஆனல் அவையெல்லாம் இப்போது கழிந்து மறந்து போன நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. அவர்கள் பணக்காரர்கள். வசதிபடைத்தவர்கள். அந்தஸ்திற்காகப் பரீட்சை முடிவினை எதிர்பார்த்திருந்தவர்கள். இப்போது தேர்வில் வெற்றி பெற்ற கெட்டிக்காரர்கள்.

புனிதவதிக்கோ இந்தக் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவு வாழ்வுப் பிரச்சினையாக இருந்து வந்தது. ஆனல் மூன்ருவது முறையாகவும் அவள் பரீட்சையிலே தோல்வி கண்டுவிட்டாள்.

அவளின் கண்களிலே கண்ணீர் மல்கியது.

அந்தப் புகைபடிந்த லாம்பின் கீழே தூங்கி விழுந்து விழுந்து அவள் படித்தாள். நித்திரையினை முறியடிப்பதற்காக கால்களை நீரூற்றிய வாளியினுள்ளே தோய வைத்துக்கொண்டு அவள் புத்தகக் குறிப்பினை மனநினைவினுள்ளே மீண்டுமொருமுறை எழுதினுள். உடல் தொய்ந்து தளர்கையில் எல்லாம் கண்களின் களைப்புச் சோர்தலிலெல்லாம் அவள் மிகவும் சிரமப்பட்டுத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு தன்னை மீறியதோர் திடத்தோடு பாடங்களைப் படித்தாள். அசுரதவம்.

வெளிக்கதவு காற்றிற்கு அசைந்து ஆடியது.

அந்தப் பகல்தனில் மௌனமானது அந்தகாரமொன்றை விரித்தாற் போலிருந்தது புனிதவதிக்கு.

மூன்றும் முறை.

இம்முறை அவள் நிச்சயமாக நம்பி எதிர்பார்த்திருந்தாள்.

ஐந்து பாடங்கள் பாஸ் — தமிழ்ப்பாஷை, இலக்கியம், சமயத்திற்கு 'சி' என்ற திறமைச்சித்தி, போன முறையும் இதே பாடங்கள்தான். அதற்கு முன்னர் நான்கு பாடங்கள் இரண்டு திறமைச் சித்திகள். பீடியும், சிகரெட்டும், உலாத்துமாய்த் திரிந்தவர்கள் ஆறு திறமைச் சித்தியோடு பாஸ் பண்ணியிருக்கிருர்கள்.

இரவும், பகலும், உறக்கமும், விழிப்பும் அதே தவமாய் அந்த நினைவின் வழிபாடாகவே இருந்து வந்த புனிதவதி மாபெரும் வீழ்ச்சியினை அடைந்து விட்டாள். அவள் பயில்கின்ற சரித்திரப் பாடத்தில் வாழும் நெப்போலியன் கூட இப்படி வீழ்ச்சியின் துயரை அனுபவித்துப் பொருமியிருப்பானே என்பது சந்தேகத்திற்குரியது.

மூன்ருவது முறை. பதினெட்டு வயது. பரீட்சை மண்டபத்திற்குள் இனி நுழைந்தால் அவள் எல்லோராலும் 'அம்மா' என்ற பட்டப் பெயரால் அழைக்கப்படலாம்.

''பிள்ளை இம்முறை நீ கட்டாயம் சோதினை பாஸ் பண்ணுவாய். முந்தின முறையில் பேப்பர் திருத்தினவங்கள் பெண்சாதியோடை சண்டை பிடிச்சதுக்குப் பிறகு திருத்தியிருக்கிருங்கள். அதோடை உனக்குக் கால முஞ்சரியில்லை. இம்முறை நீ நல்லாகப் படிச்சிருக்கிருய் காலமும் நல்லது. கடவுள் ஒருநாளும் எங்களைக் கைவிடமாட்டார்'' சாமிநாதர் ஆழ்ந்த நம்பிக்கையின் வசப்பட்டிருந்தார்.

''ஐயா, என்ரை ஐயா, என்னிலே எவ்வளவு நம்பிக்கை வைச்சிருந்தீங்கள்! என்னாலே உங்கடை நம்பிக்கையை நிறைவேற்ற முடியவில்லை, நீங்களே சொல்லுங்க நான் படாத பாடுபட்டுப் படிச்சன். எல்லா விரதங்களும் பிடிச்சன், நம்பிக்கையோடைதான் சோதினை எழுதினன்; இதுக்கு மேலே நான் என்ன செய்ய?''

புனிதவதியின் நெஞ்சினுள் விசும்பலொன்று சுழித்தது.

புனிதவதிக்கு கணக்குப்பாடம் ஜென்மசத்துரு. ஆசிரியர் கணித பாடம் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது வெகு கவனமாகக் கவனித்திருக்கையில் அப்போது எல்லாமே விளங்குவது போலவே தோன்றும். பிறகு தனியே இருந்து கணக்கைச் செய்யப் பார்த்தால் எல்லாமே குழம்பிப் போகும். சிகம்பர சக்கரத்தைப் பேய்பார்த்த நிலையாகி விடும். அக்கினி கொதித்து எரிகிறாற் போல் இருக்கும் அவளின் மூளைக்குள்ளே. கணக்குப் பாடத்தை அவள் சாதுரியத்தோடு பயில முயன்றும் தொடர்ந்து தொடர்ந்து தோல்வி கண்டாள்.

கணக்குக் கட்டாய பாடம் கணக்குப் பாஸ்பண்ணாதவனை யார்தான் படித்தவனென்று மதிக்கப் போகின்றார்கள்?

கணிதபாடம் கைவரப் பெறாத கையறு நிலையின்போது சில வேளைகளில் புனிதவதி யோசிப்பதுண்டு. இந்தக் கணக்குப்பாடத்தைக் கட்டாய பாடம் என்று உயிரை வருத்துகிறார்களே, இந்தக் கணக்கினால் வட்டியும் முதலும், சரக்குமுதல், பரப்புப்பற்றி மூளையைக் கசக்கிக் கசக்கிப் படிப்பதனால் வாழ்க்கைக்கு என்ன லாபம் இருக்கிறது? வாழ்க்கைக்கு என்ன லாபம் இருக்கிறது? வாழ்க்கைக்கு என்ன பயன்பாடு இருக்கின்றது? பிறகு யோசிப்பாள். எனக்கு வரமாட்டாதென்பதினால் கணிதத்தால் என்ன பயன் என்று கேட்கிறேன்? பெற்ற தாயைப் பிஞ்சுப் பருவத்திலேயே இழந்து போன புனிதவதிக்கு எல்லாமாக இருந்து வளர்த்த சாமிநாதர் தன் இறுதிக்கால நிழலாக அவளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார். பியூப்பிள் ரீச்சர், பிறகு ஆசிரிய பயிற்சி. திருமணம் பேரப்பிள்ளைகளோடு கொஞ்சுதல் - எவ்வளவு சுகமான கற்பனைகள்! மனதுறங்கும் பூப்படுக்கையான முதுமைக் கனவுகள்.

இப்போது, இப்போதோவெனில்?

மூன்றும் முறை பதினெட்டு வயது. ஐந்து பாடங்கள்.

கோயில் மணி பன்னிரண்டை நினைவூட்டி ஒலிக்கின்றது.

இன்று ஆறு மணி உதயகாலப் பூசையை மணி நாதம் நினைவூட்டுகையில் புனிதவதி பக்திப் பூவாக மலர்ந்து பிரார்த்தித்தாள்!

புனிதவதி மௌனமாக நிற்கிறாள். இப்போது வெறும்மனம்.

எல்லாமே பொய் ... எல்லாமே பொய் ... பக்தியென்பது பொய். திறமையென்பது பொய். பொய். வாழ்வு என்பதே பொய். உணர்ச்சிக்கு அடிமையாகிவிட்ட அவளின் நெஞ்சமானது அவளது நம்பிக்கைகளையே பழித்து நிராகரிக்கின்றது.

பதினெட்டு வயது பொருமிப் பொருமி வெறுப்போடு மனஞ் சினக்கிறது.

## இரண்டு

''நான் ஒரு வெறும் மண்டூகம் மூளையில்லாத மொக்குப் பிறவி, என்னைவிட வயது குறைஞ்சதுகள் எல்லாம் சோதினை பாஸ் பண்ணியிருக்க நான் மட்டும் மூன்றும் முறையும் பெயில் விட்டிருக்கிறன். இனி எப்படி நான் ஆக்களின்ரை முகத்திலை முழிக்கிறது?''

இறந்துபோன தாயோடு அவள் மானசீகமாகப் பேசிக்கொண்டாள்.

''அம்மா, நீ என்னைப் பெத்தநேரம் ஒரு அரிசி மூட்டையைப் பெத்திருக்கலாம். அல்லது ஒரு பொடியனாக என்னைப் பெத்திருக்கலாம். கூலிவேலை செய்தாவது ஐயாவைச் சுகமாக வைச்சுப்பார்க்க முடியும். இந்த மூளைகெட்டவளுக்கு நீங்க செலவழிச்ச காசைச் சேர்த்து வைச்சிருந்தால் இண்டைக்கு நீங்க ஒரு மாளிகையே கட்டியிருக்கலாம். ஐயா, என்னை வைச்சு நீங்க எத்தினை கனவு கண்டீங்கள் எல்லாவற்றையுமே நான் பொய்யாக்கி, உங்களுக்குப் பாரமாகி...''

புனிதவதியின் மார்புச் சட்டை நனைந்து ஈரமாகிவிட்டது. தலை கனத்து வலிக்கிறது. எப்படியோ சமைத்து முடித்துவிட்டது. மனதை நிலைப்படுத்தி சமைத்து முடித்துவிட்டு குசினிக்குள் இருந்து யோசித்தபடியே, வெளியேபோன தகப்பனை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் புனிதவதி.

இனிச் சிலவாரங்களுக்கு அவள் வெளியே தலைகாட்ட முடியாது. சோதினை மறுமொழியை அறிந்து கேட்பவர்கள், அறியாமல் விசாரிப்பவர்கள், அனுதாபங் கூறுபவர்களின் நச்சரிப்புக்கள் பலமாகக் கால்கள் பதிந்து அணிவகுத்து வந்து நெஞ்சினைத் துன்புறுத்திக் குடையும்.

ஐந்து பாடம். மூன்றும் முறை. பதினெட்டு வயது. பின்னாலே துரத்தித் தொடரும் ஏளனச் சிரிப்புகள்.

மொக்குப் பெட்டை.

அம்மாவாகிற வயதிலை சோதினை எடுக்கப் போகிறாவாம்.

இரக்கமற்ற நாக்கு. பரிகசிப்பு. நெஞ்சைச் சுடும் அக்கினிச் சிரிப்புகள்.

புனிதவதி தன்னைத்தானே மீண்டும் நினைத்துப் பார்த்தாள்.

நான் மொக்கா, மண்டூகமா, மூளையில்லாதவளா?

ஜி. சி. ஈ. வகுப்புவரை அவள் எந்த வகுப்பிலும் ஒரு முறைக்கு மேலே இருந்ததில்லை. இப்போது கூட சமயபாடம் அவளுக்கு வரிக்குவரி மனனம். தமிழிலக்கியம், பாஷை சுகாதாரம் எல்லாம் தண்ணீர்பட்டபாடு. ஆனால் அவள் கணிதபாடம் செய்யமாட்டாள். அவளால் வேகமாக எதையுமே எழுதமுடியாது. இப்பொழுது அவளை அழைப்பித்து வேண்டுமானால் எல்லாப் பாடத்தையும் கேட்டால் அப்படியே திருப்பிச் சொல்லுவாள். அப்படியானால் புனிதவதி மொக்கா, மண்டூகமா, மூளையில்லாதவளா?

ஜீ. சி. ஈ சோதினைக்கு நான் நாலு வருஷங்கள் படிச்சன். நாலு வருஷமாகப் படிச்ச பாடங்களை மும்மூன்று மணித்தியால சோதினையிலை வைச்சு எப்பிடிக் கெட்டிக்காரிமொக்கு என்று அளவிடமுடியும்? குறிப்பிட்ட கேள்வி வருமெண்டு நினைச்சுப் படிச்சு அந்தக் கேள்விகளே சோதினைக்கு வந்து அதை நல்லா எழுதிப் பாஸ் பண்ணிறவன் கெட்டிக்காரனா? அல்லாட்டில் என்னைப் போலை எல்லாத்தையும் படிச்சும் ஒண்டு ரெண்டு பாடம் செய்ய முடியாததாலை பெயில் விடுகிறவை, மூன்று மணித்தியாலத்துக்கை மறுமொழி செம்மையாக எழுத முடியாமல் குண்டடிக்கிறவை மண்டுகங்களா?

புனிதவதியின் மனதினுள்ளே சிந்தனைகள் முறுகி முறுகிப் பரவின. மனதினை அழுத்துகின்ற வேதனைச் சுமைகளிடையே அமைதியைத் தோற்றுவிக்கும் சிந்தனை மெல்லவே ஊற்றெடுக்கையில் நெஞ்சு சிறிது லேசாவது போல புனிதவதி உணருகின்றாள். துன்பங்கள் நசிக்கையில் அந்த நசிப்பின் துயரிடையே அந்த நசிப்பினை எதிர்கொள்ளும் துணிவும் கர்ப்பந்தரிக்கின்றது.

வெளியே யாரோ செருமும் ஓசை கேட்கின்றது. நிச்சயமாக அது தகப்பனின் செருமல் அல்ல என்பதனைப் புனிதவதி நன்றாக அறிவாள். அப்படியாயின் வருவது யாராயிருக்கலாம்? காலைத் தேய்ப்பதுயார்?

''தங்கச்சி ... புனிதம்''

வெண்கலக் குரலுக்குரியவர் 'கிளாக்கர் மாமா' என்ற அருணேசர்.

புனிதவதி தன்னைச் சுதாரித்துக்கொண்டு எழுந்து வெளியே போனாள். வெய்யிலின் வெம்மை தாங்கமுடியாத அருணேசர் நெற்றி வியர்வையை விரலினால் வழித்து விசிறிக்கொண்டு, முன்புறத் திண்ணையிலிருந்த சாய்மனைக் கதிரையிலே உட்காரப் போனார்.

'என்ன மாமா வெய்யிலுக்குள்ளாலை விழுந்தடிச்சுக் கொண்டு எங்கை போயிட்டு வாறிங்கள்.'

குரலை உற்சாகப் படுத்திக் கொண்டு கேட்டாள் புனிதவதி.

''நொத்தாரிசிட்டை வந்தனான். அண்ணர் நேற்றுப் பின்னேரம் வீட்டுக்கு வந்து தேடினவராம் அதுதான் வந்தனான் அண்ணரை எங்கை காணவில்லை?''

இளவயது முதலாக நட்புக்கொண்டு ஒருவருக்கொருவர் உற்ற துணையானவர்கள் அருணேசரும் சாமிநாதரும். ஒருவர் நினைப்பதனை மற்றவர் மனதாரச் சொல்லுகின்ற அத்தியந்த சினேகிதம் அவர்களுக்கிடையே நிலவியது.

''வெளியிலை போயிட்டார். இப்ப வந்திடுவார். பொறுங்க நான் மோர் கொண்டு வாறன்'' அவள் துருதுருப்போடு கூறுகின்றாள்.

'மூண்டு மணியாகிப் போச்சு. இந்த வெய்யிலுக்குள்ளை எங்கை போனவர்?''

அவரின் கேள்விதனையே கவனிக்காதவள் போல மோர் எடுப்பதற்காக உள்ளே போய்விட்டாள் புனிதவதி.

மோரைக் குடித்துக்கொண்டே அவளைப் பார்த்தார் அருணேசர்.

''என்ன, முகம் நல்லா வாடியிருக்குது?''

மிகவும் பிரயத்தனத்தோடு புனிதத்தின் குரல் சமாளிக்கின்றது.

''என்ன, என்ன சொன்னீங்கள்? (குரலினை இழுத்து நிறுத்தும் முயற்சி தோல்வியடைகின்றது. பொய் சொன்னவுடனேயே பிடிபடும் இயல்பு அவளுக்கு) நான் வழமை போலத்தானே இருக்கிறன்.''

அவள் சொல்லி முடியுமுன் அருணேசர் மென்முறுவலோடு கூறினார்.

''புனிதம், எனக்கு எல்லாம் தெரியும்...''

புனிதவதி கூசிக்குறுகித் தலை குனிந்தாள். கண்களிலே நீர் துளும்பிற்று.

''மாமா, சோதினை முடிவு இப்படி வருமெண்டு நான் எதிர்பார்க்கவேயில்லை. ஐயாவும் அந்தக் கவலையிலைதான் எங்கையோ வெளியிலை போய்விட்டார்''

அருணேசர் அவளைப் பார்த்த பார்வையினை எடுத்து வெளியே முற்றத்திலே வீசினார். அலட்சியபாவம்.

''நீதான் குழந்தைப் பெட்டை. அண்ணன் கூடக் குழந்தையாகிப் போய் விட்டாரோ? இதுவும் நல்லதுக்குத்தான். அங்கை அண்ணரும் வாறார். அவரோடை நான் கன விஷயங்கள் கதைக்க இருக்குது''

புனிதவதி வாடிய உருவினோடு வந்த தகப்பனைக் கண்டதும் உள்ளே போய்விட்டாள். எனினும் அவளின் சிந்தனைகள் அவர்களின் பக்கத்திலேயே தரித்துவிட்டன.

## மூன்று

ஒரு வரண்டு வாடிய சிரிப்பினோடு அருணேசரைப் பார்த்து விட்டு முன் திண்ணையிலே ஏறிப் பார்வையினைக் கூசிக்கொண்டே கதிரையில் உட்கார்ந்தார் சாமிநாதன். வாழ்விலே பல பேரிடிகளையெல்லாம் தாங்கி, மனம் ஆறுதலுற்று மகளின் புன்னகைக்காகத் தன்னுடைய முகத்தின் துன்பங்களினையெல்லாம் அழுத்தித் துடைத்தெறிந்திருக்கிறார் சாமிநாதன். ஆனால் பல கற்பனைகளைச் செய்து நம்பிக்கைகளை வளர்த்து நாளிலும், பொழுதிலும், கனவுகளிலும் நடக்கப் போகின்றது என நினைத்திருந்த ஒரு விஷயம் தன்னை முற்றிலுமே ஏமாற்றிவிட்டுச் சென்றதனை எண்ணுகின்ற போதினிலெல்லாம் அவரது மனம் தவிக்கின்றது. ஆறுதலிழந்து குழம்புகின்றது.

''என்ன இது. வந்த நேரம் துவக்கம் நானுந்தான் பாக்கிறன். தகப்பனும் மகளும் அழாத குறையாக நிக்கிறீங்கள் என்ன விஷயம்?''

உள்ளேயிருந்த புனிதவதி காதினைக் கூர்மையாக்குகின்றாள்.

''எதையெண்டு சொல்ல? ஒரு பெரிய நம்பிக்கையே மண்ணோடு மண்ணாகிப் போச்சுது, இனி என்ன செய்யிறதெண்டே தெரியாமலிருக்குது''

சாமிநாதரின் குரல் அழுகிறாற்போல அலுத்துக்கொள்கிறது.

''என்ன விஷயம்? எதைச் சொல்லுறீங்கள்?''

''புனிதத்தின்ரை விஷயந்தான். சோதினை முடிவு வந்திட்டுது''

சாமிநாதரின் வாயிலிருந்தே விஷயத்தினை வரவழைத்துக் கொண்டவராய் அருணேசர் சிரித்தார். பிள்ளைச் சிரிப்பு.

''அடடே, இதுக்குத்தான் இவ்வளவு துக்கம் கொண்டாடுறீங்களா?''

அருணேசர் பிடரிப் பக்கமாகத் துடைத்துக்கொண்டு சில நிமிஷங்கள் மௌனமாக இருந்து விட்டுக் கூறத்தொடங்கினார்.

''இந்தச் சோதினை முடிவு எதிர்பார்த்திருந்த உங்களுக்கும் பெரிய ஏமாற்றமொண்டைத் தந்திருக்கிறது இயல்பும் உண்மையுந்தான். ஆனால் அதுக்காகப் பெரிய கவலையையும் துக்கத்தையும் வாழ்க்கையில் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளுறது சரியெண்டு எனக்குப் படவில்லை.''

''இதுக்கு ஆரைக் குறைசொல்லீறதெண்டு எனக்குத் தெரியேல்லை. கடவுளைக்கூட நம்பமுடியவில்லை. காசுள்ளவனோடைதான் கடவுளும் நிக்கிறார்''

சாமிநாதரின் தொய்ந்த குரலிலே காயம்பட்ட துடிப்பிருந்தது. கடவுளையே அனுதினமும் நெஞ்சார அழைக்கும் அவரின் சலிப்பான குரல், புனிதவதியின் மனதினைத் தொட்டது. நம்பிக்கைத் துரோகம் செய்யும் எதுவுமே மனிதனால் வெறுக்கத்தக்கதாகி நிராகரிப்பிற்குட்பட்டு விடுகிறது என்பதை அவள் அடிமனமானது அப்போது உணர்ந்து கொள்ளுகின்றது.

''இதைப்பற்றி நீங்களோ, புனிதமோ வருத்தமடையவோ குறைபட்டுக் கொள்ளவோ தேவையில்லை. குறையெல்லாம் எங்கடை கல்வியமைப்பிலும், சமுதாய அமைப்பிலுந்தான் தங்கிருக்குது. அத்திவாரம் பிழையெண்டால் எல்லாந்தான் பிழைச்சுப் போய்விடும்''

''ஆனால வாற கஸ்டமெல்லாம் ஏழைகளுக்குத்தான் வருகுது. காசுள்ளவன்தான் எல்லாத்திலும் முன்னுக்கு நிக்கிறான்''

சாமிநாதரின் குரலிலே அருவருப்பு முணுமுணுக்கின்றது.

''சோதினை வைக்கிறதின்ரை அர்த்தம் எங்கடை நாடுகளிலை திறமையுடையவனைத் தெரியிறதுக்காகவோ, மதித்து உற்சாகப்படுத்திறதுக்காகவோ இல்லை. கொஞ்ச உத்தியோக இடங்களும் கூடின உழைப்பாளியளும் இருக்கிற எல்லா இடத்திலுமே இந்தச் சோதனை முறை இருக்கும். ஐம்பது காலியிடங்களுக்கு ஆறாயிரம் பேர் போட்டி போடுகிற நாடுகளிலை பணமுள்ளவனும், ஆளணி உள்ளவனும் முண்டியடிச்சுக்கொண்டு அந்த ஐம்பது பேருக்கை வாறத்துக்குத் தெண்டிப்பான்.''

சாமிநாதர் விரக்தியோடு சிரித்தார்.

''எங்களைத் தேறுதல் படுத்துறதுக்காக இலட்சிய வாதம் பேசுறீங்கள் நீங்கள்.''

புனிதவதிக்கு நெஞ்சு திக்கென்றது, தகப்பனாரின் எடுத்தெறிந்த பதிலினைக் கேட்டு. இதுவரை நாளும் அருணேசருடைய கருத்துக்களிலிருந்து தன்னுடைய தகப்பனார் மாறுபட்டதில்லையென்பதனைப் புனிதவதி நன்றாக அறிந்திருந்தாளாதலால் இன்று அருணேசர் சொன்னதை அப்படியே சாமிநாதர் தட்டிவிட்டுப் பதில் சொன்னபோது புனிதவதியின் மனம் துணுக்குற்றது. அவளின் மனம் பரபரப்படைகையிலே அருணேசரின் குரல் கம்பீரத்தோடு கேட்கின்றது.

''உங்களைச் சமாதானப் படுத்துறதிற்காக நான் இதைச் சொல்லவில்லை. நல்லா ஒரு முறை யோசிச்சுப் பாருங்கோ. வெறுமனே உணர்ச்சிவசப்பட்டுக் கதைக்கிறதாலை ஒரு விஷயமும் தெளிவாகிறதில்லை. இந்தக் கல்வியமைப்பு கொலோனியல் காலத்தைச் சேர்ந்தது. வெள்ளைக்காரன் தோட்டத்துக்கு கிளாக்மாரை எடுக்கிறதுக்காகத்தான் இந்தக் கல்வியமைப்பை இலங்கையிலை தோற்றுவித்தான். தம்முடைய தோட்டப்பயிர் ஏற்றுமதி இறக்குமதியை எழுதிக் கணக்கிட அவர்களுக்குத் தேவையானவர்களை உருவாக்கவே அவன் விரும்பினான். பாஷையையும், கணிதத்தையும் அதனாலைதான் கட்டாய பாடமாக்கினான். தன்ரை பொருளாதார நிர்வாகத்தினை ஒழுங்காக நடத்துவதற்கு வெள்ளையன் ஏற்படுத்திய கல்வித் திட்டத்தை சில மாறுதல்களோடை இன்றை வரைக்கும் நாங்கள் பின்பற்றி வருகிறம்''

புனிதவதி அறை மூலையிலுள்ள கதிரையிலே நாடியைக் கையினில் ஊன்றியபடியே உட்காருகின்றாள். காற்றுத்திவலை மெல்ல அறைக்குளே ஊருகிறது.

''பாஷையறிவுள்ளவன் கணிதத்திலை வல்லவனாயிருக்கிறதில்லை. கணிதமூளை மொழித்துறையிலை பயன்படுகிறதில்லை. இரண்டுமே இளமனதுக்கு முரணான துறைகள். இதில் சில புறநடைகளிருக்கலாம். கணக்குப் பாடத்தினைத் திருப்திகரமாகச் செய்ய முடியாத காரணத்தாலை எத்தனையோ திறமைசாலி மேற்படிப்புக்குப் போகமுடியாத நிலைமை இந்தத் தேசத்திலையிருக்குது. கிராமங்களிலை உள்ள பிள்ளைகளுக்கு வாய்ப்பில்லாத காரணத்தாலை அவர்களின்ரை அறிவு காட்டுப் பூக்களைப் போல யாருக்குமே பயன்படாமல் கருகிப் போயிடுது. அவனவன் திறமைக்கும் இயல்புக்கும், தேசமக்களின் நன்மைக்குமேற்ற கல்வி இலங்கையில் இல்லை. இயல்புகளும் திறமைகளும் ஆளுக்காள் வேறுபட்டிருந்தாலும் ஒரே பாடத்திட்டம், ஒரே பரீட்சைக்குள்ளேதான் எல்லாருமே அடங்கிப் போக வேண்டியிருக்குது. வட்டத் துவாரத்துக்குள்ளை சதுரப் பலகையைப் போட்டு அடைக்கிற முயற்சிதான் இந்தத் தேசத்திலை நடக்குது''

புனிதவதி தன்னோடு படித்தவர்களை நினைவிலே அடுக்குகின்றாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதைகள். தங்கள் வாழ்க்கையை பரீட்சை பற்றிய பயங்களினால் திசைமாற்றிய சிநேகிதிகள் ராஜகுமாரி, கமலாம்பிகை, சரஸ்வதி, பூமணி, மகேஸ்வரிஇன்னும், இன்னும்.

''படிப்பு அறிவிற்காகவும், மன எழுச்சிக்காகவும் இல்லாமல் உத்தியோகத்திற்காக என்ற நிலமை வந்திட்டுது. தராதரப் பத்திரங்கள் அறி

வுக்கு அளவுகோலாகவும், சம்பளத்துக்கு அடையாளப் பத்திரங்களாகவும் உள்ளன. டொக்டராகவும், இஞ்சினியராகவும் வாறதுக்கு மாணவர்கள் விரும்புறத்திற்கு காரணம் சேவை மனப்பான்மையில்லை, உத்தியோகம் இலகுவாகக் கிடைக்கும் என்பதுதான் அதற்குக் காரணம். அந்தத் துறைகளிலும் நல்ல கல்லூரிகளிலே படிக்கிற காசு வசதியுள்ளவர்களுக்குத்தான் கூடிய வாய்ப்பிருக்குது''

''எந்தத் துறைக்கல்வி தேச முன்னேற்றத்தையும், பொது சனங்களின் நலனையும் மனதிலே வைத்திருக்குது? தேசத்தின் நிர்மாணத்தையோ பொதுசனங்களின் நல்வாழ்வையோ, மாணவனுடைய இயல்பான திறமையை வெளிக்காட்ட வாய்ப்பளிக்கிறதாகவோ எங்களின்ரை கல்வித் திட்டம் இல்லை. உத்தியோக வேட்டைக்கு மாணவனை ஆயத்தப்படுத்துகிற பயிற்சிக் களங்களாகத்தான் எங்களின்ரை பாடசாலைகள் இருக்கின்றன''

சுமாமிநாதரின் பெருமூச்சு இடையிட்டது: அருணேசரின் அடங்கிய குரல் மந்திர வார்த்தைகளே போன்று கணீரிட்டது.

''நீங்கள் என்னுடைய வாழ்க்கையையே எடுத்துப் பாருங்க. நான் ஒரு வீணை வித்துவானாக வர ஆசைப்பட்டன். என்ரை இயல்புப்படி நான் போயிருந்தால் நான் சிட்டி பாபுவைப் போலவோ பாலச்சந்தரைப் போலவோ வீணைவாசிப்பிலே முன்னணிக்கு வந்திருக்க முடியும். ஆனால் அது நடக்கவில்லை. (பெருமூச்சு சுழித்தது)

''என்ரை படிப்பு என்னை வேறு திசைக்கு இழுத்துக் கிளாக்கனாக்கியுள்ளது. வீணை வாசிக்க வேண்டிய கையாலை பேனையைத் தூக்கியுள்ளேனே என்ற கவலை என்னை அடிக்கடி வதைக்கிறதுண்டு. நான் சாகும் போதும் இந்த அமைப்பினை நெஞ்சாரச் சபிச்சுக்கொண்டுதான் செத்துப் போவன்''

இதுவரை எதுவுமே பேசாதிருந்த சாமிநாதன் மெல்லக் கூறினார்.

''எங்கடை வாழ்க்கைதான் பாழாகிப் போட்டுது எங்கடை தலைமுறையின்ரை வாழ்க்கையுமா இப்பிடிப் போகவேணும்?''

அருணேசர் சிரித்தது கேட்கின்றது.

''அவரவர் இயல்புக்கேற்ற கல்வி, எல்லோருக்கும் நம்பிக்கையான வாழ்க்கை. பலரைச் சுரண்டி ஒருவன் சொகுசாய் வாழுகிற நிலைமை இல்லாத சமுதாய அமைப்பு – இத் தன்மையில்லாத எந்த சமுதாயத்திலையும், ஒரு தலைமுறையல்ல, நூறு தலைமுறைகள் இப்பிடி அழுகையிலும் அவதியிலுந்தான் கருகிக் கருகிச் செத்துப் போகும்''

சாமிநாதன் எதையோ நினைத்துக்கொண்டு கேட்டார்.

''புனிதம் நல்ல கெட்டிக்காரி. பெயிலானது அவளுக்குச் சரியான கவலை''

புனிதவதி சிலிர்த்துப்போய் நின்றாள். அருணேசர் குரலிலே ஆத்திரம் சிறகடித்தது:

'புனிதம் நல்ல குணவதி. பொறுமைசாலி. அவள் சிறந்த குழந்தைகளிற்கு ஆசிரியையாக இருக்கத் தகுதி பெற்றவள். ஆனுல் அவள் அப்பிடி ஆகமுடியாது. பத்து வருஷப் படிப்பின் அறிவை வகுப்பறைக்கு வெளியிலே ஒருவித பயனும் தராத அறிவை — சில மணித்தியாலங்களுக்கை சோதித்துத் திறமையினை அவதானித்து முடிவு சொல்கிற இந்தக் கல்வியமைப்புக்கு, சிறப்பியல்புகளையோ, தனித்திறமைகளையோ கண்டு அவற்றுக்கு வழிகாட்டத் தென்போ, தகுதியோ இல்லை'' புனிதவதியின் சிந்தனையில் பசுமையின் நிழல் படிந்து பரவியது. தன்னுட்தானே குறுகிப் போய் நின்ற அவளை, அருணேசரின் வார்த்தைகள் நிம்மதியின் கரங்களாகி அணைத்துத் தடவி இதப்படுத்தின.

''சோதினை பெயில் ஆன உடனை தற்கொலை செய்யவும் மனநோயடையவும் இளைஞர்களைத் தயாராக்கின்ற சமுதாய அமைப்பிலே நாங்கள் வாழ்கின்றோம். மனிதனிலை பயனில்லாதவன் மோக்கன் என்று யாருமே இல்லை. ஏதோ ஒரு விதத்திலை ஒவ்வொருவனும் திறமைசாலி. அவனது இயல்பூக்கத்தையும், திறமையையும் அறிந்து அதைத் தூண்டிப் பிரகாசிக்க வைக்கிற சமுதாய அமைப்பும் கல்வி முறையும் தான் இப்ப உள்ள சகல பிரச்சினைகளுக்கும் ஒரேயொரு மருந்து. அந்த அமைப்பு உருவாகும் வரை புனிதம், புனிதத்தின்ரை மகள், மகளின்ரை மகள் என்று எல்லாரும் இப்பிடித்தான் தோல்வியினை எதிர்நோக்க வேண்டி வரும்..''

புனிதவதி பரபரக்கின்றுள், அவருடைய சொற்கள் அளித்த நிதானத்தின்கீழே அந்தப் பொற்காலம் தன்னுடைய மகளின் காலத்திலேயே அல்லாமல் தன்னுடைய காலத்திலேயே நிஜமாகி விடவேண்டுமென்று ஆவலோடு ஏங்கிக் காத்திருக்கின்றுள் புனிதவதி.

## திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம் இப்படிச் செய்வான் எனச் சண்முகலிங்கம் எதிர் பார்க்கவே இல்லை. சண்முகலிங்கம் மட்டுமல்ல திருச்சிற்றம்பலத்தோடு பழகிய வேறு யாருங்கூடத்தான் திருச்சிற்றம்பலத்தின் இந்த முடிவை நினைத்திருக்க மாட்டார்கள்.

சண்முகலிங்கம் புரண்டு புரண்டு படுத்தும் நித்திரையே வரவில்லை. அடுத்த அறையிலிருந்து இலேசாக யாரோ இருமுவது கேட்டது. அந்த மனநிலையில் மெல்லிய இருமலும் மூளையைத்தகர்க்கும் பேரோசை போலச் சண்முகலிங்கத்தின் மனதைத் தாக்க, சண்முகலிங்கம் கனத்துக் கறுத்த இருள் செறிந்திருந்த அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

வெளியே நிலவு மங்கிக்கிடந்தது. முனையுடைந்த கடற் சிப்பிபோல நிலவும் பிய்ந்ததுபோல வடிவமற்ற பாதியாய் மங்கி, சோம்பலான பிரகாசத்தை வீசிக்கொண்டிருந்தது. இரண்டொரு முகிற்திரள்கள் மேலும் கீழும் கிழிந்து காற்றுத் திசையோடு ஓடிக்கொண்டிருந்தன. இதுபோன்ற ஒரு நிலவுக்காலத்தின்போதுதான் திருச்சிற்றம்பலமும் சண்முகலிங்கமும் முதன் முதலிற் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பு நிகழ்ந்து இரண்டு வருஷங்கள் கழிந்திருக்கலாம். திருச்சிற்றம்பலத்தின் தோற்றமோ பேச்சோ எவரையும் கவரக் கூடியவை அல்ல. அதுவும் அவன் பேசுவது புத்தகவசனங்களை ஒப்புவிப்பதுபோலக் கேட்டவருக்கே மனதினுள் சிரிப்பைத் தோற்றுவிக்கும். எப்போதும் பின்னாலே முதுகைச் சுரண்டிக்கொண்டிருக்கும் இடதுகை ஒன்று தான் அவனை நினைக்கையில் மனதிலே உருவமாய் விழும். அடிக்கடி சுளித்துக்கொள்ளும் அந்த மயிரடந்த புருவங்களின் கீழே நம்பிக்கை வறட்சி தோய்ந்த அவனின் கண்கள் லேசாக அடைபட்டிருந்தன. திருச்சிற்றம்பலத்தின் தடித்த உதடுகள் மலர்வது வெகு அபூர்வம். திடீரென அரிதாக அவன் இதழ்களில் புன்னகை தவழும்; அப்படிப் புன்னகைத் தாலும் முகத்திற் பிரகாசம் கொடுத்த சில கணங்களிலே அந்த சிரிப்பு புஸ்என்று அழிந்து விடும். சிரிப்பதையும் ஓர் குற்றமான செயல் என நினைப்பது போலிருந்தது திருசிற்றம்பலத்தின் போக்கு.

முல்லைத்தீவுக்கு அரசாங்க எழுதுவினைஞனாக நியமிக்கபட்ட சண்முகலிங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்—அங்கு யாருமே அவனுக்குப் பழக்கமாகாத நிலையில், போன முதல் வாரத்தில் கடற்கரையிலுள்ள மீன் பிடிப்பட கொன்றின் பக்கத்தில் தனிமையில் உட்கார்ந்திருந்தான். மணல் பரந்து மனதினுக்கே இனம் புரியாத அமைதியினைக் கொடுக்கும் அக்

கடற்கரையில் அலையின் வயிறு குலுங்கும் சத்தலைத் தவிர வேறு ஒலி யில்லை. அந்த ஓசை கூட அக் கடற்கரையின் மௌனத்தை ரசிக்கவைக் கும் பின்னணியாக ஒலித்தது. எவ்வளவு துயரச்சுமையோடு போகிறவனது மனதையும் அந்த கடற்கரையின் பரந்த தன்மையும், உயர்ந்து விழுந்து நுரைசீறும் அலைகளின் எழிலும், அந்த கருநீல வண்ணத்தின் குளிர்மை யும் கழுவி அமைதி கொடுத்து விடும் என அன்று சண்முகலிங்கம் நினை த்தான். வேலையால்களைத்து அலுவலகத்திலிருந்து திரும்பி மாலை வேளை களில் கடற்கரையில் போயிருக்கும் சண்முகலிங்கத்திற்கு இந்த அனுபவம் வாழ்வோடு என்றும் பிணைந்திருக்க வேண்டுமென்ற மன விருப்பமிருந்தது. பணமில்லாமல் அனுபவிக்கும் இச் சுகத்தை அவன் மனதார விரும்பினான்.

அலையின் நீண்ட கரமொன்று நுரையோடு சீறிக் கிளம்பி சோகி ஒன்றைக் கரையில் எற்றி உதைத்துத் திரும்பிற்று. முதுகோட்டில் சிவப்பு வரிகள் நிறைந்த நண்டுக் குஞ்சொன்று கிளுகிளுவென்று வெகு தூரம் மணலுக்கு வந்துகொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்த சண்முகலிங்கம் யாரோ கூப்பிட்ட உணர்வில் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

இடது கையால் பின்முதுகைச் சுரண்டிக்கொண்டு தன்னை அழைத்த அந்த உருவத்தைச் சண்முகலிங்கம் கண்டிருக்கின்றான். முல்லைத்தீவின் புத் தகக் கடை ஒன்றிலே கண்டதாக நினைவு.

'ஏன் கூப்பிட்டீர்?' என்கிற கேள்வியைச் சண்முகலிங்கத்தின் கண்க ளாலேயே கிரகித்துக்கொண்ட அந்த மனிதன் அதற்குப் பதிலாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவன் பெயர் திருச்சிற்றம்பலம். முல்லைத் தீவிலுள்ள ஒரே புத்தகக் கடையான சரஸ்வதி புத்தக நிலையத்தில் நிக்கிறான்.

திருச்சிற்றம்பலம் சொன்னவற்றைப் புருவத்தைச் சுழித்துக் கொண்டே சண்முகலிங்கம் கேட்டுக்கொண்டிருந்தான். நேரம் போகப் போக இருவரிடையேயும் ஒருமன நெருக்கம் தோன்றிற்று. முதற் சந் திப்பிலே தங்களிடையே இறுகிய பிணைப்பொன்று தோன்றி விட்டதாய் இருவரும் தங்களுக்குள் உணர்ந்து கொண்டார்கள். திருச்சிற்றம்பலம் எப்போதுமே உரத்தகுரலிற் பேசுவான். மற்றவர்கள் தன்னைப் பார்த்து கேலி செய்கின்ற வேளைகளில் மட்டுமே அவன் மனங்சோர்வுடன் வாய்க் குள் முணுமுணுத்துக் கொண்டு போவான்; காற்பெருவிரலால் நிலத்தைத் தேய்த்துக்கொள்வான்.

முல்லைத்தீவில், மத்தியதரவர்க்கத்துக்கு கீழ்த்தட்டினருக்கு தங்கு வதற்கென்றுள்ள அந்தப் பெரிய வீட்டில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதில் தனியாக வாழ்ந்தான் சண்முகலிங்கம், அந்தப் பெரிய வீட்டின் எல்லா அறைகளிலும் பலர் வாடகைக்கு இருந்த போதிலும் அவர்களில் யாருடனும் சண்முகலிங்கம் மனம் விட்டு பழகியதில்லை.

சண்முகலிங்கம் முல்லைத்தீவுக்கு உத்தியோகம் பார்க்க வருமுன்பு திருச்சிற்றம்பலம் சரஸ்வதி புத்தக நிலையத்தின் முன்புறத்திலுள்ள ஒடுங் கிய திண்ணையில்தான் படுப்பது வழக்கம். எலும்புகளையே நக்கிச் சுரண்

டும் ஊசி நாக்கு, அங்கு வீசும் பனிக்காற்றுக்கு. அதுவும் கடற்காற்று. கடையின் முன் திண்ணையில் சுருண்டிக்கொண்டு சின்னப் போர்வைக்குள் வெடவெடக்கும் திருச்சிற்றம்பலம் ஓயாது மூக்கைச் சிந்தி உறிஞ்சிக்கொண்டிருந்தான்: எவ்வளவுதான் தலையைக்காலை மூடினாலும் கிஸ்சென்ற பனிக்காற்று அவன் மூடிப்போர்த்த போர்வைக்குள நிரம்பிப் பம்மி விழும். ஓயாத தடிமன் காரணமாக விக்ஸ் டப்பி ஒன்றை அவன் தன்னுடைய மடிக்குள் பத்திரமாக வைத்திருந்தான். வந்த புதிதில் திருச்சிற்றம்பலத்தின் இருக்கை பற்றி சண்முகலிங்கம் ஒன்றுமே விசாரிக்கவில்லை. அங்கு இருக்கத்தொடங்கி ஒரு மாதங்கழிந்த பின்னர்தான் சண்முகலிங்கத்தோடு ஓரளவு அறிமுகமாயிருந்த இரத்தினசிங்கம் திருச்சிற்றம்பலத்தின் இந்தப் பேய்த்தனமான வேலையைப் பற்றிச் சொன்னான்.

மறுநாள் மாலையில், சண்முகலிங்கமும், திருச்சிற்றம்பலமும் கடற்கரையில் இருந்து கதைத்துக்கொண்டிருக்கையில் நட்புக் கலந்து தொனித்த அழுத்தமான குரலில் தன்னுடைய அறையிலேயே திருச்சிற்றம்பலத்தையும் வந்து தங்கும்படி சண்முகலிங்கம் வேண்டிக்கொண்டான். திருச்சிற்றம்பலம் ஒரு உதிரித் தொழிலாளியாக இருந்தபோதிலும் தனது நட்புக்கு மிக அவசரமாய் ஒருவன் தேவைப்பட்டதால் மட்டுமல்லாது திருச்சிற்றம்பலத்தின் ஒளிவுமறைவற்ற குணங்கள் காரணமாகவும் திருச்சிற்றம்பலத்தோடு சண்முகலிங்கம் சினேகிதம் வைத்துக் கொண்டான்.

திருச்சிற்றம்பலம் தனது உடமைகளோடு சண்முகலிங்கத்தின் அறைக்கு வந்தான் - ஒரு பழைய சூட்கேசுக்குள் உடுப்புகள், அரைப் பழசான மண்ணெண்ணைக் குக்கர், சில புத்தகங்கள், கடதாசிப் பெட்டி நிறைய தட்டுமுட்டுச் சாமான்கள், இவற்றை எல்லாம்விட விசேஷ கவனத்துடன் கொண்டுவரப்பட்ட இரண்டு படங்கள், ஒன்று விநாயகர் படம், மற்றது அவனின் குடும்பப் படம். அதுவும் ஓடுகின்ற தண்ணீரிலே தோற்ற மளிக்கும் பிரதிபிம்பம் போல உருவம் மங்கிக் கிடந்தது.

— இவைதான் அவனின் சொத்துக்கள்!

சண்முகலிங்கம் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான்.

மிட்டாய்க்காரனின் மிஷினுக்குள் அரைபட்டுவரும் தும்பு மிட்டாய் போல முகிற் குவியல்கள் வானத்தின் கிழக்கு மூலையில் துணுக்குகளாய் ஓடிக்கொண்டிருந்தன. அவ்வேளையில் சண்முகலிங்கத்தின் மனத்திற்குள் இனந்தெரியாத பொருமல், கூக்குரல், பயங்கரம் யாவும் கலந்து சீறிற்று.

— திருச்சிற்றம்பலம் எங்குபோய் எப்படி...?

தன்னுடைய அந்தச் சொத்துகளை தனது வீட்டு விலாசத்துக்கே அனுப்பும்படியும், தன்னை யாருமே தேடவேண்டாம் என்று வெகு உருக்கமாகவும் எழுதிவைத்துவிட்டுத் திருச்சிற்றம்பலம் இன்று பகல் எங்கோ போய்விட்டான். எல்லோரிடமும் அவனைப்பற்றி விசாரித்தாகிவிட்டது. அவன் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் வந்து தன்னிடம் திறப்பைத் தந்துவிட்டுச் சாப்பிடப்போய் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போனவன் மாலைப்பொழுதாகியும் திரும்பிவரவில்லை என்று சொன்னதோடு திருச்

சிற்றம்பலம் காணாமற்போனதுபற்றிய கவலையை சரஸ்வதி புத்தக நிலையச் சொந்தக்காரன் தீர்த்துக்கொண்டான். திருச்சிற்றம்பலத்தின் இந்த மாதச் சம்பளத்தை இன்னமும் கொடுக்காதபடியால் அப்பணம் தனக்கு இலாபம் என எண்ணி புத்தகக் கடையின் சொந்தக்காரன் சந்தோஷங்கொண்டான். நன்றாகக் கேட்டுப் பார்த்ததில் பகல் பத்து மணிக்கு மாங்குளம் என்ற இடத்திற்குப்போன பஸ்ஸில் திருச்சிற்றம்பலம் போனதாக அறிய முடிந்தது.

திருச்சிற்றம்பலம் ஏன் இந்த முடிவுக்கு வந்தான் என்பதை சண்முகலிங்கம் பல தடவை மூளையைக் குழப்பியும் தீர்மானித்துக்கொள்ள முடியவில்லை. சிலவேளை திருச்சிற்றம்பலம் தற்கொலை செய்துகொள்வதற்காக .. இருக்காது, அவன் தன்னுடைய குடும்பத்தை மிகவும் பொறுப்புடன் தாங்கி வாழ்பவன். தன்னுடைய தாய், தங்கச்சி, தம்பி ஆகியோருக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாக அவனே அடிக்கடி சண்முகலிங்கத்துக்குச் சொல்லியிருக்கிறான்.

ஆனால் அவன் சண்முகலிங்கத்திற்கு எழுதின அந்தக் கடிதம், அவனின் அந்தச் சொத்துக்களைத் தன் குடும்பத்தினரிடம் சேர்க்கும்படி எழுதியிருந்த விதம், தன்னையாருமே தேடவேண்டாம் என்றும், இனிக் கவலைகளற்ற உலகில் தான் வாழப்போவதாயும் எழுதிய உருக்கம் .. இவைகள் யாவும் தற்கொலை செய்யத் தீர்மானித்தவனின் முன் முயற்சிகள் தானே!

× × × × × ×

திருச்சிற்றம்பலத்திற்கு முப்பத்தியாறு வயதாகி விட்ட போதிலும், தோற்றமோ நாற்பது வயதை மதிப்பிட வைத்தது. முன்னுச்சி மயிர் முற்றாக உதிர்ந்து ஏறு நெற்றி விழுந்தது, திருச்சிற்றம்பலத்திற்குள் உள்ளூர மனதை அரிக்கும் கவலையாக இருந்தது. சண்முகலிங்கம் அறைக்குள் இல்லாத வேளைகளில் கண்ணாடியைத் தலைப்பக்கமாகச் சரித்து பல கோணங்களிலும் வைத்துப் பார்த்து தனது தலையில் விழும் வழுக்கைக்காகத் தனக்குள் தானே மனம் வெதும்புவான்.

மெல்லிய சன்னமாக உடைந்த குரலில் தன்னுடைய நிலைமையைச் சொல்லித்தானே மனம் அலுத்துக்கொள்வது அவனுக்கு நித்திய தொழிலாகிவிட்டது. வாழ்ந்துதான் என்ன பிரயோசனம்? என்று மனம் புழுங்குகிற அதே வேளையில் அதே மனம் அவனை மறுபுறத்தில் ஒரு சுயநலக்காரன், பொய்யன் என்று சுட்டிக்காட்டவும் தவறுவதில்லை. தான் வாழ்வதே தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்காக என்று அடிக்கடி சொல்லும் அவனுக்கு, மனம் முற்றாக அலுத்துக்களைத்த வேளையில் அதே விரக்தி தோய்ந்த வசனங்களே ஓயாமல் வாயிலும் நினைவிலும் வரும்.

திருச்சிற்றம்பலமே அவனது குடும்பத்தின் சுமைதாங்கி.

திருச்சிற்றம்பலத்தின் தாய் பொன்னம்மா ஓயாத நோயாளி. அவனது தங்கச்சி அன்னலெட்சுமிக்கு இருபத்தியேழு வயது. தம்பி விநாயகமூர்த்தி எச். எஸ். ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான். பொன்னம்மா கணவனை இழந்த பின்பு பலகாரம் சுட்டு விற்று வாழ்க்கையை

ஒரு மாதிரித் தாக்காட்டிக்கொள்ள முயன்றபோதும் அது மிகவும் சிரமமாக இருந்தது. அதோடு சிறுவயதிலிருந்தே திருச்சிற்றம்பலம் படிப்பில் மிகவும் குறைவாக இருந்தபடியினுல் அப்போதே ஏதாவது வேலைக்கு அவனை அனுப்ப முடிவெடுக்கப்பட்டிருந்தது. அன்னலெட்சுமி தாயோடு சேர்ந்து விற்பதற்குப் பலகாரங்கள் செய்வதற்கு உதவி ஒத்தாசை செய்துகொண்டிருந்தாள். விநாயகமூர்த்தி நன்ருகப் படிக்கக் கூடியவன். எவ்விதமான கடும் முயற்சிகளுமின்றி, எல்லாப் பரீட்சைகளிலும் முதற்தரமாகச் சித்தி எய்தினன். எஸ். எஸ். ஸி. பரீட்சையிற் சித்தியெய்திய பிறகு சிலருக்கு அவன் ரீயூஷன் சொல்லிக்கொடுத்து அவ்வருவாயிலிருந்தே தொடர்ந்தும் தன் படிப்பைப் படித்துக்கொண்டிருந்தான்.

ஒரு முறை திருச்சிற்றம்பலத்திடம் முல்லைத் தீவுக்கு விஞயகமூர்த்தி வந்தபோது சண்முகலிங்கம் அவனேடு கதைத்திருக்கின்ருன். தமையனைப் போலவேதான் விஞயகமூர்த்திக்கு மயிரடர்ந்த புருவமும் தடித்த உதடுகளும். நீள முகமுமாயினும், துறுதுறுத்த கண்கள் அவனைப் பார்த்த பார்வையில் மனதைப் பதியவைப்பனவாயிருந்தன. விஞயகமூர்த்தியோடு கதைத்த சில நிமிஷங்களிலேயே அவன் புத்திகூர்மையுள்ள திறமைசாலி என்பதனைச் சண்முகலிங்கம் உணர்ந்துகொண்டான்.

விஞயகமூர்த்திக்கு மேற்படிப்புப் படிக்கவேண்டுமென்ற ஆசை மனம் நிறையவே இருந்ததை அவனுடைய தயக்கமான கதைகளிலிருந்து சண்முகலிங்கம் கிரகித்துக் கொண்டாஞயினும் அதையிட்டு எவ்விதமான அனுதாப உணர்ச்சியையோ, உற்சாகத்தையோ காண்பிக்கவில்லை. அதற்கு அவன் மனதிற்குள்ளேயே காரணம் இருந்தது. விஞயகமூர்த்தி அங்கு வந்து நின்ற சில நிமிஷங்களுக்குள்ளேயே அந்த இன்ரவியூவுக்குப் போஞயா, இந்த வேலைக்கு மனுப்பண்ணிஞயா? என்ற கேள்விகளால் திருச்சிற்றம்பலம் அவனைத் துளைத்தெடுத்துவிட்டான். தமையன் அறையில் இல்லாதபோது விஞயகமூர்த்தி நடந்துகொண்டவிதம், கதைத்தகதைகள், சீறியெழுந்த பெருமூச்சுகள் ஆகியன தனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், சிறப்பிற்கும் திருச்சிற்றம்பலமும் ஒரு தடை என்ற குறுகுறுப்புணர்ச்சியினை மௌனமாக ஆஞல் விசனத்தோடு தெரிவிப்பதனைப் போலிருந்தது.

விஞயகமூர்த்தி அங்கிருந்து போய்விட்ட பிறகு, திருச்சிற்றம்பலத்தோடு சண்முகலிங்கம் இலேசாகக் கதையைத் தொடங்கிஞன்.

''விஞயகமூர்த்தி நன்ருகப் படிக்கக்கூடியவன். அவனை ஒருமாதிரிக் கஷ்டப்பட்டு மேலுக்குப் படிக்கவைத்தால் என்ன?''

மெலிந்து முகம் வாடியிருந்த திருச்சிற்றம்பலம், முதுகைச் சுரண்டிய இடது கையைக் கன்னத்திற்கு இழுத்து, உறிஞ்சிக்கொண்டு சிறிது நேரம் மௌனமாயிருந்தான். தனது தடித்த உதடுகளை நாக்கிஞல் நனைத்து ஈரப் பசையாக்கிஞன்.

''உமக்கு என்ன? வெகு இலேசாகச் சொல்லிவிட்டீர். இப்போதே நான் படுங்கஷ்டங்களும் ஏற்றிருக்கும் சுமைகளும் என்ஞலே தாங்கமுடியாதவைகளாக உள்ளன. எத்தனை செலவுகள்... இவை எல்லாவற்றையும்விட...''

திருச்சிற்றம்பலத்தின் உடைந்து உருக்குலைந்த குரல் தளதளத்துக் கலங்கிற்று. சிறிது நேரம் கடலின் கதறலைத் தவிர வேறு ஒலிகளின் குறுக்கீடற்ற சூழலில் அவர்கள் இருவருமிருந்தனர்.

''நான் எப்போதாவது போயா விடுமுறை நாள், விசேட நாள் என்று வீட்டிற்குப் போனதை நீர் கண்டிருக்கின்றீரா? தொண்ணூறு மைல் தூரமுள்ள என் வீட்டை தொளாயிரம் மைல் தூரத்திலேயுள்ள இடமாகக் கருதிக்கொண்டு, குடும்ப நினைவொன்றையே ஏக்கமாகச் சுமந்து கொண்டு நான் இங்கு இங்கு எப்படி வாழ்கிறேன் என்று உமக்குத் தெரியாதா!''

அந்த வார்த்தைகள் சுமந்து வந்த துயரம், சண்முகலிங்கத்தின் மன அந்தரங்கத்தையே சுண்டி இழுத்தது.

சண்முகலிங்கத்திற்குக் கிடைக்கும் லீவுகள் எல்லாவற்றையும் அவன் தன்னுடைய வீட்டிற்குப் போய் நின்று வருவதிலேயே கழித்தான். சண்முகலிங்கம் வீட்டிற்குப் போக முன் அறைத் திறப்பைத் திருச்சிற் றம்பலத்திடம் கொடுக்கும்போது மனதின் துயரை முகத்தில் காட்டாது மறைக்கும் முகபாவத்தோடு அவனிடம் திருச்சிற்றம்பலம் திறப்பைப் பெற்றுக்கொள்ளுவான். வீட்டுக்குப் போவது பற்றிய கதை வந்ததாயின், போய்த்தான் என்ன பிரயோசனம்? என்ற தொனிப்பில் ஏதாவது சொல்லி மனதைப் பிளக்கும் வேதனையையும், சஞ்சலத்தையும் நெஞ்சி னுள்ளே அடக்கி அந்தப் பேச்சையே திருச்சிற்றம்பலம் வழிமாற்றித் தடம் புரளவைப்பான். இன்றுதான் திருச்சிற்றம்பலம் தன்னுடைய வீட் டிற்குப் போகாமலிருக்கும் காரணமே சண்முகலிங்கத்திற்கு விளங்கிற்று.

''எப்பிடித்தான் மிச்சம் பிடிக்க முயற்சித்தாலும் ஒரு பிரயோச னமும் இல்லை. என்னுடைய மனதினை இரும்புக் குண்டுகள் போல பிரச் சினைகள் நசித்து அமுக்கிக்கொண்டு இருக்கின்றன. சில வேளைகளில் இந் தத் துன்பங்களுக்கு எல்லாம் அஞ்சி அவற்றை மனத்தில் இருந்து பிய்த் தெறிவதற்காக நான் புத்தகங்களிடம் தஞ்சம் அடைவேன். அவைகூடச் சில வேலைகளில் என்னைத் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றன''

விழிகளைத் தாழ்த்தி யோசித்த படியிருந்த அவனைச் சண்முகலிங்கம் ஆச்சரியத்தோடு பார்த்தான். அவன் குனிந்தபடியே மெலிந்த குரலில் புத்தகத்திலுள்ள வசனங்களை உணர்ச்சி ததும்ப வாசிப்பவனைப் போலக் கதைத்துக் கொண்டிருந்தான். ஓயாமல் புத்தகத்தைப் படித்துக் கதைப் பதைக் குறைத்துக் கொண்டமையினால் புத்தகத் தமிழே பேச்சுத் தமி ழாகி, அவன் பேசுவதே மற்றவர்களுக்கு வீசித்திரமாகிவிட்டது. அவன் பேசுவதை முதலிற் கேட்பவர் அவன் வேண்டுமென்றே அப்படிக் கதைப் பதாய் நினைத்து விடுவார்கள். அவனோடு பழகிய ஆரம்ப நாட்களில் சண்முகலிங்கமும் அவனைப்பற்றி அப்படித்தான் நினைத்தான். பழகியவர் களுக்கே விளங்குபவனாய் இருந்தான் திருச்சிற்றம்பலம்.

தன்னை மறந்து உணர்ச்சியில் சொல்லிக்கொண்டு போன திருச் சிற்றம்பலம், மௌனமாய் ஏதோ மனதினுள் நினைத்து எங்கோ பார்த் துக் கொண்டிருந்தான். புன்னகை செய்வதே குற்றமென நினைக்கும் அவ னது இறுகிய தடித்த உதடுகளில் இலேசான துயர நடுக்கமிருந்தது.

''தம்பி, இப்போது என்னைப் பாரும், எனக்கு முப்பத்தியாறு வயது. ஆனால் நான் அரைக் கிழவனாகிவிட்டேன். தங்கச்சிக்கு இருபத்தியேழு வயது. கிராமப் புறத்தில் இருபது வயதிற்குள்ளாகவே பெண்களுக்குத் திருமணமாகிவிடுவதுண்டு. ஊருக்கு நான் மிகவும் ஆசையோடும் ஆர்வத்தோடும் போனால், 'தங்கச்சிக்கு எப்போது திருமணம் செய்து வைக்கப் போகிறாய்' என்ற சொந்தக்காரரின் துளைச்சலைத் தாங்கவே முடியாது... அன்னலெட்சுமிக்கு எப்படி நான் கலியாணம் செய்து வைக்கப் போகின்றேன்? என்னுடைய கதைதான் முடிந்து போய்விட்டது... தங்கச்சியென்றாலும்...''

மனதில் சாம்பல்பூத்த துயரம் அந்த மௌன நிலவு காலத்தின் இலேசான ஒளியிலும், அவனையும் மீறி அவன் முகத்திலே பிறிட்டழுதைப் பார்த்துவிட்டுச் சண்முகலிங்கம் ஏதோ சொல்வதற்கு வாய் உன்னியபோது திருச்சிற்றப்பலம் வேட்டித்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சினான்: அது துளிர்த்த கண்ணீரைத் துடைத்ததோர் பாசாங்கு என்பதனைச் சண்முகலிங்கம் மயங்கிய வெளிச்சத்தில் தெளிவுறத் தெரிந்துகொண்ட போதும், அதனைக் காணாதவனைபோலப் பாவனை செய்து எதையாவது சொல்லியாகிலும் திருச்சிற்றம்பலத்தை ஆறுதல் படுத்த நினைத்தான்.

''எந்த நாளிலும் கஷ்டம் இருக்கிறதில்லை. வெய்யிலும் நிழலும் மாறி மாறி வருகிறதுதான்: நீங்கள் வீணாய் யோசியாதையுங்கோ''

சண்முகலிங்கத்தின் சாக்குருவி வேதாந்தத்தைக் கேட்டு திருச்சிற்றம்பலத்தின் இறுகிய உதடுகள் கேலியாக நெளியாத போதிலும், விரக்தி சிரிக்கும் கண்களினால் அவன் சண்முகலிங்கத்தைப் பார்த்தான்.

''நீர் கந்தோரிலே இருந்து எழுத்து வேலை செய்கிறதைத் தவிர வேறு எதையுமே அறியவில்லை; முன்னும் இருபத்தி ஐந்து வயதிலேயே நானும் இப்படித்தான் வாழ்க்கைக்கு உதவாத பழமொழிகளையும், வெற்றுரைகளையும் கூறிக்கொண்டு திரிந்தேன்... ஆனால் வாழ்க்கையில் நாங்கள் நேர்நேராக நின்று அனுபவம் பெறுகிறபோதுதான் உண்மை நிலைமை தெரியும். வெய்யில் இருந்தால் நிழலும் இருக்கும் என்று சொல்லுகிறீர்... முப்பத்தியாறு வருஷங்களாய் நான் வெய்யிலிற்குள்தான் நிற்கின்றேன்: இனி எப்போதுதான் நிழல் வரும்? நான் இப்போதே அரைக்கிழவன்... இனி என்னை எவள்தான் கலியாணம் முடிக்கச் சம்மதிப்பாள்?''

திருச்சிற்றம்பலத்தின் மன அவஸ்தைக்கான மூலக்குரல் அவனையறியாமலே வெளியில் ஓசையிட்டது.

'உண்மைதான், இதோ காய்ந்து கருகி, விரக்தியே ஒலியாய், உருவாய் நிற்கும் திருச்சிற்றம்பலத்துக்கு இனி நிழல்தான் இருக்கின்றதா? திருச்சிற்றம்பலம் மட்டுமா... அவன் தங்கச்சி அன்னலெட்சுமி... இது போல இன்னும் எத்தனை பேர்? இவர்கள் ஓயாத விசாரம் என்ற பாலை

வனத்தில் நடந்தலைந்து விரக்தி என்ற மண் மழையினால் மூடுண்டு மடிவதற்கா பிறந்தனர், சண்முகலிங்கத்தின் மன அரங்கிலே கேள்விகள் உருண்டு எழுந்தன.

கடல், வயிறு கிழிந்து ஓலமிட்டது,

× × × × × ×

திருச்சிற்றம்பலம் வேலை செய்யும் 'சரஸ்வதி புத்தக நிலையம்' அப்படியொன்றும் பெரிய கடையல்ல. பாடப் புத்தகங்கள், பள்ளிக்கூட உபகரணங்களோடு, வார, மாத இதழ்களும் கதைப் புத்தகங்களும் அங்கு விற்கப்பட்டன. அநேகமாக வியாபாரம் மந்தமாகவே இருக்கும். பொழுதைப் போக்குவதற்காகத் திருச்சிற்றம்பலம் மும்முரமாகப் புத்தகங்கள் வாசிப்பதுண்டு. மனதை எங்கோ பறக்கவிட்டு உணர்வின் எல்லைகளை மீறிப் புதிய உலகினைப் புத்தகங்களிற்கூடாகத் தரிசனம் செய்துகொண்டிருக்கையில் இடையில் மனம் திடீரென்று திசைமாறி விழிப்புறும்போது சுவாரஸ்யம் துக்கமென்னும் கத்தியால் அதலகுதலமாக வெட்டப்பட்டுவிடும். ஏனென்றால் காதல் நாவல்களினை வாசித்துக்கொண்டிருக்கும்போது கதாநாயகன் என்ன சொகுசாய் கம்பீரமாய் வருகிறான். அவனைத் தேடிக் காதல் ததும்பும் இதயத்தோடு கடற்கரைக்கு அழகுசுந்தரி வருகின்றாள். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் மோகந்ததும்ப மெய்மறந்து பார்த்திருக்கின்றார்கள். அவள்தான் என்ன லாவண்யமாக வெட்கப்படுகிறாள் — திருச்சிற்றம்பலத்தின் உணர்வுகள் தகிக்கின்றன — அவனுடைய அணைப்பினுள்ளே அந்தக் கதாநாயகி. அவளின் கைகளையே தன் கழுத்திற்கு மாலையாக்கி, அவள் கைகளை எடுத்துத் தன் தோள்களில் அவன் ஆசையோடு படரவிடுகின்றான். பாதி மூடிய கண்களோடு தோளில் சாயும் அவளின் கன்னத்தோடு முகம் உராயும் கதாநாயகனின் மூச்சுமட்டுமா தகிக்கின்றது; இதோ திருச்சிற்றம்பலத்தின் மூச்சுந்தான் கொதிக்கின்றது..!

சட்டென்று திருச்சிற்றம்பலத்தின் மானசீகக் கனவு கலைந்துவிடும். முன் வழுக்கை விழுந்த தலையைத் தடவியபடியே வெறுப்போடு புத்தகத்தை அடித்து மூடி மேசையில் போட்டுக்கொண்டு தன்னைத்தானே அருவருத்துத் திட்டுவான்.

''சீ, மண்ணாங்கட்டிக் கனவுகள்! அரைக் கிழவன். அதற்குள் அவருக்குக் கண்டறியாத காதல் நினைவுகள் ...''

அந்த வேளையில் சுகத்தோடும் சொகுசோடும் உலகில் வாழ்பவர்கள் அவனுக்கு எதிரியாகி விடுவார்கள். தன் நிலைமைக்கு அவர்களே காரணஸ்தர் என்ற முடிவின் ஆவேசத்தோடு அவர்கள் முழுப்பேரினதையும் கழுத்தைத் திருகிக்கொல்ல அவனது மனம் ஆவேசங்கொண்டு குமுறும். புருவங்கள் சுழியிட்டு வாய் முணுமுணுக்கும். கடைசியில் இப்படியொரு நாள் மன வெதும்பலில் இருக்கும்போதிலே யாரோ ஒருவன் 'அண்ணை' என்று திருச்சிற்றம்பலத்தைக் கூப்பிட்டமைக்காக அவனை அடிப்பதற்குத் திருச்சிற்றம்பலம் வரிந்து கட்டிக்கொண்டு போய்விட்டான்.

''என்னடா, உனக்கு இப்போது வயதென்ன? கலியாணமாகி மூன்று பிள்ளைகள் உனக்கு, என்னை நீ அண்ணையென்று சொல்லிக் கேலியா செய்கிறாய்? மடையா, என்னை அரைக் கிழவன் என்று நினைத்தா கேலி செய்கிறாய்?''

வந்தவன் நடுங்கிவிட்டான். தலைதப்பினால் போதும் என்ற யோசனையில் அங்கிருந்து நழுவி மறைந்தான்.

சரஸ்வதி புத்தக நிலையத்திற்கு வருபவர்களில் திருச்சிற்றம்பலத்திற்கு மிகவும் பிடித்தமானவன் இரத்தினசிங்கம். மலர்ந்த முகத்தோடு விளங்கும் அவன், அனாவசியமாக எதையும் கதைக்கமாட்டான். அவனும் ஒரு கடைச் சிப்பந்தி; அத்தோடு அங்குள்ள 'கடைச்சிப்பந்திகள் சங்கத்தில்' செயலாளராகவும் இருந்தான்.

ஏதாவது கதைத்துக் கொண்டிருந்தாலும் அதன் முடிவில் இரத்தினசிங்கம் ஒரு விஷயத்தைச் சொல்லத் தவறமாட்டான்.

'மனிதனை மனிதன் சுரண்டிக் கொழுக்கும் உலகிலே நாங்கள் வாழுகின்றோம். வாழ்க்கையின் பண்பற்ற தன்மையையும், அரக்கத்தனமான கொடுமைகளையும் நாம் சகித்துக் கொண்டு வாழ, அதுவே விதியென்று வாழக்கூடாது. விதிகளின் அடிமை அல்ல மனிதன். தனியாக நிற்பதன் மூலம் எங்கள் கஷ்டத்தை முறியடிக்க முடியாது. உம்மையும் என்னையும் போன்ற உதிரித் தொழிலாளிகள் விவசாய தொழிலாளி வர்க்கத்தோடு ஒன்றிணைந்து போராடுவதின் மூலமே விமோசனங் காண முடியும் ..''

இரத்தினசிங்கம், சண்முகலிங்கத்திற்கும் நண்பனாக இருந்ததால் சிற்றம்பலத்தோடு இரத்தினசிங்கத்தின் நட்பு மேலும் இறுகிற்று. திருச்சிற்றம்பலத்தின் மனப் பலவீனங்களை இரத்தினசிங்கம் மிக அனுதாபத்தோடு கவனித்துப் பதில் சொல்வான். சண்முகலிங்கத்தோடு கதைப்பதற்கும் இரத்தினசிங்கத்தோடு பழகுவதற்குமிடையே பல வேற்றுமைகள் இருப்பதைத் திருச்சிற்றம்பலம் அவதானித்திருந்தான். இரத்தினசிங்கம் திருச்சிற்றம்பலத்தின் சுகதுக்கம், குடும்ப விவகாரம் ஆகியவை பற்றி வெகு அக்கறையாக விசாரிப்பான். அவனுடைய கதைகளில் ஒளிவுமறைவிருப்பது இல்லை. சண்முகலிங்கம் தன்னைப் பற்றி விசாரிக்கும் போது ஏதோ ஒரு திரையைத் தனக்கு முன்னர் விரித்துக் கதைப்பது போலவும் சில விஷயங்களை மூடிக் கதைப்பது போலவும் தோன்றும். தானும், இரத்தினசிங்கமும் கடைச் சிப்பந்திகளாகவும், சண்முகலிங்கம் அரசாங்க எழுதுவினைஞனாகவும் இருப்பதே அதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் திருச்சிற்றம்பலம் மனதினுள்ளே நினைத்துக்கொண்டான்.

இரத்தினசிங்கம் தன்னிடமுள்ள பல புத்தகங்களைப் படிக்கும்படி திருச்சிற்றம்பலத்திடம் கொடுத்திருக்கின்றான். இதுவரையும் காதல் நவினங்களையும் துப்பறியும் நாவல்களையுமே ரசித்து வந்த அவனுக்கு இரத்தினசிங்கம் கொடுத்த புத்தகங்களை வாசிப்பது ஆரம்பத்தில் சற்று சிரமமாகவே இருந்தது. ஒருநாள் இரத்தினசிங்கம் 'தாய்' என்ற புத்தகத்

தைக் கொண்டுவந்து அவனிடம் வாசிக்கும்படி கொடுத்தான். திருச்சிற்றம்பலத்திற்கு முதலில் அதனை வாசிக்க விருப்பமில்லாதபோதும், நடுவிலிருந்து சில பக்கங்களைத் தட்டி வாசித்தான். படித்த பக்கங்கள் பிடித்துக் கொண்டமையால் ஆவலோடு முதலிலிருந்து வாசிக்கத் தொடங்கினுன். சுவாரஸ்யத்தோடு புதிய சிந்தனைகளும் அவனது நெஞ்சிலே தோன்றிற்று. அன்று மாலை இரத்தினசிங்கம் 'வீரம் விளைந்தது' என்ற இன்னேர் புத்தகத்தைக் கொண்டு வந்து திருச்சிற்றம்பலத்திடம் கொடுத்தபோது தலையங்கத்தை மனதிஞல் வாசித்துவிட்டுத் திருச்சிற்றம்பலம் சண்முகலிங்கத்தை ஊடுருவியபடியே கேட்டான்: "என்னைப் போன்றவர்கள் இந்த வீரக்கதைகளைப் படித்து என்ன செய்யமுடியும்? நானென்ன வீரஞ, வெறும் ஏழை மனிதன்"

சண்முகலிங்கம்போல மௌனமாகவிராது, இரத்தினசிங்கம் கடகடவென்று சிரித்தான்,

"பணக்காரனும் ஆளணி உள்ளவனுமல்ல வீரன், சோதனைக்கட்டத்தில் மனித சமுதாயத்தின் நன்மைக்காகத் தன்ஞல் முடிந்ததை எல்லாம் செய்கிறவன்தான் வீரன். நீங்கள் உங்களைப்பற்றி ஒருநாளும் குறைவாக நினைக்கக்கூடாது. எதிலும் தனித்து ஒதுங்கிப் போகக்கூடாது. துன்பப்படுகிறவர்கள் தனித்து நிற்கவில்லை என்பதனை நீங்கள் உணரவேண்டும்."

இரத்தினசிங்கம் அனேகமாக தொழிலாளர் போராட்டங்கள், தொழிற்சங்க இயக்கங்கள். சர்வதேச அரசியல் நிலைமைபற்றித் தெரிவிக்கும் பத்திரிகைகளைக் கடைக்குக் கொண்டு வருவது வழக்கம். ஒருநாள் கதையோடு கதையாகத் தொழிற்சங்க இயக்கங்கள் பற்றிக் கூறிவிட்டுத் திருச்சிற்றம்பலத்தையும் தங்கள் தொழிற் சங்கத்தில் சேரும்படி இரத்தினசிங்கம் கேட்டான். அப்போது திருச்சிற்றம்பலம் ஏதோ கூறி மழுப்பிவிட்டான்.

சண்முகலிங்கம் திருச்சிற்றம்பலத்தோடு அரசியல் பேசியதில்லை. "நமக்கென்ன, அரசியலில் பங்குபற்றிஞல் வேலைக்கு ஆபத்து, பேசாமலிருப்போம்" என்று கூறிஞலும் இரத்தினசிங்கத்தோடு அரசியல் இயக்கங்கள் பற்றிக் கதைத்துக் கொள்வதுண்டு.

வெளியே வானத்தையே பார்த்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த சண்முகலிங்கம் மீண்டும் அறைக்குள் வந்தான். அவனுடைய மனம் மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. அறைக்குள் இருள் மண்டியிருந்தது. கதவை அடுத்திருந்த சுவரிலுள்ள மின்சார சுவிச்சைத் தட்டிஞன். அறையெங்கும் ஒளி வெள்ளம் பாய்ந்தது. உரத்த அடக்கமுடியாத சிரிப்பினையே கேட்டறியாத திருச்சிற்றம்பலம் வாழ்ந்த அறையின் மேற்கு மூலையைச் சண்முகலிங்கம் பார்த்தான். மேற்கு மூலைச் சுவரிலே விஞயகர் படமும், அவனது குடும்பப் படமும் மாட்டப்பட்டிருந்தன. படங்களின் கீழருகாக மண்ணெண்ணைக் குக்கர் வைக்கப்பட்டிருந்தது. அவனது தட்டுமுட்டுச் சாமான்களும், புத்தகங்களுமடங்கிய பெட்டிகளின் மேல் அவன் படுக்கும் பாயும், தலையணையும் ஒழுங்காகக் கிடந்தன. அவனுடைய உடுப்புகள் அடங்கிய சூட்கேஸ் தனியாக ஒரு மூலையில் சாத்தப்பட்டிருந்தது.

சண்முகலிங்கம் நிறம் மங்கிய அந்தக் குடும்பப் படத்தையே கூர்ந்து கவனித்தான். அந்தப் படத்தினுள்ளிருந்து திருச்சிற்றம்பலத்தின் தாயும் அன்னலெட்சுமியும், விநாயகமூர்த்தியும் தன்னையே உறுத்துப் பார்த்து, "எங்கே திருச்சிற்றம்பலம்? எங்கே என் மகன்? எங்கே எங்கள் அண்ணா?'' என்று கூவுவது போல இருந்தது. திருச்சிற்றம்பலத்தின் மறைவுக்கு அவன்தான் பதில் சொல்ல வேண்டும். தன் பொருட்களை தன் குடும்பத்திடம் ஒப்படைக்கும்படி உருக்கத்தோடு எழுதி வைத்துவிட்டு மாங்குளம் போன பஸ்ஸிலே திருச்சிற்றம்பலம் ஏறிப் போய்விட்டான். அங்கே நீண்டு ஓடும் புகையிரதத் தண்டவாளங்களை மிதித்து வரும் ராட்சதப் புகையிரதத்தின் சக்கரங்களைத் தன் உடல் மீதேற வைத்து மரணமடையவா அவன் போனான்?

மாலையில் இரத்தினசிங்கத்தைத் தேடிப் பார்த்தபோது, அவன் எங்கோ வெளியே போனதாகத் தெரியவந்தது.

திருச்சிற்றம்பலம், தன் குடும்பத்தின் சுமைதாங்கி தானேதான் என்று எத்தனையோ தரம் பெருமையடித்துக்கொண்டான்; அவற்றையெல்லாம் பொய்யாக்கி விட்டு எங்கோ போனதின் மூலம் தன்னைப் பிறர் துருவித் துருவி ஆராயும் நிலைக்கு ஆளாக்கி விட்டானே என்று நினைத்தபோது கசப்புணர்ச்சியும், ஆத்திரமும் சண்முகலிங்கத்தின் மனதினுள்ளே வெடித்துச் சீறின.

'திருச்சிற்றம்பலம் என்னை ஒரு பழிகாரனுக்கிவிட்டு எங்கே நீ போய் விட்டாய்? எனக்கு இப்படியொரு நிலைமையை ஏற்படுத்தித் தருவதற்குத்தானா உன்னை என்னுடைய அறைக்கு நான் கொண்டுவந்து சேர்த்தேன்?'

× × × × × ×

சண்முகலிங்கத்தின் அறையில் திருச்சிற்றம்பலமும், இரத்தினசிங்கமும் சுவாரஸ்யமாக சண்முகலிங்கத்தோடு கதைத்துக்கொண்டிருந்தபோது மேற்கு மூலைச் சுவரில் இருந்த விநாயகர் படத்தையே பார்த்தவண்ணமிருந்த இரத்தினசிங்கம் புன்னகை ததும்பும் முகத்தோடு கேட்டான்:

''என்ன திருச்சிற்றம்பலம், 'விநாயகர் படத்தை மட்டுந்தான் வைத்து வணங்குகிறீர்? விநாயகர்தான் உமது இஷ்ட தெய்வமா?"

இடது கையினால் பின்முதுகைச் சுரண்டிக் கொண்டிருந்த திருச்சிற்றம்பலம் தலையைச் சற்று வளைத்துச் சுவரிலிருந்த விநாயகர் படத்தைச் சிலகணங்கள் பார்த்து விட்டு உரத்த குரலைத் தணித்தபடி சொன்னான்;

''உண்மைதான், விநாயகர்தான் என் இஷ்ட தெய்வம். ஏனென்றால் விநாயகரும், நானும் ஒரே மாதிரித்தான். விநாயகருக்குத் திருமணமே ஆகவில்லை, எனக்கும் அப்படித்தான். விநாயகர் பருத்த உடலுடையவர். ஆனால் சிறிய எலியே அவருக்கு வாகனம். அந்தச் சிறிய எலிதான் பருத்த உடலைச் சுமக்கின்றது. அதுபோலவே வாழ்க்கையில் கனமான சுமைகளை நானும் சுமக்கின்றேன்.''

அவன் விரக்தியோடு சொன்னதைக் கேட்ட சண்முகலிங்கம் கடகட வென்று சிரித்தான். ஏறு நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே திருச்சிற்றம்பலம் மௌனமாயிருந்தான்.

இரத்தினசிங்கம் சில கணங்கள் பேசாதிருந்தான், பிறகு தன் கையிலிருந்த புத்தகத்தின் பக்கமொன்றைப் பிரித்தபடியே திருச்சிற்றம்பலத்தைப் பார்த்தான்.

''எதிலும் விரக்தி கொள்ளவேண்டாம். உன்னைப் போலத்தான் உலகிலேயே பலகோடி மக்கள் நசுக்கப்படுகின்றுர்கள், தனித்திருக்கவில்லை நீங்கள், உங்களைப்போன்ற மக்களின் இயக்கத்தோடு உங்களை நீங்கள் பிணைத்துக்கொள்ளுங்கள்.''

குறி பார்த்துப் பாயும் துப்பாக்கிக் குண்டுகள் போலச் சீறின அவன் வார்த்தைகள்; ''இந்தப் பக்கத்தை ஒருமுறை படியும்.'' இடது கையினுல் முதுகைச்சுரண்டி விட்டு அவனுடைய கையிலிருந்த புத்தகத்தை வாங்கி வாசித்தான் திருச்சிற்றம்பலம். 'ஒன்றை நீங்கள் உணரவேண்டும். என்னைப் போன்றவர்கள் அந்தக் காலத்தில் தனியாட்களாக இருந்தோம்; சமுதாயத்தின் மாற்ருந் தாய்ப் பிள்ளைகளாக இருந்தோம். நீங்களோ இப்போது லட்சக்கணக்கில் இருக்கின்றீர்கள். தனது பலத்தை உணர்ந்து வைத்துள்ள ஒரு தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். உங்களை நசுக்குகின்ற கொடுமைகளை யெல்லாம் துகள் துகளாக அழித்தொழித்துப் பிரகாசமான வாழ்வைக் கட்டியெழுப்ப ஒன்று சேருங்கள்! உலகம் உங்களுக்கே உரியது.'

திருச்சிற்றம்பலம் அதைப் படித்துவிட்டு ஒன்றுமே பேசாது சண்முகலிங்கத்தையும், இரத்தினசிங்கத்தையும் பரிதாபத்தோடு பார்த்தபடி எழுந்து அறை மூலைக்குப் போனுன்.

அன்றைக்கு அவன் எழுந்துபோன அதே மூலை இன்று வெறுமையாகிக் கிடப்பதைப் பார்த்த சண்முகலிங்கம் பெருமூச்சொன்றை உதிர்த்தான். அப்போது இரவு மூன்று மணி ஆயிருக்கும். மனப் படபடப்பால் உறக்கம் வராதபோதும் அவனுடைய கண்கள் அரைகுறையாக மூடிக்கொண்டு கெஞ்சின. அறையில் நிறைந்த வெளிச்சம்தான் அவனுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. வெளிச்சம் உமிழும் முன் விளக்கையே பார்த்தபடி இருந்தான்...... திடீரென்று யாரோ சிலர் அவனை மாங்குளத்திற்கு அங்கிருந்து அழைத்துச் சென்ருர்கள். மாங்குளத்திற்கும், முல்லைத்தீவிற்குமிடையே இடைத் தூரம் முப்பது மைல்கள்தான், ஆனல் அந்த வேகமும் எவ்வளவு சீக்கிரத்தில் அந்தக் காரினுல் கடக்கப்பட்டுவிட்டது. மாங்குளம் புகையிரத நிலையத்தில் சண்முகலிங்கம் இறங்கியதுதான் தாமதம் திருச்சிற்றம்பலத்தின் தாயும், அன்னலெட்சுமியும், விநாயகமூர்த்தியும் ஓவென்று அலறினுர்கள். 'அண்ணனைக் கொன்று விட்டாயே' 'என் செல்லத்தைக் கொன்றுவிட்டாயே' என்ற அழுகையின் பிரலாபம் எங்கும் விம்மியது. சண்முகலிங்கம் ஒன்றுமே பேசவில்லை. புகையிரதத் தண்டவாளங்களைப் பார்த்தான். என்ன கோரம்! புகையிரதச் சக்கரங்கள் திருச்சிற்றம்பலத்தின் உடலைத் துவைத்து நசுக்கியிருந்தன, கழுத்துத் துண்டிக்கப்

பட்ட முண்டத்தின் கைகால்கல் சலூத சிதறித் தண்டவாளத்தில் அரைந்து இரத்தமும் எலும்புத் துண்டுகளுமாய் விசிறிக் கிடந்தன. திருச்சிற்றம் பலத்தின் தலைமட்டும், உருக்குலையாமல் இரத்தம் தோய்ந்து தொங்கும் கழுத்துச் சதையோடு கற்களிடையே தனித்துக்கிடந்தது, சண்முகலிங்கத் தின் இதயம் அடைத்தது. அடக்க முடியாத வேதனையோடு நெஞ்சைப் பொத்திக்கொண்டான்...... அதற்கு மேலே தாங்கமுடியாத திகிலோடு, வியர்வை பொங்கும் உடலோடு சண்முகலிங்கம் துள்ளியெழுந்தான், என்ன கோரக் கனவு!

தான் கண்டது கனவென்றறிந்த நிம்மதியிலே முக வியர்வையைத் துடைத்துக்கொண்டு சண்முகலிங்கம் எழுந்தபோது கதவை வெளியே யாரோ படபடவென்று தட்டினர்கள்.

× × × × × ×

கதவைத் திறந்த சண்முகலிங்கம் திகைத்துப்போய் நின்றுவிட்டான்!

அவன் முன்னே திருச்சிற்றம்பலம், இரத்தினசிங்கத்தோடு நின்ருன்.

சண்முகலிங்கத்தின் திகைப்புக் கலந்த மௌனத்தைத் திருச்சிற்றம் பலமே கலைத்தான்:

''என்ன பேசாமலே நிற்கிறீர்?''

திகைப்புக் குலையவில்லை சண்முகலிங்கத்திற்கு. ''என்ன நீர்... நீர்... எங்கே போய்... எப்படி?''

''பயப்பட வேண்டாம். நான் தான் திருச்சிற்றம்பலம் உயிரோடு திரும்பி வந்துவிட்டேன்.''

தான் மாங்குளத்திற்கு பஸ்ஸில் ஏறியதைச் சொல்லிவிட்டுத் திருச் சிற்றம்பலம் தொடர்ந்தான்.

''உண்மையாகவே இன்று தற்கொலை செய்துகொள்வதற்காகத் தான் நான் இங்கிருந்து மாங்குளத்திற்கு பஸ்ஸிலே சென்றேன். என் தற்கொலை முயற்சிக்கு என்ன காரணம் தெரியுமா?... அது ஒரு சுயந லத்தின் தோல்வியினுல் ஏற்பட்டது... இதற்காக நான் வெட்கப்படுகின் றேன். இன்று பகல் எனக்கு ஒரு கடிதம் வந்தது. விநாயகமூர்த்தியைப் பற்றியது அக்கடிதம். எனது தங்கச்சி எழுதியிருந்தாள். எனது தம்பி விநாயகமூர்த்தி யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு எங்கோ போய் விட்டானும்... இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் என் வாழ்க்கையின் கனவே சரிந்துவிட்டதாய் நான் உணர்ந்தேன்...... என்னுடைய குடும்பச் சுமையை நானே இதுவரை சுமந்திருந்தேன்... விநாயகமூர்த்தியை ஏதா வது ஒரு வேலையில் சேர்ப்பது, அவன் உழைப்பையும் சேர்த்துத்தான் என் தங்கச்சிக்குத் திருமணம் செய்து வைப்பது...... (தயக்கக் குரலில்) பிறகு என் வாழ்விற்கும் ஒருத்தியைத் தேடிக்கொள்வது, இதுதான் என் நீண்டநாள் திட்டமாக இருந்தது. இதனுல்தான் விநாயகமூர்த்தியை

மேலே படிக்கவிடாமல் ஏதாவது தொழிலுக்கு போகும்படி வற்புறுத்திக்கொண்டிருந்தேன்... ஆனால் நேற்றுக் காலையில் வந்த கடிதம் என் கற்பனைகளையே தகர்த்தது. விநாயகமூர்த்தி வீட்டைவிட்டுப்போனால் நான்தான் வாழ்நாள் பூராவும் குடும்பச் சுமையைச் சுமக்க வேண்டும். தங்கச்சிக்குத் திருமணம் செய்து முடித்தபின் அம்மாவைப் பார்ப்பதற்குத் தொடர்ந்து உழைக்கவேண்டும். நானும் மற்றவர்கள்போல திருமணம் செய்து குழந்தை குட்டிகளோடு வாழும் வாழ்வு எனக்குக் கிடையாதா ஒன்றாகிவிடுமோ என நினைத்தபோது எனக்கு வாழ்வே வெறுத்தது... நிம்மதியற்ற தொடர் வாழ்வைவிடத் தற்கொலை நல்லது என்ற முடிவிற்கு வந்தேன்...... தற்கொலை செய்யும் முடிவோடு மாங்குளம் செல்லும் பஸ்ஸில் ஏறிக்கொண்டேன். பஸ்ஸில் ஏறி இருந்துகொண்டே என் நெஞ்சில் உள்ளவர்கள் ஒவ்வொருவரையும் மறக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன்... எல்லோரையும் மறக்கமுடியுமென்று தோன்றிற்று. இவரது நினைவோ (இரத்தினசிங்கத்தைச் சுட்டிக்காட்டி) அகற்ற முடியாத ஒன்றாகிவிட்டது. பஸ்ஸில் போகும்போது இருபுறமும் பார்த்துக்கொண்டிருந்தேன். வயலில் நிறைய விவசாயிகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்... அவர்களைப்பற்றியும் இரத்தினசிங்கம் சொன்னது என் நினைவிற்கு வந்தது. இந்த உலகம் உழைக்கின்ற எங்களுக்கே, என்று நான் பல முறை கூட்டங்களில் தொழிலாளிகள் கூறக் கேட்டிருக்கின்றேன். பிறகு நான் கோழைபோலப் புகையிரதத்தின் முன் விழுந்து சாவதா என நினைத்துக்கொண்டேன். ஆனால் என் மறுமனம் தற்கொலைக்கே தூண்டியது. இரவில் பதுங்கிப் பதுங்கித் தண்டவாளத்திலிருந்து புகையிரதம் வருவதைக் காத்திருந்தேன்... இருளின் நடுவே தொலைவில் ஒளியொன்று துலங்கி ஜொலித்தது. என் நெஞ்சில் பல எண்ணங்கள் புரண்டன. இரத்தினசிங்கத்தின் குரல் மாறி மாறிக் கேட்டது. நான் தனியாளில்லை, துணையுள்ளவன். இத்துணையோடு, இலட்சக்கணக்கானவர்களின் பலத்தோடு புத்துலகை ஆக்கி மகிழ்வாய் வாழமுடியும் என்ற எண்ணம் என் நெஞ்சில் இருளிடையே ஒளியெனத் தோன்றிற்று... நான் ஆழச் சிந்தித்தேன்; தொலையில் புகையிரதம் கூவியது... உறுதியான முடிவுடன் என் தற்கொலை முயற்சியைத் தூக்கியெறிந்துவிட்டு புதிய மனிதனாய்த் திரும்பிவிட்டேன்!''

திருச்சிற்றம்பலத்தின் முகத்திலே புதிய ஒளி துலங்கிற்று; இலேசான புன்முறுவல் முகத்தை மலர்த்திற்று.

* இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்.
* தோழமையென்றொரு சொல்.
* ஜானகி.
* அந்தநாள் வர வேண்டும்
* திருச்சிற்றம்பலம்.

ஆகிய ஐந்து குறு நாவல்களின் தொகுதி.

செ. யோகநாதன்

# ஒளி நமக்கு வேண்டும்



விலை: மூன்று ரூபா.